அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 07-05-1993

## லலித்தின் மனைவி - காமினி அரசின் மேல் குற்றச்சாட்டு

லலித் அத்துலத் முதலியின் கொலைக்கு, சிறீலங்கா அரசே பொறுப்பு என, லலித் அத்துலத் முதலியின் மனைவியும், காமினி திசாநாயக்காவும் குற்றஞ்சாட்டியுள்ளனர். லலித் அத்துலத் முதலியின் மரணம் தொடர்பாக நடைபெற்ற விசாரணையில் சாட்சியமளித்த லலித் அத்துலத் முதலியின் மைத்துனர், "இந்தக் கொலைக்கு நான் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடத்தையே காரணமெனச் சந்தேகிக்கிறேன்." எனத் தெரிவித்துள்ளது. சட்டரீதியாக சிறீலங்கா அரசாங்கத்தின்மேல் குற்றம் சாட்டி, அத்துலத் முதலியின் குடும்பம் அளித்துள்ள வாக்குமூலமாக உள்ளது.

### பிரேமதாசா கொலை

# தானே உருவாக்கிய சூழ்நிலைக்கு தானே பலியாகிவிட்டார்

## புலிகளுக்கு எவ்வித சம்பந்தமுமில்லை

– லோரன்ஸ் திலகர்



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம், சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலையில் விடுதலைப் புலிகளுக்கு எவ்வித சம்பந்தமுமில்லையென ஆணித்தரமாக மறுத்துள்ளது. பிரேமதாசாவிற்கு ஏராளமான எதிரிகள் உண்டென்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். அத்துலத் முதலியின் இறப்புக்கு பிரேமதாசா காரணமாக இருந்ததாகக் குற்றஞ்சாட்டிய எதிர்க்கட்சியினரோ அல்லது அத்துலத் முதலிக்கு விசுவாசமான இராணுவத்தினரோ கூட இதனை ஒழுங்கு செய்திருக்கலாம். பிரேமதாசா தானே உருவாக்கிய சூழ்நிலைக்கு தானே பலியாகிவிட்டார் என்பதே உண்மையாகும்.

இது ஒரு தற்கொலை வெடிச்சம்பவமாக இருப்பது கூட ஆச்சரியமல்ல. பிரேமதாசாவினால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களில் எவராவது அவரைக் கொலை செய்வதற்கு தனது உயிரைப் பணயம் வைக்க முன்வந்திருக்கலாம். தீவின் தென்பகுதியில் அறுபதாயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்கள் கொடூரமாக கொல்லப்பட்டது ஒரு சாதாரண விடயமல்ல என்பதனையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். தென்பகுதியில் ஏராளமான இடங்களில் மக்கள் வெடிகொளுத்தி அவரின் மரணத்தை கொண்டாடியதையும் நாம் அவதானிக்க வேண்டும். எனவே, தற்கொலை தொழில்நுட்பம் என்ற காரணங்களைக் காட்டி விடுதலைப் புலிகளைக் குற்றஞ்சாட்டுவதில் அர்த்தமில்லை.

அரசாங்க மாற்றங்களோ - அரசியல் தலைவர்களின் மறைவுகளோ தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பெரிதான மாற்றங்கள் எதனையும் கொண்டுவருவதில்லை என்பதை கடந்த 40 ஆண்டு கால வரலாறு தெரிவிக்கின்றது. காரணம் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதம் நன்கு புரையோடிப் போயுள்ளதேயாகும். எனவே ஜனாதிபதி பிரேமதாசாவின் மரணத்தின் பின்னரும் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் புரிந்துகொண்டு அதனடிப்படையில் சமாதான, சௌஜன்ய ரீதியில் பிரச்சனையைத் தீர்வுக்குக் கொண்டு வரக்கூடிய அரசியல் தலைமை சிங்கள மக்களிடையே உடனடியாகத்

தொடர்ச்சி 14ம் பக்கம் ....





மிகப்பட்ட தமிழீழப் பிரதேசங்களில் தொழிலாளர் தினமான மேதினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

### உணவு விநியோகத்தை

# மேலும் மட்டுப்படுத்த ஸ்ரீலங்கா முயற்சி

யாழ். குடாநாட்டுக்கான உணவு விநியோகத்தை மேலும் மட்டுப்படுத்துவதன் மூலம் பட்டினிநிலையைத் தோற்றுவித்து, நிர்ப்பந்தத்தை உருவாக்கி, தமிழர்கள்மேல் தாம் விரும்பிய தீர்வைத் திணிக்கலாம் என சிறீலங்கா அரசு முயன்று வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மக்களுக்கு உணவும், பொருளாதார நடவடிக்கைகளுக்குரிய வாய்ப்பும், போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்ய வேண்டியது ஒவ்வொரு அரசாங்கத்தினதும் கடமை என்பது சர்வதேச நியதி. தமிழ்மக்களை தமது நாட்டுப் பிரஜைகள் என சிறீலங்கா அரசாங்கம் கூறிக்கொள்ளும் வரை இவற்றை சிறீலங்கா அரசாங்கம் செய்தே ஆகவேண்டும். இல்லையேல் தமிழ் மக்களுடைய இறைமையை தமிழர்களிடமே விட்டுவிட்டு விலகிக்கொள்வதே ஏற்புடைய செயல். இதனைவிடுத்து தமிழர் தாயகத்தின்மேல் தாம் நடாத்தும் ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு பக்கத்துணையாக, மக்களை பட்டினி போட்டு வதைக்க முற்படுவது நீண்ட நாட்களுக்கு சர்வதேச சமூகம் அனுமதிக்காது.

#### சர்வதேச பிரதிநிதிகள் திருப்பி அனுப்பப்பட்டனர்

சமீபத்தில் முக்கிய கூட்டம் ஒன்றில் கலந்துகொள்வதற்காக பலாலி ஊடாக யாழ்ப்பாணம் வர முயற்சித்த நான்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை ஊரடங்குச் சட்டம் எனக் காரணம்கூறி சிறீலங்கா அரசு திருப்பி அனுப்பியுள்ளது. சிறீலங்கா அரசாங்கம் மேற்கொ

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



## வினை விளை காலம்

இலங்கைத் தீவில், சிறீலங்காவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியும், சிறீலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவும் ஒரு வாரத்துள் சிங்கள பௌத்த பேரினவாதத்தால் இலங்கையில் உருவாக்கப்பட்ட பயங்கரவாதத்திற்குப் பலியாகியுள்ளனர். தாங்களே நீரூற்றி வளர்த்த பேரினவாத பயங்கரவாதத்திற்கு தாங்களே பலியாகியதன் மூலம் சிறீலங்காவில் சிங்கள பௌத்த பேரினவாதப் பயங்கரவாதச் சக்தி தமிழர்களுக்கு மட்டுமல்ல சிங்களவர்களுக்கும் நாசவேலைகள் செய்வதை, உலகின் முன் நிரூபித்துள்ளனர்.

வல்பொல ராகுல தேரோவின் "பிக்குகளின் பாரம்பரியம் (1946), பௌத்த விசாரணைக்குழு வெளியிட்ட "புத்தமத மறுதலிப்பு" (1956) (THE BETRAYAL OF BUDDISHM -1956) ஆகிய நூல்கள் இலங்கைத் தீவில் பௌத்த சிங்கள பேரினவாதம் எனும் விசத்தை தூவின. இதன் அரசியல் முளையாக 1956 காலிமுகத் திடலில் தமிழ்ச் சத்தியாக்கிரகிகள் மீது பயங்கரவாதத்தை முதன்முதலில் கட்டவிழ்த்து விட்டனர். இதேவேளை சிங்களம் மட்டும் சட்டத்தின் தாயாக நின்று அதனை 1956ல் பிரசவித்த எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா, சர்வதேச ரீதியில் முகம் கொடுக்க முடியாமல் திண்டாடினார். இதனை ஈடு செய்வதற்காக "மாவட்ட சபைகள்" என்னும் தொடர் அத்தியாயத்தை தமிழ்த் தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வாக முன்வைத்த, பண்டா -செல்வா ஒப்பந்தத்தில் பண்டாரநாயக்கா கையெழுத்திட்டார். கையெழுத்திட்ட மை உலருமுன்பே, சிங்கள மயமாக்கலின் தந்தையான ஜே. ஆர். ஜயவர்த்தனா தலைமையில் பௌத்த பிக்குகள் காட்டிய எதிர்ப்புக்கு அடிபணிந்து, அவ் ஒப்பந்தத்தை பண்டாரநாயக்கா கிழித்தெறிந்தார். பண்டாரநாயக்காவால் நீரூற்றப்பட்ட பௌத்த சிங்கள பேரினவாதம் 1958 ஆனி -ஆடியில் பயங்கரவாதமாக உருவெடுத்து நாடுமுழுவதும் தமிழ் மக்களை இன அழிப்புச் செய்யும் இனக்கலவரமாக வெளிப்பட்டது. ஆயினும் எந்த பண்டார நாயக்கா பௌத்த சிங்கள பேரினவாதத்தை வளர்த்தெடுத்தாரோ அதே பண்டாரநாயக்காவை பௌத்த சிங்கள பேரினவாதம் 1959 ஐப்பசி 26ல் கொலை செய்தது.

1958ல் முதன்முதலில் தமிழ் மக்கள்மேல் நடைபெற்ற பயங்கரவாதத்தை ஏவிவிட்ட சிங்கள பௌத்த பேரினவாதம், காலத்துக்கு காலம் வெவ்வேறு நிகழ்ச்சிகளினூடாக அரச பயங்கரவாதத்தை தமிழ் மக்களின்மேல் ஏவிவந்தது. 1960ல் சத்தியாக்கிரகிகளை வதைத்தமை; 1965ல் டட்லி -செல்வா ஒப்பந்தத்திற்கு எதிராக ரத்தக்களரி ஏற்படுத்தியமை போன்ற பல்வேறு அரச பயங்கரவாத நடவடிக்கைகள் நடைபெற்றுவந்தன. 1972ல் அரச பயங்கரவாதத்தின் துணையுடன் சிங்கள பௌத்த குடியரசு அரசியலமைப்பு தமிழர்கள்மேல் திணிக்கப்பட்டு அவர்கள் நாடற்ற தேசிய இனமாக்கப்பட்டனர். சிறீலங்கா பொலிஸ் இராணுவமாகத் தொழிற்பட்டு தமிழர்களை வேட்டையாடியது.

இதையடுத்து 1978ல் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி என்ற போர்வையில், சிறீலங்கா பாராளுமன்றத்தின் சட்டவாக்கம், சட்ட அமுலாக்கம், நிர்வாகம் அனைத்தையும் வலுவேறாக்கமின்றி தனதாக்கிக் கொண்ட ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் பாதுகாப்பு அமைச்சராக லலித் அத்துலத் முதலியும், பிரதம அமைச்சரான ரணதுங்க பிரேமதாசாவும் பதவியேற்றனர்.

பிரேமதாசா, பௌத்த சிங்கள பேரினவாதம் 1978முதல் நடாத்தத் தொடங்கிய தமிழ்த் தேசிய இன அழிப்பு, தமிழர் தாயக அபகரிப்பு, தமிழர் மூலவள ஒழிப்பு, கல்வி-கலாச்சார-சமய ஒடுக்குமுறைகள், வேலை வாய்ப்பு பறிப்பு போன்ற மனிதாபிமானமற்ற கொடுமைகளையும் அரச பயங்கரவாதத்தினையும் ஜனநாயக வழியில் நியாயப்படுத்தும் பணியையும் சர்வதேச சமூகத்தின்முன் மூடி மறைக்கும் பணியையும் பிரதமர் என்ற பெயரில் செவ்வனே நிறைவேற்றி வந்தார்.

பாதுகாப்பு அமைச்சரான அத்துலத் முதலி சிங்கள பௌத்த பேரினவாதத்தின் இராணுவ ரீதியான வெளிப்பாட்டுக்கு வடிவும் உருவும் அளித்தார். தமிழர் தாயகத்தையும், தமிழ்த் தேசியத்தையும் இராணுவ ஒடுக்குமுறை மூலம் கபளீகரம் செய்யும் இனஅழிப்புப் பணிக்கு தலைமை தாங்கினார். தமிழ்ப் பொதுமக்கள் மீதான யுத்தத்தை ஆரம்பித்து குண்டு வீச்சுக்களால் மக்களையும் உடைமைகளையும் அழித்தொழித்ததுடன், பீதியூட்டல் யுத்தமெனும் உளவியல் யுத்தத்தையும் தமிழர் சமுதாயத்திற்கு மேல் தொடுத்தார். இதன் மூலம் சர்வதேச யுத்த விதிகளுக்கு எதிராக மக்கள் மேல் போரை நடாத்திய லலித், இந்திய இராணுவத்தினதும் இந்திய மத்திய அரசினதும், தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்தொழிக்கும் கபடமிகு திட்டத்திற்கு பக்கதுணையாகி நின்றார். இவரது தமிழ் மக்களுக்கு எதிரான இப்போக்கினால்தான் புலேந்திரன், குமரப்பா உட்பட பன்னிரண்டு வீரவேங்கைகள் தற்கொடையாகினர் என்பதை யாவரும் அறிவர். பல்லாயிரம் தமிழ் மக்களின் மரணத்திற்கும் தமிழ் மக்களின் பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டதுக்கும் அத்துலத் முதலி நிர்வாகத் தலைமை ஏற்றார். பிரேமதாசாவின் கூற்றுப்படி அத்துலத் முதலியே யாழ்ப்பாண நூலகத்தை எரித்து விலைமதிப்பற்ற தமிழ் நூல்களும், சுவடிகளும், அறிவியல் கலாச்சார சமய சரித்திர நூல்களும் தீக்கிரையாகக் காரணமாக இருந்தார்.

பிரேமதாசா-அத்துலத் முதலி காலத்தில்தான் தமிழர்கள் மீது மனித உரிமைக்கு எதிரான ஒடுக்குமுறைகள் உச்சக்கட்டத்தை அடைந்தன. சுருக்கமாகக் கூறினால் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் இரு தீ நாக்குகளாக அத்துலத் -பிரேமதாசா விளங்கினர். பிரேமதாசா ஜனாதிபதி ஆனதும் தந்திர முறைகள் மூலம் தமிழ் மக்களை அடிமைப்படுத்த முயன்றார். உணவை ஆயுதமாக்கல், மக்களைத் தடுத்து வைத்து முற்றுகையிடல், பொருளாதாரத் தடை என்ற பெயரில் மக்களை நோயாலும் பட்டினியாலும் கொல்லுதல் போன்ற மக்களுக்கு எதிரான போரை நடாத்தி வந்தார். அரசியல் தீர்வில் நம்பிக்கை போல் நடித்து இராணுவத் தீர்வால் முடிவு காணும் கபட நாடகம் ஆடிவந்தார். ஆயினும் ஆதிக்க வெறி, பதவி ஆசை போன்றவற்றின் தூண்டலால் அத்துலத் - பிரேமா அரசியல் எதிரிகளாக மாறினர். இருந்தபோதிலும் இவர்களின் தமிழின அழிப்பு, இன ஒடுக்கல் ஆக்கிரமிப்பு உணர்வு, தமிழர் தாயக கபளீகரம், தமிழர்களின் பாதுகாப்பு அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகளை சிதைத்தழித்து தமிழர்களை அநாதைகளாக்கும் நோக்கு போன்றவற்றில் இருவரும் முன்னைய அதே பேரினவாத உணர்வையே கொண்டிருந்தனர்.

இந்நிலையில் சிங்கள பௌத்த பேரினவாதம் மீண்டும் தனது பயங்கரவாதத்தின் இலக்காக, லலித்தை முதலிலும், பிரேமதாசாவை அடுத்தும் கொலை செய்துள்ளது.

இது சிங்கள மக்கள் சிந்திக்க வேண்டிய நேரம். பௌத்த சிங்கள பேரினவாதம் தமிழ் மக்களுக்கு எதிரான பயங்கரவாத சக்தி மட்டுமல்ல, ஆதிக்க வெறியையும், பதவி ஆசையையும் ஈடு செய்வதற்கு என்றுமே துணை நிற்கும், துணைநிற்கப் போகின்ற இராஜ தந்திரமுமாகும்.

எனவே இந்த பௌத்த சிங்கள பேரினவாதத்தின் கூர்மை மழுங்கடிக்கப்படும்வரை தமிழர் மட்டுமல்ல சிங்களவர்களும் இலங்கைத் தீவில் நிம்மதியாக வாழ முடியாது. இதுவே இலங்கைத் தீவின் நவீன வரலாறு புகட்டும் பாடம். ■

# அத்துலத் முதலியின் இறுதி ஊர்வலமன்று

- விமானத்திலிருந்து கண்ணீர்ப்புகை பிரயோகம்
- பொலிஸ் வாகனங்கள் தீக்கிரை
- புத்த பிக்குவின் சிலை தகர்ப்பு முயற்சி
- அத்துலத் முதலியின் ஆதரவாளர் கலகம்

அத்துலத் முதலியின் உடல் தகனத்திற்காக எடுத்துச் செல்லப்பட்ட அன்று மாலை கொழும்பில் கலகம் மூண்டது. இராஜகீய மாவத்தை முதல் கனத்தை வரையுள்ள பகுதிகள் கலகத்திற்கு இலக்காகியுள்ளன. கறுவாத் தோட்ட பொலிஸ் நிலையம் கல்வீச்சுக்கு இரையானதுடன் அருகில் நிறுத்தப்பட்டிருந்த பொலிஸ் ஜீப் வண்டியும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. மேல் மாகாண, மாகாணசபையின் முதலமைச்சரின் கட்டடம் உட்பட ரொரிங்டன் சதுக்கத்திலுள்ள பல கட்டடங்களும் கல்வீச்சுக்கு உள்ளாகியதாகத் தெரியவருகிறது. கைவிரல் அடையாளங்களை பதிவு செய்யும் அலுவலகத்திற்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த நான்கு பொலிஸ் வாகனங்களும் எரியூட்டப்பட்டுள்ளது. தீயணைக்கும் படையினைச் சேர்ந்த பலகோடி ரூபா மதிப்புள்ள தீயணைக்கும் வாகனமும் கலகக் காரர்களால் எரியூட்டப்பட்டது.

கனத்தை மயானத்தில் ஊர்வலம் நுழைந்ததும் விமானத்திலிருந்து விமானப்படையினர் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசத் தொடங்கியதாகத் தெரிய வருகிறது. மயானம் ஒன்றில் ஈமக்கிரிகைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் கண்ணீர்ப் புகைக்குண்டு வீசப்பட்டது இலங்கை வரலாற்றில் இதுவே முதல் தடவை எனச் சொல்லப் படுகிறது.

இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் "பிரேமதாசாவைக் கொல்", "பிரேமதாசாவைக் கொல்" என்று சத்தமிட்டுக்கொண்டு சென்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் இவ்வூர்வலத்தில் காணப்பட்டார்கள். ஆத்திரமிகுதியில், சிறீலங்கா பிரதம மந்திரியின் காரியாலயமும் இக்கூட்டத்தினரின் தாக்குதலுக்குட்பட்டதாக சில செய்திகள் வெளியாகியுள்ளன. பண்டார ஞாபகார்த்த மண்டபத்திற்கு முன்னால் உள்ள, அரசாங்க சார்பு விகாராதிபதியின் கீழுள்ள விகாரை ஒன்றும் கூட்டத்தினரின் தாக்குதலுக்குள்ளானதாகவும் பௌத்த பிக்குவான குணபன்று தேரோவின் சிலையையும் தகர்க்க முயற்சிகள் நடந்ததாகவும் தெரியவந்துள்ளது.

### பாதுகாப்பு கொடுபடவில்லை

ஊர்வலத்திற்கு அனைத்துப் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்படும் என்று சிறீலங்கா அரசாங்கமும், உதவிப் பொலிஸ் மாஅதிபரும் உறுதியளித்திருந்தபோதும் ஊர்வலத்திற்கு போதுமான பாதுகாப்பு ஏதும் வழங்கப்படவில்லையாம். கடைமைக்கென கொழும்புக்கு அழைக்கப்பட்ட மேலதிக பொலிசார் 2000 பேரும் அரசாங்க கட்டடங்களைக் காக்கவே பயன்படுத்தப்பட்டார்கள் எனக் கூறப்படுகிறது.

இக்கலவரத்தில், இருவர் கொல்லப்பட்டு நாற்பது பேர் காயமடைந்ததாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. இக்கலவரத்தின்போது, சிறீலங்கா அரசாங்கத்தின்மேல் சிங்கள மக்களுக்கு உள்ள வெறுப்பு அப்பட்டமாக வெளிப்பட்டுள்ளது. இராணுவமும் பொலிசும் கூட்டாக கலகம் அடக்கும் பணியில் ஈடுபட்டதுடன் ஊரடங்குச் சட்டமும் பிறப்பிக்கப்பட்டது. ஆயினும் கொழும்பில் நடைபெற்ற சம்பவங்கள் பௌத்த பேரினவாதத்தின் மேலும் சிறீலங்கா அரசின் செயற்பாடுகள் மேலும் சிங்கள மக்களுக்கு உள்ள அதிருப்திகளை வெளிப்படுத்தியுள்ளதாக விமர்சகர்கள் கூறுகின்றனர். ■

# அத்துலத்முதலியின் கொலை

# இதற்கான பொறுப்பை அரசே ஏற்கவேண்டும்

**– காமினி திசாநாயக்கா**

கடந்த ஏப்ரல் மாதம் 23ம் திகதி வெள்ளிக்கிழமை லலித் அத்துலத் முதலி சுட்டுக் கொல்லப்பட்டார். மாகாணசபைக்கான தேர்தல் பிரச்சாரம் ஒன்றில் உரையாற்றிக் கொண்டிருந்த இவரை யாரோ அண்மையில் இருந்து சுட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவரைக் கொன்றவர்கள் யார் என்று கண்டுபிடிப்பதில் பல குழறுபடிகள் இதுவரை நடந்துள்ளன. அறிக்கைகளும் மறுப்புக்களும் பின்வாங்கல்களும் என்று கொலையாளி யாரென்று அறிவதில் மர்மமே நிறைந்துள்ளது. துப்புத்துலக்குவதில் உதவி செய்ய விசேட ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிசாரின் உதவி நாடப்பட்டுள்ளது. எனினும் விசாரணைகளை முன்னின்று அவர்கள் நடத்தப்போவதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துலத் முதலி அவர்கள் கொல்லப்பட்டது வெள்ளிக்கிழமை. அவரைக் கொன்றதாக சந்தேகப்படுபவரது உடல் கண்டெடுக்கப்பட்டது சனிக்கிழமையன்று. அவ்வுடலுடன் இருந்த அடையாள அட்டையில் இருந்த புகைப்படத்திற்கும் உருவத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என சிறீலங்காப் பொலிஸ் மாஅதிபர் அறிவித்தது திங்கட்கிழமையன்று. இதற்கிடையில் கொலைசெய்தவரது பெயர், ஊர், வயது போன்ற விபரம் எல்லாவற்றையும் வெளியிட்டு, விடுதலைப் புலிகள்தான் இவர் என நிரூபிக்கப்பட்டுவிட்டதாக சிறீலங்காவின் தொலைக்காட்சி நிறுவனமான ரூபவாகினி அறிவித்தது. ஆனால், திங்கட்கிழமை சந்தேக நபர் தமிழரா இல்லை சிங்களவரா என ஒன்றுமே தெரியவில்லை என்று பொலிஸ்மாஅதிபர் அறிவித்தார்.

கொலை நடந்த அடுத்த நாள் காலை கூட்டம் நடந்த இடத்திற்கு அண்மையில் குண்டுக் காயங்களுடன் கூடிய உடலொன்றை பொலிசார் கண்டெடுத்தனர். அத்துலத் முதலியைக் கொன்றவர் இவர்தான் என்று DUNF கட்சி (ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி) யின் அமைப்பாளர் A.J. பிரேமதாசா அடையாளம் காட்டியிருந்தார். இவர் அடையாளம் காட்டிய சமயம் செய்தியாளர்கள் சிலரும் கூட இருந்தனர்.

ஆனால், தான் அப்படி அடையாளம் காட்டவில்லை என அவர் தமது கட்சியினர்க்குத் தெரிவித்துள்ளதாக கட்சியின் துணைத் தலைவர் காமினி திசாநாயக்கா தெரிவித்துள்ளார். அத்துடன், கொலை நடந்த பின்னர் கட்சி ஆதரவாளர்கள் கூட்டம் நடந்த இடத்தைச் சுற்றிப் பார்த்தபோது உடல் எதனையும் அவர்கள் காணவில்லை எனவும் காமினி கூறியுள்ளார்.

சிறீலங்கா தொலைக் காட்சிக் கூட்டுத்தாபனமான ரூபவாகினி தனது செய்தியில் விடுதலைப் புலிகள் தான் கொலைக்குப் பொறுப்பு எனக் கூறியிருந்தது. ஆனால், லலித்தின் கொலைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலகம் தனது அறிக்கையில் ஆணித்தரமாக மறுத்திருந்தது. அந்த அறிக்கையில், பிரேமதாசா அரசின் விடுதலைப் புலிகளின் மீதான குற்றச்சாட்டு அநாவசியமானதெனவும், தனது அரசியல் எதிரியைக் கொலை செய்வதற்கு யார் சூத்திரதாரியாக இருந்தார் என்பதை மக்கள் தெளிவாக அறிவர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கிடையில், கூட்டம் நடந்த அன்று பாதுகாப்பு ஏற்பாடுகள் குறைவாகவே இருந்தன என்றும், அதனால் கொலைக்கான பொறுப்பை அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் காமினி திசநாயக்கா கூறியுள்ளார். வேண்டும் என்றே அரசினால் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறைக்கப்பட்டிருந்தன என்று தமது ஆதரவாளர்கள் கருதுவதாயும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

விசாரணையில் உதவி செய்ய ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிசாரை சிறீலங்கா அரசு வரவழைத்துள்ளது. கொலைக்கான ஆதாரங்களைக் கண்டுபிடிப்பதில் மட்டுமே இவர்கள் உதவி செய்வார்கள் என்றும் விசாரணையை முன்னின்று மேற்கொள்ளமாட்டார்கள் என்றும் இலண்டன் ஸ்கொட்லண்ட் யார்ட் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துலத் முதலியின் கொலையைத் தொடர்ந்து ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே பெரிய அதாவடி தாக்குதல்களும் தோன்றியிருந்தது. ஒருவரை ஒருவர் தாக்கி அறிக்கை வெளியிட்டிருந்தனர். பிரேமதாச அரசின் கொலைக்கும்பல் ஒன்றே இந்தக் கொலையைச் செய்தது என்று காமினி கூறினார். கொழும்பில் ஆயுதத்துடன் வெளியே சுதந்திரமாக நடமாடித் திரியும் பிரேமா ஆதரவு E. P. D. P யிடம் இருந்து ஆயுதங்களைக் களையவேண்டும் என்றும் எதிர்க் கட்சியினர் கேட்டிருந்தனர்.

தொடர்ச்சி 3ம் பக்கம் ....

## "விடுதலைப் புலியைச் சார்ந்தவரல்ல" - புலனாய்வாளர்

சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலைக்கு காரணமாக இருந்தவர் எனச் சந்தேகிக்கப்படும் நபர், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சார்ந்த உறுப்பினர் என்பதாக அடையாளம் கண்டு கொள்ளப்பட்டிருக்கிறது என்று கூறும் தகவலை, சிறீலங்கா குற்றப் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த லயனல் குணதிலக மறுத்துள்ளார். இத்தகவலை அகில இந்திய வானொலி வெளியிட்டுள்ளது.

### பிரேமதாசா கொலையாளியைக் கண்டுபிடிக்க தமிழ்க்குழுக்களின் உதவி

சிறீலங்கா ஜனாதிபதியைக் கொன்றவர் யார் என்று கண்டு பிடிக்கும் வேலையில் ஈடுபட கொழும்பு தமிழ்க்குழுக்களின் உதவியை சிறீலங்கா அரச அதிகாரிகள் அணுகியுள்ளனர். சிறீலங்கா அரசுக்கு சார்பாக நடக்கும் இம்மூன்று குழுவினரும் அரச அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க கொழும்பிலுள்ள தமிழ் மக்கள் தங்கியிருக்கும் பகுதிகளுக்குள் திடீரென உட்புகுந்து தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றன. சிறீலங்காப் பொலிசாருடன் இணைந்து இக்குழுவினர் நடத்தும் தேடுதல் நடவடிக்கைகளால் அப்பாவித் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ■

## பதில் ஜனாதிபதியாக டி. பி. விஜயதுங்க

■ சுதந்திர சதுக்கத்தில் இறுதிக் கிரியை

சிறீலங்காவின் பதில் ஜனாதிபதியாக, டிங்கிரி பண்டா விஜயதுங்க பதவியேற்றுள்ளார். சிறீலங்காவின் பிரதம மந்திரியாக, பிரேமதாசாவின் கீழ் பணியாற்றிய இவரை ஐக்கிய தேசியக் கட்சி சிறீலங்காவின் ஜனாதிபதியாக 1995 ஜனவரி 2ம் திகதி வரை பதவி வகிக்க அனுமதித்துள்ளதாகத் தெரிய வருகிறது. சிறீலங்காப் பாராளுமன்றத்தில் தனக்கு இருக்கும் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டு இதற்கான பாராளுமன்ற அங்கீகாரத்தைத் தாம் பெற்று விடலாமென ஐக்கிய தேசியக் கட்சி தலைமைப்பீடம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், பிரேமதாசாவின் இறுதிக்கிரியைகள் சுதந்திரச் சதுக்கத்தில் 6-5-93 வியாழன் அன்று அரசாங்க மரியாதைகளுடன் நடாத்தப்படுமென, இது தொடர்பாக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழு அறிவித்துள்ளது. ஏ.சி.எஸ். ஹமீட், சிறிசேன குரே, பெஸ்டஸ் பெரேரா, வீரசிங்க மல்லிமாராச்சி ஆகியோர் இக்குழுவில் இடம்பெறுகிறார்கள்.

### இனக்கலவரப் பீதி

சிறீலங்கா அரசாங்கமும், முப்படைத்தகவல் பிரிவுகளும் முறையான நீதி விசாரணைக்கு முன்பு வெளியிடும் பொறுப்பற்ற பேச்சுக்களால் கொழும்பில் இனக்கலவரம் ஏற்படுவதற்கான பீதி காணப்படுகிறது. பெருந்தொகையான தமிழ் இளைஞர்கள் காரணமின்றிக் கைதாகி விசாரிக்கப்பட்டு வருகின்றனர். இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை, B B C செய்தியின்படி முப்பது தமிழ் இளைஞர்கள் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனரெனத் தெரியவருகிறது. அத்துடன் பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினர் கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் தமிழர்கள் மீது மனித வேட்டை நடாத்தி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

# ஐக்கிய தேசியக்கட்சி மேதின ஊர்வலத்தில் குண்டு வெடிப்பு

# சிறீலங்கா ஜனாதிபதி உயிரிழப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் மேதின ஊர்வலம், ஆமர் வீதியூடாகச் சென்று கொண்டிருக்கையில் மதியம் 12.45 மணியளவில், திடீரென ஏற்பட்ட குண்டுவெடிப்பில் சிறீலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா ஸ்தலத்திலேயே உடல் சிதறி உயிரிழந்ததாக, அன்றைய தினம் 4.00 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில், ஜனாதிபதியின் பத்திரிகைச் செயலாளர் இலான்ஸ் குரே பகிரங்கமாக அறிவித்தார்.

"குண்டு வெடிப்புச் சம்பவம் நடைபெற்ற இடத்தில் நானும் இருந்தேன். ஊர்வலத்திற்கு தலைமை தாங்கி வழிநடத்திச் சென்று கொண்டிருந்த ஜனாதிபதி பிரேமதாசா ஊர்வலத்தின் முன் நடந்து சென்றதுடன் ஊர்வலத்தில் கலந்து கொண்ட அமைச்சர்களுக்கும் பணிப்புரை வழங்கிக் கொண்டிருந்தார். என்னையும் அழைத்து சில விடயங்களைக் குறிப்பிட்டார். ஆமர் வீதிச் சந்திக்கு அருகில் ஊர்வலம் வந்துகொண்டிருந்தபோது, எனது மகள் தொலைபேசி மூலம் என்னுடன் தொடர்பு கொண்டார். அவருடன் இடஞ்சலின்றி பேசுவதற்காக அருகில் இருந்த தனியார் ஆஸ்பத்திரிப் பக்கமாகச் சென்றேன்.

அப்போது, பாரிய சத்தத்துடன் குண்டொன்று வெடித்தது. நான் உடனடியாக ஆமர் வீதிப்பக்கம் திரும்பிப் பார்த்தேன். அங்கு பலரின் உடல்கள் சிதறிக்கிடந்தன. நான் பார்த்தபோது ஜனாதிபதி அங்கு இருக்கவில்லை. அவர் தொடர்பாக எந்த விபரமும் தெரியவில்லை. பின்னர் தான், அவரும் அச்சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்டதை சிலமணி நேரத்தின் பின்னர் ஊர்ஜிதம் செய்யக்கூடியதாக இருந்தது. அவரது சடலம் பொலிஸ் சவக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. வேறு பல சடலங்களும் அங்கு எடுத்து வரப்பட்டன." என ஜனாதிபதியின் பத்திரிகைச் செயலாளர் தெரிவித்தார்.

### 'வெற்றி' தொப்பியுடன் ஜனாதிபதி

சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா, 'வெற்றி' -Victory என ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பச்சை நிறத் தொப்பியை அணிந்தவராக, ஊர்வலத்தின் முன்னணியில் சென்று கொண்டிருந்தார் எனவும், அவரைச் சூழ்ந்துவர அவரின் மெய்க்காப்பணியினரான விசேட அதிரடிப்படைப்பிரிவினர் வந்துகொண்டிருந்தனர் எனவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஊர்வலப் பதாகை ஒன்றை அகல விரித்து உயர்த்திப் பிடிக்கக் கேட்டதும், ஊர்வ[illegible] கைகளால் சைகை செய்ததும் அவரின் கடைசிச் செயல்களில் சில என பேசப்படுகிறது.

ஊர்வலம் ஆமர் வீதிச் சந்தியை அடைந்ததும் ஊர்வலத்தின் பாண்ட் வாத்திய இசைக்கும் மேலாக பயங்கர வெடிச்சத்தமொன்று எழுந்தது. மறுவிநாடி ஜனாதிபதியையோ அன்றேல் அவரின் மெய்க் காப்பாளர்களையோ அவ்விடத்தில் காணவில்லை. சிதறிய உடல்களும், சதைத் துண்டுகளுமே குவிந்து கிடந்தன. சில சதைத்துண்டுகள் கடைகளின் கூரைமேல் கூட ஒட்டி இருந்ததாகத் தெரியவருகிறது.

அவ்விடத்தில் நின்ற உயர் அதிகாரி ஒருவர், ஜனாதிபதிக்கு எதுவும் நேரவில்லை -அவர் பாதுகாப்பாக அவரின் மெய்க்காப்பாளர்களால் அழைத்துச் செல்லப்பட்டுவிட்டார் என அறிவித்ததையடுத்து ஊர்வலம் பாபர் வீதி, மற்றும் பண்டாரநாயக்கா வீதி வழியாக காலிமுகத் திடல் நோக்கிச் சென்றதாக செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதி மாளிகையில் இருந்தவர்களுக்குக் கூட என்ன நடந்தது எனத் தெரியாத நிலையில், அவர்கள் ஆஸ்பத்திரிகைகளுக்கு தொலைபேசி செய்து ஜனாதிபதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளாரா என விசாரித்தபடி இருந்துள்ளனர் எனவும், ஜனாதிபதி அணிந்திருந்த மோதிரமும் கைக்கடிகாரமும் அவரும் அக்குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டதை ஊர்ஜிதப்படுத்தியதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தில், கொழும்பு மத்தி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரோனி குணசிங்க, மற்றும் மூன்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் உட்பட பதினைந்து பேர் கொல்லப்பட்டதாகவும் 40 பேருக்கு மேல் காயப்பட்டதாகவும் பின்னர் அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி பிரேமதாசாவின் மெய்க்காப்பாளர் அணி முழுவதும் அழிக்கப்பட்டதினாலேயே, சில மணி நேரங்களுக்கு ஜனாதிபதிக்கு என்ன நடந்தது என்பதை ஊகிக்க முடியாமல் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

### முன்னுக்குப் பின் முரணான செய்திகள்

மோட்டார் சைக்கிளில் குண்டு பொருத்தப்பட்ட நிலையில், அதனை உருட்டி வந்த வாலிபர் ஒருவர் அம் மோட்டார் சைக்கிளை, ஜனாதிபதிக்கு அருகே வந்துகொண்டிருந்த பாதுகாப்பு வாகனத்துடன் மோதியதாக முதலில் செய்திகள் வெளியாகின. பின்னர், துவிச்சக்கர வண்டியில் டிரான்ஸிஸ்டர் வானொலிக்குள் குண்டை வைத்துக் கொண்டு, சைக்கிளை உருட்டி வந்த வாலிபர் ஒருவர் ஜனாதிபதிக்கு அண்மையில் வந்த 'ரேஞ்ச் ரோவர்' வாகனத்துடன் மோதியதால் குண்டு வெடித்ததாக மற்றொரு செய்தி வெளியாகியுள்ளது. அவ்விடத்தில் உடலின்றிக் கிடந்த தலை [illegible] ■

## தமிழர் கடத்தப்படுவதை தமிழ்க் குழுக்கள் மூடிமறைப்பு

வவுனியா நகரில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தொடர்ந்து மர்மமான முறையில் தமிழ்ப் பொது மக்கள் கடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இதேவேளையில் இராணுவமும் இதனுடன் இணைந்து இயங்கிவரும் தமிழ்க் குழுக்களும் இந்த ஆட்கடத்தல் நடவடிக்கையை மூடிமறைக்கும் செயலில் ஈடுபட்டுள்ளன.

இந்த ஆட்கடத்தல் நடவடிக்கை வெறும் பொய் என்றும் சில தீய சக்திகள் இப்படியான வதந்திகளைப் பரப்பி வருகிறார்கள் என்றும் இதுவரையில் மூன்று பேர் மட்டுமே காணாமல் போயுள்ளனர் என்றும் ரெலோ, புளொட் குழுக்கள் அறிக்கைகளில் தெரிவித்துள்ளன.

இக்குழுக்கள், கடத்தப்பட்டுக் காணாமல் போனதாகக் கூறப்படும் குறிப்பிட்ட மூன்றுபேரையும் யார் அல்லது எந்த அமைப்பு கடத்தியது என்றும் இவர்கள் தற்போது எங்கு வைக்கப்பட்டுள்ளனர் என்றும் விளக்குவதற்கு மறுத்துள்ளன.

ஆனால், வவுனியா நகரில் தற்போதும் மர்மமான முறையில் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் காணாமல் போகின்றனர் என்று செய்தி கிடைத்துள்ளது.

தமிழ்ப் பொலிஸார் சிலர் தமக்கு நெருங்கிய தமிழ் குடும்பத்தவரிடம் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டாம் என்று கேட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ■

## "செல்"லைப்பரீட்சித்த வாலிபர் பலியானார்

• பாலமோட்டையில் பரிதாபம்

வவுனியா மாவட்டத்திலுள்ள பாலமோட்டை கிழவிக்குளம் என்ற பகுதி வயல் வெளியில் காணப்பட்ட வெடிக்காத "செல்" ஒன்றை எடுத்துத் தட்டிப்பார்த்தபோது அது வெடித்ததில் இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார். மேற்படி சம்பவத்தில் மார்க்கண்டு மன்மதராஜா (வயது 18) என்ற இளைஞரே மரணமடைந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் இதே போன்ற ஒரு சம்பவத்தில் 4 மாணவர்கள் பலியாகியதும் 14 மாணவர்கள் காயமடைந்ததும் தெரிந்ததே. ■

## 827 மட்டக்களப்பு தமிழர் விசாரணை இன்றி சிறையில்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 827 தமிழ் இளைஞர்கள் தென் இலங்கைச்சிறைகளில் எதுவித விசாரணையுமின்றி அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று கொழும்பு நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

அதேசமயம் 1990ம் ஆண்டில் வந்தாறுமூலை, கொட்டியார் பற்று, சந்துருக்கொண்டான், [illegible] ஆகிய பகுதிகளிலிருந்து கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டவர்களின் கதி என்ன என்பது குறித்து தெரியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் பெரும்பாலும் இறந்துவிட்டதாகக் கருதப்படுவதாகவும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ■

## அத்துலத் முதலி....

பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய போது மறைந்த சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா அவர்கள், என்னைக் கொலைகாரன் என்று குற்றம் சாட்டுபவர்கள் உண்மையான கொலைகாரனைக் கண்டறிய கண்ணாடியில் தங்களைப் பார்க்க வேண்டும் என்று கூறியிருந்தார். பிரேமதாசாவை, காமினி குற்றம்சாட்டிய மறுநாளே அரச உரிமைச் செய்தித்தாள் DUNF கட்சியின் துணைத்தலைவர் காமினியே தமது கட்சித் தலைவரைக் கொலை செய்தார் என்று செய்தி வெளியிட்டன.

வியாழக்கிழமையன்று செய்தியாளர் மாநாடொன்று அமைச்சரவையால் கூட்டப்பட்டது. இதில் அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டுள்ள விடயங்கள் பற்றித் தெரிவிக்கப்பட்டது. அத்துலத் முதலியின் கொலை விசாரணைக்கு அதில் முக்கியத்துவம் தரப்பட்டிருக்கவில்லை. பாஸ் உத்திகளை அதிகரிப்பது எப்படி என்பதே முதல் முக்கிய விடயமாகக் கொள்ளப்பட்டிருந்தது. செத்தல் மிளகாய் ஏற்றுமதியை தடைசெய்வது எப்படி என்று ஆராய்வது அடுத்த முக்கிய நடவடிக்கையாக இருந்தது.

அத்துலத் முதலியின் கொலை விசாரணை பற்றி ஏன் பேசவில்லை என அமைச்சர் ஒரு[illegible]வரை. திருமதி ஒருவர் வற்புறுத்திக் கேட்டபோது அதுபற்றி நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்று [illegible] சக அமைச்சராக இருந்த அவரிடமிருந்து பதில் வந்தது. இதற்கிடையில் லலித் கொலை விசாரணையில் நீதிபதி டி சொய்சா மரண விசாரணையை நடத்திய ரோனி குணசிங்க (உயர் பொலிஸ் அதிகாரி) போன்றவர் ஈடுபட்ட விசாரணைகள் நீதியாக நடைபெறும் என்று தாம் நம்பவில்லை என S. L. F. கட்சியும் L. S. S. P கட்சியும் தெரிவித்துள்ளன. ■

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# எத்தனை இழப்பு நேரிடினும் உரிமைக்காகப் போரிடுவோம்

■ துணைவேந்தர் துரைராஜா

நாம் இரண்டாம்தர பிரஜைகளாக வாழச் சம்மதித்தால் இப்படியான மரணங்கள் நடைபெற மாட்டாது. நாம் முதல் தர பிரஜைகளாக வாழப் போராடுகின்ற போது இதுபோல மரணங்கள் நிகழத்தான் செய்யும். எனவே நாம் எல்லோரும் ஒன்றிணைந்தால் மட்டுமே இப்படியான மரணங்களை ஒழிக்கலாம் என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜா தெரிவித்தார்.

கிளாலியில் கடற்படைத் தாக்குதலில் மரணமடைந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் ஞா. வில்சன் நிக்கலஸின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நாம் சுதந்திரத்திற்காக 1958 ஆம் ஆண்டு தொடக்கம் பல இன்னல்களை அனுபவித்து வந்துள்ளோம். 1983 ஆம் ஆண்டிற்கு பின்னர் எமது இழப்புக்கள் வித்தியாசமான வடிவில் அமைந்துள்ளன.

இந்த இழப்புக்களுக்கு முகம் கொடுக்க அஞ்சியே சிலர் எமது பிரதேசங்களை விட்டு வேறு இடங்களில் இரண்டாம்தரப் பிரஜைகளாக வாழ்ந்து வருகின்றனர். நாம் அப்படி வாழத்தயாராக இல்லை. எத்தனை இழப்புக்கள் வந்தாலும் தொடர்ந்து எமது உரிமைப் போராட்டத்தை முன்னேடுத்துச் செல்லவேண்டும் என்றார்.

இவரைத் தொடர்ந்து உரையாற்றிய பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி), தாய் நாட்டையும், தாய் மொழியையும், தாயையும் நேசித்தவர்களுக்கு இப்படியான மரணம் நிகழத்தான் செய்யும். தாய் நாட்டை நேசித்ததால் தான் இந்த மாணவன் இங்கு இருந்தான். தாய் மொழியை நேசித்ததால் தான் தமிழ் மொழியில் கல்வி பயின்றான். தாயை நேசித்ததால் தான் தாயைப் பார்க்கச் சென்றான் என்றார்.

இவரைத்தொடர்ந்து பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுகையில் கிளாலிக் கடல் தற்போது செங்கடலாகமாறி வருகின்றது. இதனை நாம் ஒன்றிணைந்தால் மட்டுமே தடுக்கமுடியும் என்றார். ■

## குண்டு வீச்சுக்கு மத்தியில் மன்னாரில் மகளிர் தின விழா

விமானக்குண்டு வீச்சின் மத்தியிலும் மன்னாரில் அனைத்துலக பெண்கள் தின நிகழ்வுகள் சிறப்புற நடைபெற்றுள்ளன.

மகளிர் தின எழுச்சிப் பேரணி பெரிய பண்டிவிரிச்சான் பாடசாலையிலிருந்து, பாடசாலை மாணவியரின் பாண்ட் வாத்திய இசையுடன் கோசங்களை எழுப்பியவாறு புறப்பட்டது. இந்த ஊர்வலத்தில் பெருமளவு மாணவ, மாணவிகள், பெண்கள், ஆண்கள் கலந்து கொண்டனர். மாலை ஆறு மணியளவில் மடு மாதா விளையாட்டு மைதானத்தை ஊர்வலம் சென்றடைந்தது.

மன்னார் மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி தேன்மொழி தேசியக் கொடியை ஏற்ற மன்னார் மாவட்டச் சிறப்புத் தளபதி திரு. ஜான் மங்கள விளக்கை ஏற்றி வைத்தார்.

மகளிர் அமைப்பின் சார்பில் சுதர்மினா, மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் கோ. கணேஸ், சாமிநாதன், பாலசிங்கம், குணாதி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. ■

## காரைநகரில் நிவாரணம் தவிர வருமானம் எதுவுமில்லை

காரைநகரில் சிறீலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் சிக்கிய ஏழு தமிழ்க் குடும்பங்களின் தாய்மார்கள் கப்பல் மூலமாக திருகோணமலை வந்திறங்கி தரை மார்க்கமாக யாழ்ப்பாணம் பயணமானார்கள்.

வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் இந்தத் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகள், மற்றும் உறவினர்களைச் சந்திப்பதற்காக யாழ் சென்றார்கள். இவர்கள் தங்களைச் சந்தித்த பத்திரிகையாளர்களுக்கு தமது வேதனையைத் தெரிவிக்கையில்:-

நிவாரண உணவுப் பொருட்களைத் தவிர தமக்கு எந்த வருமபடியும் இல்லையென்றும் பணக் கஷ்டத்தினால் தேங்காயைப் பிழிந்து எண்ணெய் ஆக்கிப் பிழைத்து வருகின்றோம் என்றும் -

மருத்துவ வசதியீனத்தால் கர்ப்பிணித் தாய்மார்கள் பெரும் கஸ்டத்தை எதிர்கொண்டுள்ளனர் என்றும் -

யாழ் நகர் சென்று எமது பிள்ளைகளுடன், உறவினர்களுடன் நிலையாகத் தங்கிவிடுவதே தமது நோக்கம் என்றும் -

நாம் கடற் படையின் பயணிகள் கப்பலிலேயே திருக்கோணமலையில் வந்திறங்கினோம். எம்முடன் கொழும்பு செல்லும் பயணிகளும் வந்திறங்கினர் என்றும் அவர்கள் தெரிவித்தனர். ■

# 5320 நாட்கள் அவசரகால ஆட்சி கின்னஸில் பதியக் கூடிய சாதனை

சிறீலங்கா சுதந்திரம் பெற்றபின் 5320 நாட்கள் அவசரகால நிலையில் ஆட்சி நடத்தி கின்னஸ் சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. ஒருவர் அண்மையில் சிறீலங்காப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவசரகாலப் பிரேரணை மீதான விவாதத்தில் பேசிய அவர், சிறீலங்கா சுதந்திரம் பெற்றபின்னர் 45 வருட காலத்தில் 15 வருடங்களாக நாட்டை அவசர காலச் சட்டத்தின் கீழ் ஆட்சி செய்திருக்கிறோம். ஐக்கிய தேசியக் கட்சி இந்நாட்டை 29 வருடங்கள் ஆட்சி செய்துள்ளது. தொடர்ந்தும் ஆட்சி செய்கிறது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், அதன் கூட்டணிக் கட்சிகளும் நாட்டை சுமார் 16 வருடங்கள் ஆட்சி நடத்தியுள்ளன.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி அதன் 16 வருட ஆட்சிக் காலத்தில் 5 வருடங்களுக்கும் அதிகமான காலத்தை அவசர காலச் சட்டத்தின் கீழேயே நிர்வகித்தது. மறுவார்த்தைகளில் சொல்வதானால் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அதன் ஆட்சிக் காலத்தின் மூன்றின் ஒரு பகுதியை அவசர காலச் சட்டத்தின் கீழ் நிர்வகித்தது எனலாம்.

அதேபோலவே ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் 29 வருட ஆட்சிக் காலத்தில் சுமார் 10 வருடகாலத்தை அவசர காலச்சட்டத்தின் கீழ் நிர்வகித்திருக்கிறது. இதை மறுவார்த்தையில் கூறுவதாயின் ஐ.தே.கட்சி அதன் ஆட்சிக் காலத்தில் மூன்றில் ஒரு பகுதியை அவசர காலத்தின் கீழேயே நிர்வகிக்கிறது எனலாம்.

மொத்தமாக சுதந்திரத்தின் பின்னர் 5320 நாட்கள் இந்த நாடு அவசரகாலச் சட்டத்தின் கீழ் இருந்திருக்கிறது. இவ் அவசர காலச் சட்டத்தை நீடிப்பதற்காக பிரேரணையை 175 தடவைகள் இதுவரை பாராளுமன்றத்தில் விவாதித்ததன் மூலமாக நாம் சரித்திரமொன்றையும் உருவாக்கியிருக்கிறோம். உலகசாதனை பதியப்படும் கின்னஸ் புத்தகத்தில் இது குறிக்கப்பட வேண்டும். இதற்காக நாம் பெருமைப்பட வேண்டும்.

இலங்கையில் மேலாக 'அவசர கால ஜனநாயகம்' என்ற புதிய அரசியல் முறையையும் நாம் அறிமுகப்படுத்தியிருக்கிறோம். கடந்த 15 வருட காலமாக இந்த அவசரகால ஜனநாயகம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. பிரெஞ்சு ஜனாதிபதி டிகோல் கூட தனது நாட்டை 5 மாத காலத்திற்குத் தான் அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆட்சி செய்தார். அயல் நாடான இந்தியாவிலேயே இந்திரா காந்தி இரண்டு வருடங்கள்தான் அவசர கால நிலையில் ஆட்சி நடத்தினார்.

கடந்த 15 வருட காலத்தில் இலங்கையில் சுமார் 70 ஆயிரம் பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இதில் 75 வீதமானவர்கள் வட கிழக்கைச் சேர்ந்தவர்கள் என்றார். ■

# வவுனியா கடைகளில் போலி அம்பிசிலின்

அம்பிசிலின் பெயரில் போலிக் குளிகைகளை உற்பத்திசெய்து தனியார் வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு விடப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. அம்பிசிலின் கூட்டுக் குளிகை ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட வடிவத்தில் இம் மருந்துப் பொருட்கள் வவுனியா வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது. இந்தக் குளிகையின் உள்ளே வெள்ளை நிறத்திலான வேறொரு திண்மப் பொருள் அடைக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

போலி மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்யும் கோஷ்டி ஒன்று இம்மருந்துப் பொருட்களையும் உற்பத்தி செய்து விற்பனைக்கு விடுவதில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா நகர வர்த்தக நிலையங்களில் பெருமளவில் காணப்படும் இந்த அம்பிசிலின் கூட்டுக்குளிகைகள் சுகாதார ஆய்வுக்கு உட்படுத்தியிருப்பதாக அறியவருகிறது. ■

## இராணுவ ஆஸ்பத்திரிக்கு மருந்து வழங்கப் பணிப்பு

வெலிஓயா பகுதியில் (மணலாறு) இருக்கும் இராணுவ முகாமில் உள்ள வைத்தியசாலைக்கு தேவையான மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ வசதிகளை உடனடியாக அளிக்க வேண்டும் என சிறீலங்காவின் சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இரண்டாயிரம் இராணுவத்தினரைக் கொண்ட இம்முகாமை அண்மையில் சுற்றிப் பார்வையிட்ட அமைச்சர் தேவையான மருந்துப் பொருட்களை உடனடியாக வழங்கும்படி தனது அமைச்சு அதிகாரிகளுக்கு பணித்ததோடு இப்பிரதேசத்தில் கடமையாற்றும் டாக்டர்கள் இராணுவ முகாமின் தேவைகள் பற்றி விசேட கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். ■

# வவுனியா பொலிஸ் நிலையம் தமிழ்த் தாய்மார் முற்றுகை

காணாமல் போய்விட்ட தங்கள் பிள்ளைகளை மீட்டுத் தரும்படி கோரி தமிழ்த் தாய்மார்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்ட சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றது.

சமீபத்தில் வவுனியா நகரில் இராணுவ [illegible] இருபது இளைஞர்கள் காணாமல் போய்விட்டனர். இச்செய்தி வெளிவந்தவுடன் வவுனியா நகரமே பரபரப்பாகியது. எங்கும் பதற்றம் நிலவியது.

குறிப்பிட்ட இருபது தமிழ் இளைஞர்களில் பலர் இரவு நேரத்தில் இராணுவ வாகனத்தில் வந்தவர்களால்தான் கடத்தப்பட்டுள்ளனர்.

தமது பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர் நகரில் உள்ள பொது இடங்களில் வேதனை தாங்கமுடியாமல் பெரிதாக வாய்விட்டு அழுதுள்ளனர். இதன் பின்னர் பெற்றோர் அனைவரும் இணைந்து பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு உடனடியாக தமது பிள்ளைகளை விடுதலை செய்யும்படி கோரியுள்ளனர்.

இந்த தமிழ் இளைஞர்கள் காணாமல் போய்விட்ட சம்பவத்திற்கும் தமக்கும் சம்பந்தமில்லை எனத் தெரிவித்த பொலிசார் இதுபற்றி தாம் விசாரணை செய்வதாகத் தெரிவித்துள்ளனராம்.

பத்திரிகைக்குக் கிடைத்த தகவல் ஒன்றின்படி கைது செய்யப்பட்டு காணாமல் போய்விட்டவர்களில் யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒருவரும் அடங்குவார் என்று தெரியவருகிறது. சிறீலங்கா இராணுவத்தில் உள்ள விசேட [illegible] பிரிவினரே இந்த இளைஞர்களைக் கடத்தியுள்ளனர் [illegible]. காணாமல் போய்விட்ட இளைஞர்களின் கதியை அறியமுடியாமல் அப்பாவிப் பெற்றோர்கள் அலைந்து திரிகின்றனர். ■

வவுனியா - கொழும்பு ரயிலில்

## மோசடியும் பணப்பறிப்பும் தொடர்ந்தும் நடக்கிறது

கொழும்பிலிருந்து புடவை வகைகளை வாங்கிக் கொண்டு கிளிநொச்சிப் பகுதியில் வியாபாரம் செய்துவரும் இளைஞர் ஒருவர் வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி ரயிலில் செல்லும்போது இரண்டு இளைஞர்களால் மிரட்டிக் கடத்திச் செல்லப்பட்டு 12 ஆயிரம் ரூபா பணமும், பொருட்களும் பறித்துச் செல்லப்பட்ட சோதனை மிக்க வேதனையான சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது: [illegible]

[illegible]

[illegible] ■

## ஜெயலலிதாவின் சொத்து இரண்டு மடங்காகியது.

தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் சொத்து மதிப்பு 92-93 ஆம் ஆண்டில் 58 மில்லியன் இந்திய ரூபாவாகும் என வருமான வரி இலாகா மதிப்பிட்டுள்ளது. 91-92 ஆம் ஆண்டின் இவரின் சொத்து மதிப்பு 26 மில்லியன் ரூபாவாக இருந்தது. ஒரு வருட காலத்தில் 33 மில்லியன் ரூபா சொத்து அதிகமாகியுள்ளது. இத் தகவல் இந்திய பாராளுமன்றத்தில் வெளியாகியுள்ளது. ■

# கற்பூரக்குண்டு விவகாரம்: நாசகார சதிவேலை அம்பலம்

■ கைதாகிய இருவர் விசாரணையின்பின் விடுதலை

கற்பூரத்துண்டுகளின் நடுவே C-4 வெடிமருந்துகளை வைத்து பொதி செய்யப்பட்ட அதியுயர் சக்தி வாய்ந்த வெடிகுண்டு தொடர்பாக விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்ட இருவர் விபரம் புரியாத நிலையில் உளவாளிகளால் பயன்படுத்தப்பட்ட பொதுமக்கள் என விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளதாக விடுதலைப் புலிகளின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

இதேவேளை இவ்விசாரணையின் முடிவு எமது மக்களுக்கு நல்ல பாடமாக அமைய வேண்டும் எனவும், இது விடயமாக மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் விடுதலைப் புலிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இக்கற்பூர வெடிகுண்டு தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பின் விபரம் பின்வருமாறு:-

கற்பூரத்துண்டுகளின் நடுவே C-4வெடிமருந்துகளை வைத்து பொதி செய்யப்பட்ட அதியுயர் சக்திவாய்ந்த வெடிகுண்டு ஒன்றை விடுதலைப் புலிகள் கண்டுபிடித்துள்ளனர் என கடந்த மாதம் பத்திரிகைகள் மூலம் செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே.

அதுபற்றி விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதுவரை நடந்த விசாரணையில் இருந்து கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான திரு. கந்தையா கோபாலகிருஸ்ணன் (கோபால் தொல்புரம், சுழிபுரம், யாழ்ப்பாணம்) இச்சம்பவங்களின் முழுவிபரமும் தெரியாமல் அதிக இலாபமீட்டும் வியாபாரம் என்ற போர்வையில் உளவாளிகளால் பயன்படுத்தப்பட்ட பொதுமகன் எனத் தெரியவருகின்றது. இவ் வெடிகுண்டின் தன்மையினையும் ஆபத்தினையும் தெரிந்து கொண்டு அப்பொருட்களை வடபகுதிக்குள் எடுத்துவருவதில் நேரடியாக சம்பந்தப்பட்டவரான மாரிமுத்து கந்தசாமி (கந்தன் வயது 42, பெண்டிக்கோஸ் வீதி, தூசைப்பிள்ளையார் குளம், வவுனியா) என்பவர் தொடர்ந்து விசாரணைக்கு உள்ளாகி வருகின்றார்.

இச்செய்தியானது முதலில் வெளியிடப்பட்டபோது வெடி பொருள் இருந்து எடுத்த இடம் வட்டக்கச்சி என தவறுதலாக வெளியிடப்பட்டது. உண்மையில் வட்டக்கச்சி பிரதான வீதியில் உள்ள கோவிந்தன் கடைச்சந்தி இரண்டாம் வாய்க்கால் என்ற கிராமத்தில் உள்ள இராசரத்தினம் ஜெயரத்தினம் (மாதா) என்பவரது வீட்டிலேயே குறிப்பிடப்பட்ட வெடிப் பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட இராசரத்தினம் ஜெயரத்தினம், கிளிநொச்சிக்கும், ஓமந்தைக்குமிடையில் வழமையான வாடகைக்கு மோட்டார் சைக்கிள் ஓட்டுபவராக தொழில் செய்து வந்தார். வியாபாரிகள் என்ற போர்வையில் அவருடன் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்ட கந்தசாமியும் மற்றவரும் அவரது குடும்ப நண்பர்கள் என்ற அளவிற்கு தொடர்பினை நெருக்கமாக்கிக் கொண்டனர்.

தனது பொருட்களை கிளிநொச்சியில் விற்பதால் அதிக லாபம் கிடைக்காது என்றும் சில நாட்கள் கழித்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லும்வரை அங்கேயே இருக்கட்டும் என்று கூறி அப்பொருட்களை இராசரத்தினம் ஜெயரத்தினம் (மாதா) என்பவரிடம் ஒப்படைத்துவிட்டு திரும்பிச் சென்றனர். குறிப்பிட்ட மாதா, பொருட்கள் அடங்கிய பையை திறந்து பார்த்தாராயினும் அவரால் வெடிமருந்தினை அடையாளம் காணமுடியவில்லை. வெடிமருந்து மணமற்ற, வெள்ளை நிறமான C4 ரகத்தைச் சேர்ந்தது என்பதனாலும் அது கவனமாக கற்பூரத்தினுள் சேர்த்து பொதி செய்யப்பட்டு காவடி மார்க் அடையாள லேபிள்களினால் ஒட்டப்பட்டு இருந்ததனால் அவரால் எதையும் வித்தியாசமாக அடையாளம் காணமுடியாமல் போய் விட்டது.

மேற்கண்ட விடயங்கள் குறிப்பிட்ட அனைவரையும் விசாரணை செய்ததன் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இவ்விடயத்தினை உற்று நோக்கும்போது இராசரத்தினம் ஜெயரத்தினம் (மாதா), கந்தையா கோபாலகிருஸ்ணன் (கோபால்) ஆகிய இருவரும் அதிக வருவாய் கிடைக்கும் என்ற நப்பாசையினால் இந் நயவஞ்சகர்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்பது தெரியவருகின்றது. அவர்கள் இருவரும் குற்ற மற்றவர்கள் என்ற முறையில் விடுதலை செய்யப்படுகின்றார்கள்.

உளவாளிகள் பற்றி எமது மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என அறியத்தருவதுடன் மாதா, கோபால் ஆகியோரது அனுபவங்கள் எமது மக்களுக்கு நல்ல பாடமாக அமைய வேண்டும் எனவும் மக்கள் இதுவிடயமாக விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம். -என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ■

## மாணவர்கள் தனிக்கல்வியுடன் ஒதுங்கிவிடக்கூடாது

■ துணைவேந்தர் துரைராஜா

யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் திரு. அ. துரைராஜா அவர்கள் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி உயர்தர மாணவர் மன்ற கையெழுத்துச் சஞ்சிகையான 'அரங்கம்' இதழுக்கு அளித்த செவ்வியிலிருந்து ஒருசில பகுதிகள் இங்கே தரப்பட்டுள்ளது.

* புத்தகங்களை மட்டுமே எந்நேரமும் படித்துக் கொண்டிருக்கும் சில மாணவர்கள் பற்றிய உங்கள் கருத்தென்ன?

மாணவர்களைப் பொறுத்தவரை அவர்கள் தனிக்கல்வியுடன் ஒதுங்கிவிடக்கூடாது. விளையாட்டு, சாரணியம், சமூக சேவை போன்றவற்றிலும் ஈடுபாடு உடையவர்களாக இருத்தல் வேண்டும். இவர்கள் உடலில் புத்துணர்வும் உள்ளத்தில் சமூக விழிப்புணர்வும் உள்ளவர்களாக இருந்தால்தான் சமூகத்திற்கு உதவக்கூடியவர்களாக வாழலாம். இது அவர்களுக்கு தேசப்பற்றினை நன்கு வளர்க்கும். விளையாட்டுக்களில் ஏற்படும் வெற்றி தோல்விகள் வாழ்க்கையில் ஏற்படும் எத்தகைய வெற்றி தோல்விகளையும் எதிர்நோக்கும் மனப்பக்குவத்தை ஏற்படுத்துகின்றது.

* இன்று உயர்கல்வி கற்கும் மாணவர்களைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

எங்கள் காலத்தில் பாடசாலை மாணவன் ஒருவன் ரியூசன் (Tution) எடுப்பது கண்டால், மற்றவர்கள் அவனைப் படிப்பில் குறைந்த மொக்கன் எனக் கேலி செய்வார்கள். ஆனால், இன்று ரியூசனுக்குப் போகாதுவிட்டால் வெட்கம் என்ற அளவிற்கு அது நாகரீகமாகிவிட்டது. அரசாங்கம் தமிழ் மாணவர்களை தரப்படுத்தல் மூலம் பல்கலைக் கழக அனுமதியில் குறைத்த காரணத்தால் மாணவர்கள் போட்டி மனப்பான்மையுடன் படித்துப் புள்ளிகள் பெறவேண்டியுள்ளது. இதற்காக ரியூசனை நாடவேண்டியுள்ளது.

* இன்று பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவர்கள் பட்டம் பெற்று வெளியேறும் போது அவர்களின் மனப்பாங்கு எத்தகையதாகவுள்ளதென கருதுகிறீர்கள்?

இங்கு 2000 பேர்வரை படிக்கின்றார்கள் 50 பேர் வரையிலானவர்கள் மட்டுமே சேவை மனப்பாங்கு உள்ளவர்களாக இருக்கின்றனர் எமது நாட்டைச் சேர்ந்த 1200க்கு மேற்பட்ட வைத்தியர்கள் இங்கிலாந்தில் உள்ளனர். அவர்கள் அங்கு வேலை செய்வதற்குப் பல காரணங்களைக் கூறுகின்றனர். அதே வேளை பிரான்ஸ் நாட்டு வைத்தியர்கள் இந்தநாட்டு மக்களுக்குச் சேவை புரிகின்றனர். நான் கேம்பிறிச் பல்கலைக்கழகத்தில் அரசாங்கத்தின் (மக்களின்) செலவில் கல்விகற்றேன். அங்கு எனக்கு கூடிய வருவாயுடன் வேலை கிடைத்த நேரத்தில் சுயநலம் கருதி நான் அங்கு நிற்கவில்லை. எமது மக்களுக்கு சேவை செய்வதற்காக உரிய நேரத்தில் திரும்பி வந்துவிட்டேன். ■

# வவுனியாவில் புதிய பாதுகாப்புமுறை

வவுனியாவில் புதிய பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஒன்றாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் தமது மோட்டார் சைக்கிளுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்து பொலிசாரிடம் ஒப்படைக்க வேண்டும். இவ்வாறு வவுனியா பொலிஸ் புதிய உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளது.

இதற்கிடையில் சிறீலங்காப் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பொலிசாரிடம் பதிவு செய்தவர்கள் மட்டுமே நிரந்தர குடியிருப்பாளராக வசிக்கமுடியும்.

இத்துடன் நகருக்கு வந்து செல்பவர்கள் தடைமுகாம்களில் பாஸ் பெற வேண்டும் என்றும் அறியப்படுகிறது.

வவுனியா நகரில் தங்கியிருந்து தொழில் புரிபவர்களுக்கு தற்காலிக 'பாஸ்' வழங்கப்படுகிறது. ■

# ரயில்பாதை விஸ்தரிப்பு: தமிழர் காணிகள் பறிப்பு

மட்டக்களப்பில் இருந்து பொத்துவில் வரையான ரயில் பாதை விஸ்தரிப்பினால் ஏராளமான தமிழ்க் குடும்பங்கள் வீடுகளையும், காணிகளையும் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு - பொத்துவில் ரயில் பாதை விஸ்தரிப்பு சம்பந்தமான வரைபடத்தின்படி முஸ்லீம் கிராமங்களூடான ரயில் பாதை கடற்கரையோரமாக அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கும் அதேசமயம் தமிழ்க் கிராமங்களுக்கூடான ரயில் பாதைகள் குடிமனைகளூடாக ஊடறுத்துச் செல்லுமாறு திட்டமிடப்பட்டுள்ளது.

ஒந்தாச்சிமடம், களுவாஞ்சிக்குடி, கோட்டைக்கல்லாறு, கல்லாறு, பெரியநீலாவணை போன்ற கிராமங்களில் அதிகமானோர் இவ்விதம் இருப்பிடங்களை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ■

# யாழ். போதனா வைத்தியசாலை தேவைக்கு பணம் கொடுத்து மருந்துக்கள்

யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் திரு. அ. துரைராஜா அவர்கள் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி உயர்தர மாணவர் மன்ற கையெழுத்துச் சஞ்சிகையான 'அரங்கம்' இதழுக்கு அளித்த செவ்வியிலிருந்து ஒருசில பகுதிகள் இங்கே தரப்பட்டுள்ளது.

* புத்தகங்களை மட்டுமே எந்நேரமும் படித்துக் கொண்டிருக்கும் சில மாணவர்கள் பற்றிய உங்கள் கருத்தென்ன?

மாணவர்களைப் பொறுத்தவரை அவர்கள் தனிக்கல்வியுடன் ஒதுங்கிவிடக்கூடாது. விளையாட்டு, சாரணியம், சமூக சேவை போன்றவற்றிலும் ஈடுபாடு உடையவர்களாக இருத்தல் வேண்டும். இவர்கள் உடலில் புத்துணர்வும் உள்ளத்தில் சமூக விழிப்புணர்வும் உள்ளவர்களாக இருந்தால்தான் சமூகத்திற்கு உதவக்கூடியவர்களாக வாழலாம். இது அவர்களுக்கு தேசப்பற்றினை நன்கு வளர்க்கும். விளையாட்டுக்களில் ஏற்படும் வெற்றி தோல்விகள் வாழ்க்கையில் ஏற்படும் எத்தகைய வெற்றி தோல்விகளையும் எதிர்நோக்கும் மனப்பக்குவத்தை ஏற்படுத்துகின்றது.

* இன்று உயர்கல்வி கற்கும் மாணவர்களைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

எங்கள் காலத்தில் பாடசாலை மாணவன் ஒருவன் ரியூசன் (Tution) எடுப்பது கண்டால், மற்றவர்கள் அவனைப் படிப்பில் குறைந்த மொக்கன் எனக் கேலி செய்வார்கள். ஆனால், இன்று ரியூசனுக்குப் போகாதுவிட்டால் வெட்கம் என்ற அளவிற்கு அது நாகரீகமாகிவிட்டது. அரசாங்கம் தமிழ் மாணவர்களை தரப்படுத்தல் மூலம் பல்கலைக் கழக அனுமதியில் குறைத்த காரணத்தால் மாணவர்கள் போட்டி மனப்பான்மையுடன் படித்துப் புள்ளிகள் பெறவேண்டியுள்ளது. இதற்காக ரியூசனை நாடவேண்டியுள்ளது.

* இன்று பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவர்கள் பட்டம் பெற்று வெளியேறும் போது அவர்களின் மனப்பாங்கு எத்தகையதாகவுள்ளதென கருதுகிறீர்கள்?

இங்கு 2000 பேர்வரை படிக்கின்றார்கள் 50 பேர் வரையிலானவர்கள் மட்டுமே சேவை மனப்பாங்கு உள்ளவர்களாக இருக்கின்றனர் எமது நாட்டைச் சேர்ந்த 1200க்கு மேற்பட்ட வைத்தியர்கள் இங்கிலாந்தில் உள்ளனர். அவர்கள் அங்கு வேலை செய்வதற்குப் பல காரணங்களைக் கூறுகின்றனர். அதே வேளை பிரான்ஸ் நாட்டு வைத்தியர்கள் இந்தநாட்டு மக்களுக்குச் சேவை புரிகின்றனர். நான் கேம்பிறிச் பல்கலைக்கழகத்தில் அரசாங்கத்தின் (மக்களின்) செலவில் கல்விகற்றேன். அங்கு எனக்கு கூடிய வருவாயுடன் வேலை கிடைத்த நேரத்தில் சுயநலம் கருதி நான் அங்கு நிற்கவில்லை. எமது மக்களுக்கு சேவை செய்வதற்காக உரிய நேரத்தில் திரும்பி வந்துவிட்டேன். ■

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# யுத்தத்தை முடித்து வைக்க சிங்களவர் விரும்புகின்றனர்

• 'லங்கா தீப'வின் கணிப்பீட்டு முடிவு

வடக்கு, கிழக்கு பிரச்சனை தொடர்பாக சிங்கள மக்கள் மத்தியில் தற்போது போதிய தெளிவுநிலை ஏற்பட்டுள்ளதாகவும், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரவே சிங்கள மக்கள் விரும்புகின்ற போதும் அரசாங்கமும் வெளிநாட்டுச் சக்திகளுமே இதனை விரும்பவில்லை என்ற கருத்து நிலவுவதாகவும் லங்கா தீப பத்திரிகை நடாத்தும் 'புதன் சந்திப்பு' என்ற பகுதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறுபட்ட மக்கள் மத்தியில் நடத்திய சந்திப்பின் அடிப்படையிலேயே இக்கருத்தை அப்பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இந்த யுத்தம் விரைவில் முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமேதவிர நீண்டு கொண்டு செல்லக்கூடாது. அரசாங்கம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாகக் கூறுகின்றது. ஆனால் யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கான ஆயுதங்களைச் செய்கின்றது. யுத்தத்தினால் பாதிக்கப்படுவது பொதுமக்களே ஆவர் என்று கருத்துத் தெரிவித்த ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக இன்னும் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

இந்த யுத்தம் தமிழர்களால் தேசப்பற்றுடன் ஆரம்பிக்கப்பட்டதாகும். வடக்கு, கிழக்கில் தமிழ் தலைவர்களினாலும், சிங்களத் தலைவர்களினாலும் ஏமாற்றப்பட்டுவந்த மக்கள் ஆயுதம் ஏந்தினர். எனவே முதலில் அடிப்படைப் பிரச்சனையைத் தீர்க்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்றார். தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டிய ஒன்றாகும். மறுக்கப்பட்டால் மேலும் ஆபத்து ஏற்படும் என்றார்.

இது தொடர்பாக ஒரு பௌத்த குரு கருத்துத் தெரிவிக்கையில், நிச்சயம் அரசாங்கம் இந்த யுத்தத்தில் வெற்றிபெற்றப் போவதில்லை என்றார். யுத்தத்தால் ஏற்பட்ட மரணங்களுக்கள் இறந்தவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களையே பெரிதும் பாதித்துள்ளது என்று ஒரு தாய் தெரிவித்துள்ளார். ■

# தமிழ் நாடும் திராவிட பற்றுணர்வும்

அந்தக் காட்டுக்கு சிங்கங்கள் தான் இராஜாக்கள். அழகிய வீரஞ்செறிந்த சிங்கங்கள் அவை. அங்குகுள்ள நரிகள் வரும்வரைக்கும் சிங்கங்கள் வீரம் நிறைந்தவைகளாகத் தான் இருந்தன.

நரிகள் சிங்கங்களுடன் ஒட்டும்போது சாதுக்களாகத்தான் இருந்தன. மிஞ்சுகின்ற என்புத் துண்டுகளுக்காகக் காத்துக் கிடந்தன. சிங்கங்களைப் பார்த்துப் பொறாமைப்பட்டன.

ஒருநாள் அழகிய சிங்கங்களைப் பார்த்து நரிகள் கூறின: இது என்ன பிடரி மயிர் அசிங்கமாக, நீண்டு சிலிர்த்து அழகற்று இருக்கின்றது. நரிகளாகிய எங்களைப் பாருங்கள். சிறிதாகவும், அளவானதாகவும் பின்பக்க மயிர் எத்தனை அழகாக இருக்கிறது, என்றன.

சிங்கங்கள் நம்பின; தங்கள் மயிரை ஒட்ட நறுக்கின.
மறுநாளும் நரிகள் சொல்லின:

'இதென்ன நகங்களும், பற்களும் கொடூரமாக, பேய் பிசாசுகளுக்கு இருப்பதுமாதிரி, எங்களைப் பாருங்கள் எவ்வளவு அழகான நகங்கள் பற்கள் என்றன. சிங்கங்கள் நம்பின. பற்களையும் நகங்களையும் பிடுங்கி எறிந்தன. பலமிழந்த, அவலட்சணமான சிங்கங்கள் ஆயின.

இப்போதெல்லாம் நரிகளின் ஏவல் செய்யும் சேவகர்களாக சிங்கங்கள் மாறிப் போயின. தங்கள் குலப்பெருமைகளை மறந்து போயின. எங்கும் நரிகளின் இராச்சியம்தான்.

திடீரென அந்தக் காட்டில் சிங்கக் குட்டி ஒன்று கர்ச்சித்தது. காடதிர்ந்தது. துள்ளிக் குதித்தது. நரிகள் நடுங்கின. அந்தச் சிங்கக் குட்டி தன் பிடரி மயிரை அழகு என்றது. நகங்களும் பற்களும் தன் பலமென்றது. தன் இனத்தைப் பழைய சிங்கங்களாக மாறும்படி குரல் கொடுத்தது.

மேலே கூறப்பட்டது ஒரு நீதிக்கதை இல்லை. பகுத்தறிவுத் தந்தை பெரியாரின் (ஈ. வே. இராமசாமி) வரவைத் தொடர்ந்து தமிழ்நாட்டு அறிஞர்கள் அவரைப் பார்த்த பார்வை இப்படித்தான் இருந்தது. வட இந்திய ஆதிக்கத்திற்குள் தம்மை அறியாது அடிமைப்பட்டு நின்ற திராவிடர்களை விழிப்படையச் செய்ய தந்தை பெரியார் போராடியதைத்தான் திராவிட அறிஞர்கள் இப்படிப் பார்த்தார்கள்.

உண்மைதான். அந்தச் சிங்கக்குட்டி தன் வாழ்நாளின் இறுதிக் காலம்வரை அதாவது கிழடாகி மரணிக்கும் வரை அந்தக் காட்டைக் கலக்கியது. நரிகளின் வாலை ஒட்ட நறுக்கி ஓட வைத்தது.

இது தமிழகம் கண்ட வரலாறு.

ஆனால், இதில் பரிதாபம் என்னவென்றால் அந்தக் கிழட்டுச் சிங்கத்தின் மரணத்தின் பின்பு, இதன் வாரிசுகள் திரும்பவும் தங்கள் மயிர்களை ஒட்ட நறுக்கிக் கொண்டன. பற்களையும், நகங்களையும் பிடுங்கி எறிந்தன. இப்போது நரிகள், எலும்புத் துண்டங்களைப் போடாதா என்று காத்து நிற்கின்றன.

தந்தை பெரியார் வட இந்திய ஆளும் வர்க்கத்திற்கு எதிராக இனமான உணர்வோடு போராடிய ஒரு பெரும் தலைவர். ஆனால் அவரின் பின்பாக தமிழ் நாட்டு மக்களை இனவுணர்வோடு வழிநடாத்திச் செல்ல ஒரு நல்ல தலைவன் தோன்றவில்லை. ஒரு சிலர் விதிவிலக்காக இருந்தாலும், அவர்கள் பெரும் மக்கட் செல்வாக்கைக் கொண்டிருக்கவில்லை. பெரியார் போன்ற தன்னலமற்ற தலைவர்கள் தோன்றாதுதான் தமிழ் நாட்டின் இன்றைய இழி நிலைக்குக் காரணமாகவும் உளது.

அன்று தொடக்கம் இன்று வரை பொதுவாகவே இந்திய மத்திய ஆளும் பீடமும், அதிகாரமும் இந்தி மொழி பேசுபவர்களின் கைகளிலேயே உள்ளது. இந்திக்காரர்கள் தம்மை மற்றைய மாநிலத்தவரை விட உயர்வாகவே கருதுகின்றனர். ஒட்டுமொத்த இந்தியர்களும், தங்களுடைய அடிமைகளாக இருக்க வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கின்றார்கள். இதன் ஒரு கட்டமாக இந்தி மொழியை இந்தியா முழுமைக்குமான பேசும் மொழியாக்க வேண்டும் என அவர்கள் விரும்புகின்றார்கள். இதற்கான முயற்சியில் அவர்கள் பலமுறை இறங்கினார்கள்.

**இம்மும்மொழிக் கொள்கையை எதிர்த்து தமிழகம் போர்க் கோலம் கொண்டது. கல்லூரிகள் அனைத்திலும் பெரும் போராட்டம் நடந்தது. உலகப் பொதுமொழியான ஆங்கிலத்தை ஏற்றுக் கொண்ட தமிழர்கள் இந்தி மொழியை தம்மீது திணிக்கப்படும் ஓர் ஆதிக்க வடிவமாகப் பார்த்தார்கள். இப்போராட்டங்களுக்கு தலைமை ஏற்று வழிநடாத்தியது பெரியாரும், அவரது கழகத் தொண்டர்களுமாகவே இருந்தார்கள். முடிவாக அன்று மத்திய அரசு தோல்வி கண்டது.**

**இதனிடையே தந்தை பெரியாரின் சீடர்களில் ஒருவரும் அவரது கொள்கைகளை தொடர்ந்தும் கடைப்பிடிப்பதாகக் கூறிவருபவரும், 1938ல் கல்லூரிப் பருவத்திலேயே இந்தி மொழித் திணிப்பை எதிர்த்துப் போராடியவருமான திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு. கருணாநிதி அவர்கள் இந்தப் பிரச்சனையில் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் நடுவில் நின்று விழிக்கின்றார்.**

**அ. தி. மு. க. விற்கும், காங்கிரசுக்குமான உறவு முடிவடைந்துவிட்டது என்னும் நிலையில் காங்கிரசாருக்கு எதிராக திராவிட உணர்வைத் தட்டி எழுப்ப இந்த அம்மையார் முயன்றார். இவ்வளவு நாட்களும் இனவுணர்வோ, திராவிட பற்றுணர்வோ இல்லாமல் காங்கிரஸ் கட்சியின் நெருங்கிய சகாவாக இருந்த செல்வி ஜெயலலிதா தமிழ் மக்களிடையே எழுந்த உணர்வில் தன் அரசியல் இராஜ தந்திர காய் நகர்த்தலைச் செய்தார்.**

**இத்தகையதோர் நிலைதான்; அரசியல் சுயநலம்தான்; தமிழீழத்தின் தலைவர்களில் ஒருவரான கிட்டுவும் அவர்களது தோழர்களும் கடலில், வட இந்திய ஆதிக்கப் பிடிக்குள் சிக்கி மரணத்திற்கு அருகில் நின்றபோது இந்தத் திராவிடத் தலைவர்களின் மௌனத்திற்குக் காரணமாக இருந்தது. எது எப்படியோ, தமிழ் நாட்டுத் தமிழர்களை வழி நடாத்தும் தலைவர்களாக தற்போது இந்தத் 'தலைவர்களே' இருக்கிறார்கள் என்பது கவலைக்குரிய உண்மை.**

தமிழீழ ஆவணகம்
Tamileelam Archive

இந்தி மொழித் திணிப்பை எதிர்த்துப் போராடிய மாநிலங்களில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கின்றது. காலத்திற்குக் காலம் வட இந்தியர்களால் ஏவப்பட்ட இந்தித் திணிப்பு எனும் இந்த நாசகாரத் திட்டத்தை முறியடிப்பதற்காக பெரியாரும், அவரது திராவிட கழகத் தொண்டர்களும் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது.

1938 இல் கல்லூரிகளில் ஏற்கனவே நடைமுறையிலிருந்த மாநில மொழியுடன், ஆங்கிலமும் கற்க வேண்டும் என்ற இரு மொழிக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தி இவ்விரு மொழிகளுடன் இந்தி மொழியையும் கட்டாயமாக கற்க வேண்டும் என்ற சட்டமூலத்தை மத்திய ஆளும் வர்க்கம் கொண்டு வந்தது. (அக்காலத்தில் வெள்ளையர்கள் இந்தியாவை விட்டு வெளியேறி இருக்கவில்லை. வெள்ளை ஆட்சிக்கு கீழ்ப்பட்ட நிர்வாக அலகு அந்த நேரத்தில் வட இந்தியர்களின் (காங்கிரஸ்) கைகளில் இருந்தது.)

இம்மும்மொழிக் கொள்கையை எதிர்த்து தமிழகம் போர்க் கோலம் கொண்டது. கல்லூரிகள் அனைத்திலும் பெரும் போராட்டம் நடந்தது. உலகப் பொதுமொழியான ஆங்கிலத்தை ஏற்றுக் கொண்ட தமிழர்கள் இந்தி மொழியை தம்மீது திணிக்கப்படும் ஓர் ஆதிக்க வடிவமாகப் பார்த்தார்கள். இப்போராட்டங்களுக்கு தலைமை ஏற்று வழி நடாத்தியது பெரியாரும், அவரது கழகத் தொண்டர்களுமாகவே இருந்தார்கள். முடிவாக அன்று மத்திய அரசு தோல்வி கண்டது.

அதன் பிறபாடு அரச உத்தியோகத்தர்கள் இந்தி மொழி கற்க வேண்டும் என்று வந்த சட்டமூலமும் தமிழகத்தில் தோன்றிய எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

இதில் வேதனை என்னவென்றால் இந்தி மொழித் திணிப்பிற்கு எதிராகத் தமிழகம் கிளர்ந்தெழுந்து போராடிய ஒவ்வொரு முறையும் இந்தி மொழித் திணிப்பை ஆதரித்து தமிழ்நாடு காங்கிரசார் குரல் கொடுத்தார்கள். அவர்கள் தமிழர்களாக இருந்தும் அதைச் செய்தார்கள். அவர்களுக்கு தமது கட்சியும், பதவிகளும் பெரிதாகத் தெரிந்ததே ஒழிய தமது இனமும், அதன் தன்மானமும் ஒரு காலத்திலும் பெரிதாகத் தெரியவில்லை.

மக்களை அணி திரட்டி, அவர்களை விழிப்படையச் செய்து, இனத்தின் மீதும், மொழியின் மீதும் பற்றுணர்வை ஏற்படுத்தி வட இந்தியாவிலிருந்து காலத்திற்குக் காலம் அடித்த இந்திப் புயலைத் தடுத்து நிறுத்தி பெரியாரும், அவரது இயக்கத்தினரும் வெற்றி கண்டார்கள்.

இன்று தமிழகத்தில் தோன்றியிருக்கும் நிலையை சற்று அலசிப் பார்ப்போம். பொதுவாக ஓய்வொழிச்சலில்லாமல் உழைக்கும் நடுத்தர வர்க்க மக்கள் கூட்டம் ஓய்வாக இருந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்க்கும் முன்னிரவு நேரத்தில் இதுவரை நாளும் தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பிய தொலைக்காட்சி நிலையம், அந்த நேரத்தை இந்தி மொழி நிகழ்ச்சி ஒலிபரப்பிற்கு ஒதுக்கியது. இந்தி மொழித் திணிப்புக்கு புதியதான வடிவத்தை மத்திய அரசு இப்படிக் கண்டு பிடித்திருந்தது.

இது பொதுவான தமிழ் மக்களுக்கு அச்சவுணர்வை ஏற்படுத்தியது. பெரியார் விதைத்த எண்ணக்கருத்துக்கள் மறைந்து போகாத தமிழக மண்ணில் இத்தகைய உணர்வு எழுவது இயல்பே.



பொதுமக்களின் உள்ளத்தில் எழுந்த இத்தகைய இந்தி மொழித் திணிப்புக்கு எதிரான உணர்வை வழிநடாத்திச் செல்வதற்கு தமிழகத்தில் இன்று இனவுணர்வுள்ள தலைவர்களைத் தேட வேண்டியுள்ளது.

இந்தப் பிரச்சனையை, தந்தை பெரியாரின் வழிவந்த திராவிட இயக்கங்களின் தலைவர்கள் தமது அரசியல் இலாபங்களுக்காக அவரவர்களுக்கே உரிய பாணியில் பயன்படுத்தினார்கள்.

பெரியாரின் இலட்சியங்களை மறந்துபோய் அவரது சொத்துக்களை மட்டும் கட்டிக் காத்துவரும் இன்றைய திராவிட கழகத்தின் தலைவர் வீரமணி அவர்கள் இந்தித் திணிப்பைக் கண்டித்து புகையிரத நிலையங்களிலுள்ள இந்தி மொழி எழுத்துக்களை அழிக்கும் போராட்டத்தை அறிவித்திருந்தார்.

தொடர்பில்லாத இரண்டு பிரச்சனைகளுக்கு அவர் முடிச்சுப் போட்டார். புகையிரத நிலையங்களில் இந்தி மொழி அறிவிப்புக்கள் நீண்ட நாட்களாகவே இருக்கின்றன. அதை அழிக்க வேண்டும் என்ற எண்ண உதயம் இவருக்கு முன்பே வந்திருக்கலாம்.

இதில் இன்னொரு அதிசயம், வீரமணி அவர்கள் அறிவித்திருந்த போராட்டத்தின் வலுவையும், தாற்பரியத்தையும் அவரும், மக்களும், தமிழக காவல்துறையினரும் நன்றாகவே அறிந்திருந்தார்கள்.

இவர் ஊர்வலமாகச் சென்று இந்தி மொழியை அழிக்க கையை உயர்த்தும்போது அநேகமாகக் கைது செய்யப்படுவோம் என்பதும், அன்று மதிய உணவுக்கு சிறையிலிருந்து வீட்டிற்கு வந்துவிடுவோம் என்பதும் அனைவரும் அறிந்ததுதான். இது மற்றைய தலைவர்களுக்கும் பொருந்தும்.

தொடர்ச்சி 14ம் பக்கம்




அவன் ஒரு வித்தியாசமானவன். தனது வாழ்நாளில் மட்டுமல்ல, மரணத்தின் பின்னும்தான் வித்தியாசமானவன் என்பதனை உணர்த்திவிட்டான். அவனது வாழ்நாள் அதிலும் போராட்ட வாழ்நாள் மிகவும் குறுகியதாக இருந்தாலும் வரலாற்று ஏடுகளில் அவனுக்கென்றொரு அத்தியாயம் எழுதப்பட்டு விட்டது.

எந்நேரமும் கள்ளமற்ற சிரித்த முகம். என்றும் துன்பதுயரங்களுக்கு ஆட்படாத மனஉறுதி. ஒவ்வொரு கணநேரமும் சுறுசுறுப்பான செயல்பாடு. அவன்தான் ராதா. அவன் கால்கள் தவழ்ந்து திரிந்த பூமி இன்று எனது கண்ணுக்கெட்டாத தூரத்தில் இருக்கின்றது. சிறீலங்கா அரசின் கோரப்பிடியில் சிக்குண்டு தவிக்கும் திருகோணமலையின் எல்லைகிராமங்களில் ஒன்றுதான் திரியாய் எனும் அழகிய சிறு ஊர். அது தான் ராதா பிறந்து, தவழ்ந்து, வாழ்ந்து வளர்ந்த மண். மிகவும் வறுமையான குடும்பத்தில் பெற்றோரையும் ஒரேயொரு பெண் சகோதரியையும் பொறுப்பேற்க வேண்டிய நிலையில் ராதா இருந்தான். ஆம், அவன் வீட்டுக்கு ஒரேயொரு ஆண்மகன். ஆனால் அந்த நாட்களில் குடும்பப் பொறுப்பை எற்கக்கூடிய வயதை அடையாத அவன் அவ்வூர் பள்ளியில் கல்வி கற்று வந்தான்.

ஆனால், ராதாவின் வயதுக்கும், அவனது மனவளர்ச்சிக்கும், செயற்பாட்டிற்கும் எவ்வித சம்பந்தமும் இருக்கவில்லை. அந்த சிறிய கிராமத்தில் எந்த ஒரு பொது வேலையானாலும், எந்த ஒரு பொது நிகழ்வானாலும் அங்கே ராதாவைக் காணலாம். அவை ஒவ்வொன்றிலும் ராதாவின் முக்கிய பங்களிப்பு இருக்கும். கல்வி கற்கும் காலங்களிலேயே, அவனது சிந்தனைகள் பொதுவேலைகளில் நாட்டம் கொள்ள தொடங்கி விட்டன. அவன் வீட்டில் இருக்கும் நேரம் மிகக்குறைவு. அவனது பெற்றோரைப் பொறுத்தவரை அது அவனது குற்றமாகவும் இருந்திருக்கலாம். ஆனால், எந்நேரமும் சுறுசுறுப்பாக இருக்கும் அவனுக்கு இந்த செயல்பாடுகள் தேவையாக இருந்தன.

மெல்ல மெல்ல அவனது விடுதலைப் போராட்ட உணர்வு துளிர்விட்டு வளர ஆரம்பித்தது. ஈழமண்ணில் இந்திய இராணுவத்தினர் அராஜகம் புரிந்து வந்த காலப்பகுதி அது. இந்திய இராணுவத்தினர் மீது முற்றுமுழுதான வெறுப்பும், எதிர்ப்புணர்வும் கொண்டிருந்த இவனும், இவனது பாடசாலை நண்பர்களும் தமது எதிர்ப்புணர்வைக் காட்டிக் கொண்டவிதம் சற்று வித்தியாசமானது. இவர்கள் கல்வி கற்று வந்த பாடசாலையில் நடந்த ஓர் பொது நிகழ்ச்சியில் பாவிப்பதற்கென ஓர் புதிய, பெரிய நைலோன் நில விரிப்பு அங்கிருந்த இந்திய இராணுவத்தினரால் வழங்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சி முடிவுற்றதும் இவனும், இவனதும் நண்பர்களும் சேர்ந்து அந்த நில விரிப்பைப் பலவேறு இடங்களில் கிழித்து சேதப்படுத்திய பின்னர் கொண்டு சென்று கொடுத்த பொழுது இந்திய இராணுவத்தினரால் எச்சரித்து அனுப்பப்பட்டனர். அந்த சிறுவயதில் அவனுக்கு இருந்த இந்த உணர்வுகள் தான் பின்னர் அவனது போராட்ட வாழ்க்கைக்கு வித்திட்டது எனலாம்.

இந்திய இராணுவம் எமது மண்ணை விட்டு வெளியேறிய காலப்பகுதியில் இவன் விடுதலைப் போராட்டத்தின் மீது முழுமையாக ஈர்க்கப்பட்டிருந்தான். அக்கிராமத்தில் இயங்கிய விடுதலைப்புலிகளின் நெருங்கிய ஆதரவாளனாகவும் உதவியாளனாகவும் செயற்படத் தொடங்கினான். அவ்வூர்ப் பாடசாலையில் புலிகளின் மாணவர் அமைப்பினை ஏற்படுத்துவதற்குத் தானே முன்னின்று செயற்பட்டான்.
ஆனால், சிறிது காலத்தில் அவன் தன்னை முழுமையாகவே விடுதலைப்போராட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு முடிவுசெய்துவிட்டான். தனது தாயாரைக் காப்பாற்றவேண்டிய தனது பொறுப்பைப் பற்றி அவன் சிந்திக்கவில்லை. ஏனெனில், தனது தாயாரைப் போன்று எத்தனையோ தாய்மார்கள் இருப்பதை அவன் நன்குணர்வான். தாய் திருநாட்டின் விடுதலையைத் தவிர வேறெதுவும் அவனுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. அவன் தனது முடிவைச் செயற்படுத்தும் நோக்குடன் அப்பகுதி போராளிகளிடம் தனது முடிவைத் தெரிவித்தான். ஆனால் அவனது குடும்ப நிலைவை நன்கு உணர்ந்த அவர்கள் ராதாவை இயக்கத்தில் இணைய அனுமதிக்கவில்லை. அவன் எவ்வளவோ முயற்சி செய்தான். ஆனால், எதுவும் பலனளிக்கவில்லை. ஆனாலும், ராதா உறுதியாக இருந்தான். அவன் முடிவுகளை மாற்றிப் பழக்கமில்லாதவன். தனது ஊரில் இருக்கும் வரை இயக்கத்தில் இணையமுடியாது என்பதனை தெளிவாக உணர்ந்தான். விளைவு, தனது நண்பன் ஒருவனுடன் ஊரைவிட்டு வெளியேறினான். முல்லைத்தீவு வந்து சேர்ந்த ராதாவும், அவனது நண்பனும் அங்கு தம்மை இயக்கத்தில் இணைத்துகொண்டனர். ஆம், ராதா மிகுந்த சிரமப்பட்ட பின்னரே தனது போராட்ட வாழ்க்கையை ஆரம்பிக்கின்றான்.

முல்லைத்தீவில் தனது பயிற்சியை முடித்துக் கொண்ட ராதா முல்லை மாவட்டத் தளபதி காந்தனின் குழுவுடன் சேர்க்கப்பட்டான். பயிற்சியின் போது இவனது திறமையை அவதானித்த மேஜர் காந்தன் தனது முகாமில் நடத்தப்பட்ட பயிற்சிப் பிரிவுக்கு ராதாவை பயிற்ச்சியாளனாக நியமித்தான். அந்தப் பிரிவுக்கு பயிற்சி கொடுத்து முடித்த ராதா பின்னர் முல்லைத்தீவு இராணுவமுகாம் பகுதியில் இடம் பெற்ற பாரிய தாக்குதலில் பங்குபற்றி கையில் காயம் அடைந்து யாழ் வந்தடைந்தான். கையில் ஏற்பட்ட காயத்தினால் அவனது கை ஒருபக்கம் வளைந்துவிட்டது. சில மாதங்கள் யாழ்ப்பாணத்தில் நின்று தனது காயத்தை மாற்றிய ராதா பின்னர் வவுனியா பகுதிக்கு மாற்றப்பட்டான்.


லெப். ராதா


மன்னார் - வவுனியா எல்லைப் பகுதிகளிலேயே இவன் இறுதிவரை செயற்பட்டான். இப்பகுதிகளில் இவன் குறுகிய காலமே செயற்பட்டபோதிலும் அப்பகுதி மக்கள் மத்தியிலும், போராளிகள் மத்தியிலும் மிகவும் பிரபல்யம் அடைந்தான். போராளிகள் அனைவராலும் மிகவும் அன்பாக நேசிக்கப்பட்டான். இவற்றுக்கெல்லாம் காரணம் அவனது சுறுசுறுப்பான செயல்பாடுகளும், திறைமையும் தான். அப்பகுதிகளில் நடந்த பல தாக்குதல்களிலும் இவன் பங்கேற்றான்.

எல்லாவற்றையும் விட முக்கியமானது என்னவென்றால் ராதாவின் பெயர் அப்பகுதி இராணுவத்தினர் மத்தியில் பரவலாக அடிபடத் தொடங்கியதாகும். ராதாவின் திறமையைக் கேள்விப்பட்ட இராணுவத்தினர் அவனை உயிரோடு பிடிப்பதற்குத் திட்டமிட்டுப் பல முயற்சிகள் செய்தனர். இதனை அறிந்த சக போராளிகள் ராதாவிடம் இதைப்பற்றிக் கூறியபோது தனது இயற்கையான சிரிப்புடன் அதனை கேட்டுக்கொண்டான். இவ்வாறு தனது சக போராளிகளுடன் உரையாடிக் கொண்டிருந்த பொழுது ஒரு நாள் ராதா கூறினான், "நான் இராணுவத்தால் சுடப்பட்டு எனது உடல் இராணுவத்தால் எடுக்கப்பட்டாலும் சரி, அதற்கு முன் நான் இராணுவத்தின் ஒரு உடலையேனும் கைப்பற்றுவேன்" என்று உறுதியாகக் கூறினான்.

தனது சபதத்தை நிறைவேற்ற ராதா முழுமுயற்சி எடுத்தான். அவனது எண்ணம் நிறைவேறும் நாளும் வந்தது. 22-01-92 இல் வவுனியா சமயபுர பகுதியில் நடமாடிய இராணுவத்தினர் பற்றி தனது தனியான முயற்சியின் மூலம் வேவு பார்த்து வவுனியா மாவட்டத் தாக்குதல் குழுவுடன் இணைந்து பதுங்கித் தாக்கி வெற்றி பெற்றதுடன் அத்தாக்குதலில் ஆறு இராணுவத்தின் உடல்களும் பல ஆயுதங்களும் கைப்பற்றப்படுவதற்குக் காரணமாக இருந்தான். இதனால், வன்னித் தளபதியினால் ராதாவிற்கு ரி 81 ரக துப்பாக்கி ஒன்று வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டான்.
இவ்வாறு, பல வீரமிகு செயற்பாடுகளால் ராதா புகழடைந்து வந்தவேளையில்தான் அந்தச் துயரச் சம்பவம் நடந்தது. எதிரிக்கு மட்டுமல்ல காலதேவனுக்கும் அவனின் வீரமிகு செயற்பாடு பிடிக்கவில்லை போலும். அவனும், இவனின் உயிரை பறிக்கத் திட்டம் தீட்டியிருந்தான். ஆனால், அதனை அறிந்து கொள்ளும் ஆற்றல் மட்டும் எமக்கு இருந்திருந்தால்..... அந்த கொடிய நாளில்.... இராணுவத்தினர் தமது தாக்குதல் முயற்சியில் தோல்வி படைந்து பின்வாங்கிச் சென்ற வேளையில் அப்பகுதிக்குச் சென்ற ராதா இராணுவத்தின் தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்த பின்னர் சயனைட் அருந்தி வீரச்சாவு எய்தினான். மாணித்த பின்னரும் சரித்திரம் படைத்த மாவீரர் வரிசையில் ராதாவும் ஒருவன். ஒரு போராளி தனது எதிரியினாலும் மதிக்கப் பட்டவனாக இருந்தால் அதை விட அவனுக்கு புகழாரம் தேவையில்லை. ஆம், ராதாவின் உடலைக் கைப்பற்றிய இராணுவத்தினர் அவனின் உடலுக்கு எந்தச் சேதத்தையும் விளைவிக்காது அவன் அருகில் கிடந்த ஓர் அட்டையில் "போராளி" என்று எழுதிய மையோடு அவன் அணிந்திருந்த தகட்டினையும் அவனருகேயே விட்டுச் சென்றனர். ஆனாலும், அவன் மரணிக்க முன்னர் தனது சபதத்தை நிறைவேற்றி விட்டான். ராதா இன்று எம்மத்தியில் இல்லை. ஆனால், அவனின் சிரிப்பு, சொற்கள், சுறுசுறுப்பு எங்கள் மத்தியில் தவழ்ந்து கொண்டே இருக்கின்றன. அவன் எம்மத்தியில் இல்லை எனும் உணர்வு எமக்கு ஏற்பட இன்னும் பல காலமாகலாம்.
ஆம், அவன் வித்தியாசமானவன்.
வாழ்ந்தபோது மட்டுமல்ல மரணத்தின் போதும் அவன் வித்தியாசமானவன். ■

கே. கபில்

## நனவிங்கு நிலவானது



பூவொன்று போரியானது - பெரும்
புயலோடு போரிட்டது.
பாரத நாடொன்று பகையானது - எம்
படைகன்னிற் பனி பூத்தது.
நீரின்றி உயிர் வாழ்ந்தது - தமிழ்த்தாய்
கண்ணீர் தேங்கு குளமானது.
சாவொன்று முடிவானது - புகல்
சாய்ந்தோய்ந்து சருகானது.
போரென்று படை நின்றது - உயிர்
போனாலும் பூவென்றது.
கடல் அலைபோன்று நிலையானது - சிறு
கணநேரம் அது நின்றது.
உயர் நடைபோட்டு விடைபெற்றது - உந்தன்
நனவிங்கு நிலவானது.

பே. தூயவன்

## உருவெடுத்தாய் பூபதியே

அருந்தமிழின் விடிவிற்காய்
ஆகாரம் தனைவிடுத்து
பெருந்தியாகம் புரிந்திட்ட
பொன்மகளே பூபதியே
கருவறையில் இருந்த நீயெம்
கதியதனை அறிந்தாயோ
பெருவேள்வி புரிவதற்கா
உருவெடுத்தாய் பூபதியே
பாரதத்தின் பாதகத்தை
பாரினிலும் அகற்றிடவே
பட்டினியாய் கிடந்தின்று
பார்விடுத்து அகன்றாயோ
அரங்காக்க புறப்பட்ட
அன்னையே எம் பூபதியே
அழியாது நின்தியாகம்
அவனியிலே என்றும்.

வே. ஐ. குமாரதாசன்

உணவை ஆயுதமாக்குவது - யுத்தக்குற்றம்
மக்கள்மேல் போர் தொடுப்பது - யுத்தக்குற்றம்
பட்டினி நிலைக்குத் தள்ளுவது - யுத்தக்குற்றம்

மக்கள் நகர்வைக் கட்டுப்படுத்துவது - யுத்தக்குற்றம்
சர்வதேச சட்டத்தை மீறும் - சிறிலங்காவை
உலகுக்கு அம்பலப்படுத்துவது - தமிழர் கடமை

மக்களும் ம

## "வாழ்க்கை ஒளி இழந்துள்ளது"

யாழ் மக்களின் இன்னல் குறித்து வத்திக்கான் பிரதிநிதி

யாழ் குடாநாட்டிலுள்ள சாதாரண பொதுமக்கள் இராணுவ நடவடிக்கைகளாலும், அரசியல் பொருளாதாரத் தடை நடவடிக்கைகளினாலும் படும் இன்னல்கள் வார்த்தைகளில் கூறிவிட முடியாது. பொருட்களின் விலையேற்றமும் போக்குவரத்துச் சிரமம் இத்தனைக்கும் மத்தியில் அவர்கள் வாழ்க்கை ஒளியிழந்துள்ளது."

இலங்கைக்கான வத்திக்கான் பிரதிநிதி அதி வணக்கத்திற்குரிய ஆயர் பன்குருபதே இக்கருத்தை வத்திக்கான் வானொலிக்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவித்துள்ளார். "யுத்தம் அதிக கூடிய உயிர்களைப் பலிவாங்கியுள்ளது. 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக்கப்பட்டு நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர்." எனவும் கூறினார்.

## மனஉறுதி

இன்றைய போர்க்காலச் சூழலில் போசாக்கின்மையை ஏற்படுத்துகின்ற முக்கிய காரணங்களான உணவுப் பற்றாக்குறை, வருமானமின்மை, அசட்டையீனம், மூடநம்பிக்கை போன்றவற்றை தகர்த்தெறிந்து ஓர் ஆரோக்கியமான சமுதாயத்தை எம்மால் கட்டியெழுப்ப முடியும் என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கை உண்டு.

- டாக்டர் சாந்தி
("அகதி முகாம்களில் காணப்படுகின்ற போசாக்கின்மை பற்றி ஒரு கண்ணோட்டம்" சமநாதம்)

## தமிழீழ மாணவர்கள் அறிவு வளர்ச்சி பெற்று தமிழீழ மண்ணுக்கு சேவையாற்ற வேண்டும்

- அருட்திரு. யோசப் அடிகளார்

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆரம்பக் கல்வி அஸ்திவாரம் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறதோ அதுபோல மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வியும் முக்கியமானதாகும். ஒரு நாற்று மேடையை விவசாயி பயன்படுத்தி பராமரிப்பது போல ஆரம்பக் கல்வியும் அமையப் பெற வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ மாணவர்களின் கல்விக்கு உறுதுணையாக இருந்து வருகின்றார்கள். இதனைப்பயன்படுத்தி மாணவர்கள் நற்பிரசைகளாகவும் அறிவுள்ளவர்களாகவும், பட்டதாரிகளாகவும் வளர்ந்து இந்த மண்ணுக்குச் சிறந்த சேவை யாற்ற வேண்டும்" இவ்வாறு தமிழீழ கல்வி மேம்பாட்டுக்கழகத் தலைவர் அருட்திரு யோசப் அடிகள், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் நடாத்திய 5ம் ஆண்டுப் புலமைப் பரிசில் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழாவுக்கு தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார். வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"எமது கலை, கலாச்சாரம், மொழி அழிக்கப்படுவதைத் தடுத்து அதனை வளர்க்க நாம் முன்வர வேண்டும். யாழ் மாவட்ட பாடசாலைகள் ஆசிரியர்கள் இன்றி வெறிச்சோடிக் கிடக்கின்றன. ஆனால் இப்பகுதி ஆசிரியர்கள் கொழும்பு பாடசாலைகளில் பணிபுரிய முயற்சிக்கின்றார்கள். இந்நிலை மாறவேண்டும். ஆரம்பக் கல்வி ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் மதிக்கப்பட்டு போற்றப்பட வேண்டியவர்கள்" என்றார்.

## கல்வி தமிழரின் சொத்து ஒருபோதும் அழிக்கமுடியாது

"எதிரி மக்களின் சகல செல்வங்களையும் அழித்தாலும் யாழ் மாணவர்களின் கல்விச் செல்வத்தை ஒருபோதும் அவனால் அழிக்க முடியாது."

இவ்வாறு வல்வை மகளிர் கல்லூரியில் மெய்வல்லுனர் போட்டியின் போது யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

"எமது மண்ணில் இருந்து கல்விகற்று பட்டதாரியாவதைவிட தமக்கு வேறு இன்னல்கள் எதுவுமில்லை. கல்வியைத் தொடராமல் கல்வி அறிவின்றி வெளிநாடுகளுக்குப் போவது கோழைத்தனமானது. கல்வி அறிவு இல்லாதவன் வாழ்வு இருட்டறை போன்றது." என்றார்.

## தமிழரின் பட்டினியுடன் விளையாட வேண்டாம்

யாழ் குடா நாட்டின் தரைவழிப்பாதைகளை துண்டித்துள்ள சிறிலங்கா அரசு, உணவுப் பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள் என்பவற்றின் விநியோகத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் யாழ் குடாநாட்டை முற்றுகை நிலையில் வைத்து தமிழரைத் தோற்கடிக்கலாம் என எண்ணுகிறது.

இன்று யாழ் குடாநாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலை என்றுமில்லாதவாறு உயர்ந்துள்ளது. ஒரு கிலோ அரிசி 55 ரூபாவைத் தாண்டிவிட்டது. பொருளாதாரத் தடையுடன் உணவுப் பொருள் விநியோகத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடானது மக்களை என்றுமில்லாதவாறு பெருமளவில் பாதித்துள்ளது.

இவ்வாறு நடைபெறும் என்பது சிறிலங்கா அரசிற்குத் தெரியாததல்ல. யாழ் குடாநாட்டிற்கு மாதாந்தம் தேவையான 11,800 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களில் இன்று சேவையில் ஈடுபடும் இரண்டு கப்பல்களும் தாமதமின்றிச் செயற்பட்டாலும் 6000 மெற்றிக் தொன் உணவை மட்டுமே கொண்டுவர முடியும்.

கடந்த வருடத்தின் மத்தியில் யாழ் குடாநாட்டின் தரை வழிகள் யாவற்றையும் அரசாங்கம் துண்டித்தபோதே இவ்வாறானதொரு சதித்திட்டத்தின் அடிப்படையிலேயே செயற்பட்டது. இதற்கு ஏற்றாற் போலவே கடந்த வருடத்தின் இறுதியில் யாழ் குடா நாட்டிற்கான கப்பற் சேவையையும் அரசாங்கம் குறைக்க முற்பட்டது. மேலும் யாழ் குடாநாட்டிற்கான உணவு விநியோகத்திற்கான நிதியைத் திறைசேரி வழங்கவும் மறுத்தது.

அதாவது, யாழ் குடாநாட்டின் தரைவழிப் பாதைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் கப்பலில் ஒழுங்காக உணவுப் பொருட்கள் அனுப்பப்படாதவிடத்து பெரும் பஞ்சம் ஏற்படும் என்பது அரசாங்கத்திற்கு நன்கு தெரிந்திருந்தும் இவ்வாறு செய்தது. அதாவது உணவை ஓர் ஆயுதமாகப் பாவித்து தமிழரின் தேசியப் போராட்டத்தை அடக்கிவிடலாம் அல்லது தமிழர் உரிமையைப் பேரம் பேசலாம் என்றே அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் உணவை ஆயுதமாகப் பிரயோகிக்கும் இந்நடவடிக்கை மிகவும் கேவலமானதும், காட்டுமிராண்டித் தனமானதும் ஆகும். அத்தோடு அரசாங்கம் மேற்கொள்ளும் இந்நடவடிக்கையானது அரசு எதிர்பார்ப்பது போலன்றி நல்லாது ஒரு பயங்கரமான நிலையே உருவாக்கும்.





# ணோநிலையும்

எங்கள் தமிழினம் தாழலாமா
உங்கள் மனம்அதை ஏற்கலாமா
பட்டினிப் போரைத் தொடுத்துவிட்டார்

பாதகர் தாழ்ப்பாழைப் பூட்டிவிட்டார்
உண்ண உணவின்றி எங்கள் உறவு - அங்கு
துன்பத்தில் வாடுது அறிவீரோ?

## கிளாலி கடப்பது மறுபிறப்பு

காரிருட்டும் பேய்க்காற்றும்
கதிகலக்கும் பனிக்குளிரும்
ஆர்ப்பரித்து ஏழும் அலையும்
அச்சமூட்டும்! மிரளவைக்கும்!

"சேச்" லைட்டும் சென்றிகளும்
வெகுதொலைவில் இருந்து கொண்டு...
வீச்சாய்வரும் எதிர்ப்படகை,
வெட்டுக்கொத்தை நினைவிலூட்டும்!

ஏறுமுன்னர் எம்சனங்கள்
எடுத்துரைத்த கொடுங்கதையும்
கூறு போட அவன் வருங்கால்
நடப்பவையும் நினைவில் விழும்!

ஊறிக்கடல் "ஊத" உடல்
உருக்குலைந்த சடலமாக
மாறும் நிலை வருமோ? என...
மனம் பதறும்! புலனொடுங்கும்!!

வான் வெள்ளித் திசைஉதவ
வழிதேடும் நம் கண்கள்
விண் வாழும் "முழுத்தெய்வ. . . ."
முகந் தேடி நேர்ந்து அழும்!

ஆலங்கேணி கரைதழுவும்
கணம் வரைக்கும், இது தொடர்ந்தே. . .
"காலன்" தோற்கத் தரை மிதித்தால்,
அம்மா. . . . . !! அது மறுபிறப்பு.

-த. அன்பழகன்-


Tamileelam Archive





# வடக்கில் வங்கிகள் முழு வீச்சில் செயற்படத் தயங்குவது ஏன் ?

**1990ல்** சிறிலங்கா, அரசு தமிழ் மக்கள் மீது மீண்டும் ஒரு யுத்தத்தைக் கட்டவிழ்த்த பின், தமிழீழமெங்கும் அத்தியாவசிய தேவைகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின. இந் நிகழ்விற்கு போர் காரணம் என்பதை விட சிறீலங்கா அரசின் திட்டமிட்ட செயல்களே மூல காரணமாகியது. சிறீலங்கா அரசு, புலிகள் மீது நடவடிக்கை எடுப்பதாகக் கூறிக்கொண்டு மிக நுணுக்கமான திட்டங்களைத்தீட்டி, தமிழ் மக்களை சகலவழிகளிலும் நசுக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது. போர் இராணுவ நடவடிக்கை ஒரு புறமிருக்க பொருளாதார சுகாதார வழிகளினாலும் தமிழ் மக்கள் மீது ஒரு யுத்தத்தை நடத்தி வருகிறது.

வெளிப்படையான பொருளாதாரத் தடைகள் மட்டும் நடவடிக்கையாக இல்லாது பல மறைமுக நடவடிக்கைகளையும் சிறிலங்கா அரசு மேற்கொண்டு வருகிறது. உதாரணமாக வட-கிழக்கில் புனரமைப்பிற்கென வெளிநாடுகளால் வழங்கப்பட்ட பல கோடி ரூபாக்களை வங்கிகளினூடாக கடனடிப்படையில் வழங்க முனைந்துள்ளதாகக் காட்டிக்கொள்கிறது. ஆனால் கடன் வழங்க வங்கிகள் விதிக்கும் காப்புறுதி போன்ற நிபந்தனைகளை பூர்த்தி செய்யவிடாது சில முக்கிய காப்புறுதிகளை வட கிழக்கு பகுதியில் செய்யக் கூடாது என்று தடையும் செய்துள்ளது. வங்கிகள் இதன் காரணமாக பெரியளவிலான கடன்களை வழங்குவதில்லை. இது அரசு தெரிந்து மறைமுகமாக வங்கிக்கடன்கள் கொடுபடாது தடை செய்யும் ஒரு தந்திரமே. ஆனால் பல்வேறு கடன்களை வங்கிகள் வழங்கக் கூடிய நிலையில் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

விவசாயம், கால்நடைவளர்ப்பு, மீன்பிடித்தொழில், விவசாய வர்த்தகத்துறை என்பவற்றிற்கு புத்துயிர் ஊட்டுவதன்மூலம் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மக்களுக்கு புனர் வாழ்வளிப்பதையும், சொத்துக்களைப் புனரமைப்புச் செய்வதையும் செயற்றிட்டமாகக் கொண்டு ஆசிய அபிவிருத்தி வங்கி, சிறிலங்கா அரசுடன் 1989 டிசம்பர் 2ல் ஒப்பந்தமொன்றைச் செய்தது. இத்திட்டம் 1990ல் இருந்து 1991 வரையிலான மூன்றாண்டு காலப் பகுதியில் நடைமுறைப்படுத்தவெனச் செய்யப்பட்டபோதும் 1991ல் இத்திட்டம் நடைமுறைப்படுத்தலுக்குரிய காலம் நீடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, கற்றன் நசனல் ஆகிய வங்கிகளினூடு செயற்படுத்தப்படுகிறது. இதற்கென ஒதுக்கப்பட்ட தொகை 537.3 மில்லியன் ரூபாக்களாகும்.

இச் செயற்றிட்டத்தை சிறிலங்கா அரசு ஆசிய வங்கியுடன் கைச்சாத்திடுகையில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களான வடக்கு கிழக்குடன், எல்லைப்புற மாவட்டங்களாகிய அநுராதபுரம், அம்பாந்தோட்டை, மொனறாகலை, பொலநறுவை, புத்தளம் ஆகியவற்றையும் இணைத்துக் கொண்டது. வடக்கு கிழக்குக்கென கைச்சாத்திட்டு இத்திட்டத்தில் இப்பகுதியில் 75 வங்கிக் கிளைகளினூடாகவும், எல்லைப் புற மாவட்டங்களென இணைத்த சிங்களப் பகுதிகளில் 107 வங்கிக் கிளைகளினூடாகவும் இச் செயற் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.



**இலங்கை வங்கிக்கு 241.8 மில்லியன் ரூபாவும் மக்கள் வங்கிக்கு241.8 மில்லியன் ரூபாவும் கற்றன் நசனல் வங்கிக்கு 53.7 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ள இத் திட்டப் பணத்தில் வடக்குக் கிழக்கிலுள்ள இவ் வங்கிக்கிளைகள் சில மில்லியன் ரூபாக்களையாவது கடந்த மூன்றாண்டுகளில் செலவிடமுனையவில்லை. இதற்குக் காரணங்களாகக் காப்புறுதி நிறுத்தி வைத்திருத்தலும் மீளளிப்பு சம்பந்தமான சந்தேகங்களும் இவ் வங்கி அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டது. ஆனால், உண்மையில் அரசு வங்கி அதிகாரிகளின் அக்கறையீனமும், யதார்த்த நிலையை கவனத்தில் கொள்ளாததுமே காரணங்களாகும்.**

இக் கடன் திட்டத்தை விட, சுயதொழில் வாய்ப்புக் கடன்கள், ஜனசவிய கடன் திட்டங்கள், ஏனைய விவசாய கால்நடை கடன் திட்டங்களென பல திட்டங்கள் வங்கிகளிடம் இன்றும் நடைமுறையிலுள்ளன. இவற்றிற்கு விசேட நிபந்தனைகள் (காப்புறுதியீட்டல்) எதுவுமில்லை. புனர்வாழ்வு புனரமைப்புக் கடன்களை விட ஓரிரு வீதங்களால் வட்டி வீதம் அதிகம். அபிவிருத்திக் கடன்களான பெரியளவிலான கடன் தொகைகளுக்கே சில விசேட நிபந்தனைகளுமுள்ளன.

இத்திட்டப்படி, வடகிழக்கில் கடன்களை வழங்கக்கூடாதென்று எத்தடையும் விதிக்கப்படவுமில்லை. இத்திட்டங்களினால் வங்கிகள் பாதிப்படையாது. அதாவது வழங்கப்பட்ட கடன்கள் திரும்பி வராத நிலையில் ஓரளவு தொகை மத்திய வங்கியினால் மீளளிப்புச் செய்யும் நிலை உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நிலைகளில் வங்கிகள் கடன்களை வழங்க முன்வராத நிலை, இவ் வங்கி அதிகாரிகளின் செயல்களில் பலவித சந்தேகங்களை தோற்றுவிக்க முனைகிறது.

இன்றும் தொடர்ந்து வங்கிகள் வட கிழக்குப் பகுதிகளில் சுமுகமாக இயங்கி வருகின்றன. பொதுமக்களின் வைப்புக்களை ஏற்றுக் கொள்கின்றன. வங்கிகளினால் நடைமுறைக்குக் கொண்டுவரும் வருமானம்தேடும் திட்டங்களை நிறைவேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. ஆனால், கடன்களை வழங்க இவை முன்வருவதில்லை. கடந்த ஆண்டின் இறுதியிலும் இவ்வாண்டின் தொடக்கத்திலும் ஒரிரு வங்கிக் கிளைகள் சில கடன் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளபோதும் பெருமளவு கிளைகள் இதில் ஈடுபடவில்லை. விவசாயக்கடன்கள் வழங்க பயிர்க் காப்புறுதி இல்லாத நிலை, கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாத நிலைக்கு காரணமாகச் சொல்லப்பட்ட போதும், கடந்த காலப் போகத்தில் பயிர்க் காப்புறுதி இங்கு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. மேட்டு நிலப்பயிர் கடன்களுக்கு இப்பயிர்க் காப்புறுதி அவசியமற்றது என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

கடன்கள் வழங்காமலிருப்பதற்கு வங்கி அதிகாரிகள் சொல்லும் காரணங்கள் விநோதமானவை. செயலகக் கூட்டத்தில் வங்கி அதிகாரி ஒருவர் கடன்களுக்கென ஒதுக்கப்பட்ட பணம் முடிவடைந்துவிட்டது என்றார். கடந்த காலங்களில் பெறப்பட்ட கடன்கள் மக்களால் ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தப் படவில்லை, காப்புறுதிகள் இல்லை, போதிய காகிதாதிகள் இல்லை, ஊழியர்பற்றாக்குறை, போர்ச்சூழலைத் தொடர்ந்து நிலவி வருகிறது. கடன்களை வழங்கினால் திரும்பப் பெறலாம் என்பதற்கு உத்தரவாதமில்லை. இவ்வாறு பலவிதமாக தெரிவிக்கப்படுகின்றன. இத்தனைக்கும் இவ்வங்கிகள் புதிய வைப்புத்திட்டங்களை அறிவிக்கின்றன. நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. வங்கி அலுவல் நேரங்களை அதிகரிக்கின்றன. ஊழியர்கள் பல்வேறு இடங்களுக்கும் சென்று வங்கியில் நடவடிக்கைத் திட்டங்களைத் தெரிவித்து வைப்புக்களைப் பெறுகின்றனர். முன்னர் கொடுக்கப்பட்ட கடன்களை வசூலிக்கின்றனர். இச்செயல்களுக்கு வங்கிகளுக்கு காகிதாதிகள் பற்றாக்குறையோ, ஊழியர் பற்றாக்குறையோ, இராணுவத்தினால் விடுவிக்கப்படாத இடமென்ற நிலையோ, காப்புறுதித் திட்டங்களோ, போர்க்காலச் சூழ்நிலையோ தடங்கலாக இருப்பதாகத் தெரியவில்லை.

மறுபுறமாக, இவ்வங்கிகள் பெறுகின்ற வைப்புக்களை, அதாவது வங்கிகள் மக்களிடம் பெற்றுள்ள கடன்களை மக்கள் திருப்பிக் கேட்டவுடன் கொடுக்குமா என்பதற்கு என்ன உத்தரவாதமுள்ளது? வங்கி, தான் வழங்கும் கடன்களுக்கு ஏதுதடையாக உள்ளது என்றதோ, அதையே திருப்பி மக்களுக்கும் சொல்லாதா? ஏற்கனவே இங்கு மக்களால் அடைவு வைத்த நகைகளுக்கு என்ன நடந்தது என்பது யாவரும் அறிந்ததே.

எமது மக்களின் வைப்புக்கள், எமது மக்களை மேலும், சிறீலங்கா அரசு நசுக்க வங்கிகளின் இந்நடவடிக்கை துணைபோகின்றன. இவ்வைப்புக்களுக்கு எதிராக எமது மக்களுக்கு கடன்களை இவ்வங்கிகள் வழங்காது இருக்கும்போது இவ்வைப்புக்கு எதிரான கடன்கள் தென்னிலங்கையில் வழங்கப்படுகின்றன. போரின் காரணமாக சீரழியும் பொருளாதாரத்தை சிறீலங்கா அரசு தென்னிலங்கையில் பாதுகாக்க இங்குள்ள வைப்புக்கள் கைகொடுக்கின்றன. இங்குள்ள வங்கிகள் அபிவிருத்திக்குரிய கடன்களை செய்ய முன்வரவேண்டுமென்பதில்லை. குறைந்தபட்சம் உயிர்காக்கும் பொருளாதாரத் திட்டமிடலுக்காகவேனும் சிறியளவிலான கடன்களைச் செய்ய முன்வரலாம். இதற்குத் தடைகள் ஏதுமிருப்பதாகத் தெரியவில்லை.

சிறுசிறு விவசாய உற்பத்தி முயற்சி சுயதொழில் முயற்சி போன்ற கடன்களை வழங்கக்கூட இங்குள்ள சில வங்கியதிகாரிகள் முரண்டு பிடிக்கின்றனர். இவர்கள் சொல்வது வங்கி சட்டதிட்டங்கள் நடைமுறைகள் பலருக்கு விளங்குவதில்லை என்பதே!

வைப்புக்களைப் பெருக்கி தமது தலைமையகத்தில் இருந்து நல்ல பெயரை எடுப்பதுடன் எந்தவிதமான பிரச்சனையுமின்றி தலைமை அலுவலகத்தில் இவ்வைப்புக்களுக்கு வங்கிகள் வட்டியைப் பெற்று இலாபத்தையீட்டி வருகின்றன. இந்நிலை அதிகாரிகளின் பதவியுயர்வுகளுக்கு மிக வேண்டிய ஒன்றே. சில வங்கிகள் வைப்புக்களுக்கு எதிராக 85 வீதமான கடன்களைக் கொடுக்க முன்வருவதாகச் சொல்கின்றன. இவை வைப்பிலிட்ட வாடிக்கையாளர்களுக்கு அவர்களுடைய வைப்புக்கெதிராக கடன்களை வழங்கவே முன்வந்துள்ளன. கடன் தேவைப்படும் ஒருவருக்கு இது கிடைக்கப் போவதில்லை. வாடிக்கையாளர் தனது வைப்பை மேலும் அதிகரிக்க இது வழிகோலுமே பொழிய பொருளாதார நெருக்கடியை நீக்க உதவாது.

இன்று சிறீலங்கா அரசு எமது பகுதிகளுக்கு வரும் வெளிநாட்டுப் பணத்தைத் தடைபோடுவதிலும், காலதாமதப்படுத்துவதிலும் கவனத்தைச் செலுத்தி வருகின்றது. இது பணரீதியாக மிகுந்த தாக்கத்தை நாளடைவில் ஏற்படுத்தும். இது பலவிதத்தில் உற்பத்தியை பாதிப்படையச் செய்யும் சாத்தியங்கள் உண்டு. வங்கிகளும் இங்கு வைப்புக்களைக் கரண்டி தென்னிலங்கை வளமாக்குவதற்கு உதவ முனைந்துள்ளன. இது நாளடைவில் எமது பொருளாதாரத்தை மிகுந்த சிக்கலுக்குள்ளாக்கும். இதையுணர்ந்து இங்குள்ள அரச வங்கி அதிகாரிகள் செயற்பட வேண்டும். இல்லையேல், இவர்கள் எமக்களுக்கு தமது கடமையைச் செய்யத் தவறியவர்களாகவே இருப்பர்.

வங்கிகள், வழங்கிய கடன்கள் திரும்பி வரவில்லை என்ற ஒரு காரணத்தைச் சொல்லுகின்றன. உண்மையில் கடன்களைப் பெற்ற தொழில்களைத் தொடங்கி,

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

**- கோவிந்தன் -**
**(தமிழீழம்)**

# அவன் மனிதன்

சிறுகதை

செல்வி அருணா புஸ்பராஜா

"மணலாறில் திரும்பவும் சண்டை துடங்கீட்டுது ...ம் எத்தனை பொடியள் அநியாயமாச் செத்துக் கொண்டிருக்குதுகள்-அப்பவும் யோசிக்காமல் முண்டிப் போட்டு தோத்தது காணாதெண்டு, இப்பவும் சனக்கப் பொடியளைப் பலி குடுத்துக் கொண்டிருக்கிறாங்கள்.. இருந்த நிம்மதியும் போச்சுது."

'மணலாறில் தொடர்ந்து புலிகளின் வீர சாதனை. 41 படையினர் பலி! நவீனரக ஆயுதங்கள் பல கைப்பற்றப்பட்டன எனக் கொட்டை எழுத்தில், பத்திரிகையின் தலைப்புச் செய்தியாகப் பிரசுரித்திருந்த வாக்கியங்களை மகிழ்ச்சிக்கினை பரப்பவாசித்துக்கொண்டிருந்த சேகர் தந்தையின் வார்த்தைகளைக் கேட்டு நிமிர்ந்தான்.'

"அப்பிடிச் சொல்லா தேங்கோ அவங்களின்ரை உயிர் எங்கடை மண்ணுக்காகத் தான் போய்க்கொண்டிருக்கு. அதில தான் ஈழமும் மலரப் போகுது. அப்பத்தான் நிரந்தரமான நிம்மதி வரும்."

மூக்குக் கண்ணாடியைக் கழட்டிக் கரத்தில் பொதித்துக் கொண்ட ரெத்தினம் மகனைப் பார்த்தார். அதில் மறைந்திருந்த சினம் அவனுக்குள் வெளிச்சம் போட்டது.

"உங்கடை சுயநலத்தால என்னைக் கட்டிப் போட நினைக்காதேங்கோ. வாய்க்கு வாய் எங்கடை பொடியள், எங்கடை பொடியள் எண்டு கதைச்சுக் கொண்டு தங்கடை எல்லாப் பிள்ளையளையும் வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கிறவையில நீங்களும் ஒருத்தரா சேர்ந்திடாதேங்கோ."

"எல்லாப் பிள்ளைகளையும்" என்பதில் ஒரு அழுத்தம் தொனிப்பதை ரெத்தினம் புரிந்து கொண்டார்.

"சேகர் கனக்கக் கதையாதை... படிச்சு முன்னேறுகிற வழியைப் பார். ஓம் சொல்லிப் போட்டன்."

மகனை அதட்டிக் கொண்டு வந்த பாக்கியம் கணவனிடம் தேநீர்க் கோப்பையை நீட்டினாள்.

"பிள்ளையோட சரிக்குச் சரி கதைக்கிறதால தான் இவனும் இப்பிடிக் கதைக்கின்றான். இயக்கத்தைப் பற்றிக் கதைக்கக் கதைக்க இவரின்ரை மனமெல்லே குழம்பிப்போடும்."

என்ன தாயிவள்? களத்துக்குத் தனது பிள்ளைகளை அனுப்பி விட்டு மற்றைய போராளிகளைத் தமது பிள்ளைகளாக நினைத்து களிக்கும் தாய்மைகள் நிறைந்து வழியும் இம் மண்ணில் இப்படியும் ஒரு தாய்.

சேகரின் மனம் பெருமூச்சொன்றை உதிர்த்தது. "அதுதான் அப்பவே சொன்னனான். குடும்பமாய் கொழும்புக்குப் போயிட்டா எந்தக் கரைச்சலுமில்லை. இப்ப இவனால தான் பெரிய பிரச்சனையாயிருக்கு."

"தேநீரை ரசித்து உறிஞ்சிக் கொண்டிருந்தவரின் கண்களிற்குள் வண்ணத்திரையாக கொழும்பு நகர் புலப்பட்டு மனத்தை மயக்கத் தான் செய்தது. ஆனாலும் வீடும், காணி பூமிகளும் நினைவைக் கிழித்துக் கோபத்தைக் கிளறிவிட்டது.

"அதுக்கு இப்ப என்னை, என்ன செய்யச் சொல்லுறாய். போறதெண்டால் சும்மாவே பாலெடுக்கத் திரியிறதிலேயே மனிசருக்கு விசர் பிடிச்சிடும். இந்த வீட்டைக் குடுத்தாத்தான் பாகம் குடுப்பான். மற்றக் காணியளை ஆரிட்டைக் குடுக்கிறது உன்ரை ஆட்களிட்டையே..."

ரெத்தினத்தின் சூடான பேச்சு, பாக்கியத்தின் குரலைச் சிறிது தணிய வைத்தது.

"அப்ப இவனையாவது வெளியால எங்கையாவது அனுப்பிற வழியைப் பாருங்கோவன். எவ்வளவு காசெண்டாலும் குடுத்துப் பாஸை எடுப்பமப்பா"

அவர்களின் உரையாடல் அவனுக்கு எரிச்சலை விட வேதனையைத் தான் அதிகம் தந்தன.

"இஞ்சையம்மா விசர்க்கதை கதைக்காதேங்கோ. வெளிநாட்டுக்கோ... அங்கை நான் போறதோ. வேணுமெண்டால் நீங்கதான் ரெண்டு பேரும் போங்கோ" என்று கூறியவனை முறைத்தாள் தாய்.

"போகாமல் என்னசெய்யப் போகிறாய். இங்கை படிப்பும் இப்பிடியும், அப்பிடியுமாக் கிடக்கு அண்ணைமார் ரெண்டு பேரும் உன்னை நினைச்சுத்தான் கவலைப்படுகிறாங்கள். உன்னையும் அவங்களிட்டை அனுப்பிப் போட்டால் நாங்கள் மூண்டு பேரும் நிம்மதியா இருந்திடுவம்"

"என்ரை மூத்தவன் ஆனையிறவு அடிபாட்டில் வீரமரணமடைஞ்சிட்டான்... இளையவன் முல்லைத்தீவில்... இப்ப கடைசி மகனும் களத்தில் நிற்கிறான் தம்பி"

ஆனையிறவில், கண் துஞ்சாது சமர் புரிந்து கொண்டிருந்த போராளிகளுக்காக உணவுப் பொருட்களை இல்லம் தோறும் சேர்க்கச் சென்றிருந்த போது ஓர் தாய் கண்ணீருடன், ஆனால் பெருமையோடு அன்று கூறியது நினைவில் மலர்ந்தது

மண்ணுக்காக இருவரை விதையாக்கி விட்டு உவகையோடு நிற்கும் அந்த வீரத்தாயையும், சுயநலமேயுருவான தனது தாயையும் ஒப்பிட்டு நோக்கவே அவனது உள்ளம் கூசியது.

"அண்ணா ராஜனண்ணை வந்திருக்கிறார்... ரியூசனுக்கு நேரம் போட்டுதாம்" என்ற தங்கையின் குரல் கேட்டுச் சிந்தனையை கிழித்தவனது கரம் பாடப்புத்தகங்களைத் தூக்க, கால்கள் வெளியே விரைந்தன.

"ஏலுமெண்டால் வென்று பார் இல்லாட்டித் திரும்பிப் போ"R வீதியை அடைக்கும் படியாக நின்று கொண்டு தங்கள் கும்மாளங்களை வெளிப்படுத்திக் கொண்டு நின்ற கல்லூரி மாணவர்களை சேகரின் கண் ஆழ்ந்து ஊடுருவியது

மண்ணின் பரப்பை அதிகரிக்க வைப்பதற்காகக் குருதியை வழிய விட்டுக் கொண்டிருக்கும் போராளிகளின் நினைவுகள் கிஞ்சித்தும் இல்லாதவர்களாக தங்கள் கூத்துக்களைப் பறைசாற்றிக் கொண்டிருப்பவர்களின் பரிதாப நிலையைக் கண்ட சேகரது கண்கள் சினத்தை உமிழ்ந்தன.

காயப்பட்டவர்களை ஏற்றிக்கொண்டு விரைந்து வந்த வாகனம் கூட தனது வேகத்தைக் குறைக்க வேண்டியதாயிற்று.

விளையாட்டுத்துறையின் எல்லையை விட்டு வெளியேறிய அம் மனிதாபிமானமற்றவர்களைக் காணப்பிடிக்காதவனுடைய கால்கள் சைக்கிள் பெடலை வேகமாக மிதித்தவாறே ரியூட்டறியை நோக்கி ஓடவாரம்பித்தன.

"இன்னைக்கு மாஸ்ரர் வகுப்பு எடுக்கிறாரோ தெரியாது. அந்த மனிசன் இயக்கத்தோடையே உயிரை விட்டு கொண்டு திரியிறார்" என்று கூறும் நண்பனுக்கு என்ன கூறி இன்றைய நிலையை விளங்க வைப்பது என்று தெரியாதவனாக வகுப்பறை வாங்கில் அமர்ந்து கொண்டான்.

அங்கு களத்தில் போராளிகள் இங்கு வகுப்பறையில் கும்மாளங்கள். இது என்ன காலமடா? மாணவர்களின் சீண்டல் ஒலிகள் அவனது காதினுள் தேளாகக் கொட்டியது.

"மாணவ சமுதாயமே, போர்க்கால மேகங்கள் கருக்கொண்டிருக்கும் இன்றைய பொழுதினில் பொறுப்புணர்ச்சியுடன் செயற்படு" என்ற கோசத்தை எழுப்ப வேண்டும் போல அவனது மனம் துடித்தது.

அதே வேளையில் 'சேர் வாறார் சேர் வாறார்...' என்ற கிசு கிசுப்பான குரல்கள் வகுப்பறையை நிசப்தப்படுத்தியது. நுழைந்த ஆசிரியர் அமைதியாக இருந்த மாணவர்களது முகங்களைப் பார்த்தார்.

'இப்ப மணலாறில பிரச்சனை நடந்து கொண்டிருக்கிற விசயம் தெரியும்...' என்று ஆசிரியர் தொடங்கியதைக் கேட்டு மாணவர்களின் கைகள் விரித்த கொப்பிகளை மூடின.

'அதனால் காயப்பட்ட போராளிகளைப் பராமரிக்கிறதுக்கு ஆக்கள் காணாது. ரியூட்டரிகளின் இருந்து கொஞ்ச கொஞ்ச மாணவர்களைக் கேட்டிருக்கினம். பராமரிக்கப் போக விரும்பியவர்கள் தயவு செய்து போங்கள்' என்று கூறியவர் மாணவர் மத்தியில் கவிந்திருந்த மௌனத்தைக் கிழிக்க விரும்பியவர் போன்று தொடர்ந்தார்.

'இண்டைக்கு இழக்கிற பாடங்களை இன்னொரு நாள் ஈடு செய்யலாம் ஆனால் போராளிகளின்ரை இழப்பை யாராலுமே ஈடு செய்யேலாது'

அவரது வார்த்தைகளைக் கேட்பதிலிருந்த ஆர்வம் அதில் தங்கியிருந்த பணிப்பை மேற்கொள்ளுவதற்கு மாணவர்கள் தயங்கிக் கொண்டிருப்பதை வெறுப்போடு நோட்டமிட்ட சேகர் முதல் மனிதனாக எழுந்தான். அவனைத் தொடர்ந்து சிலர் எழுந்ததைப் பார்த்து சிறிது மலர்ந்தான். ஏனைய மாணவர்களின் புரிந்து உணர்வுகள் இன்னும் வியாபிக்கவில்லையே என்பதை வேதனையுடன் ஒரு சேர நினைத்துக் கொண்டவர்களின் துவிச்சக்கரவண்டிகள் மருத்துவமனையை நோக்கி விரைந்தன.

"இஞ்சையப்பா நேரம் ஏழாகப்போகுது உவனை இன்னும் காணேலையப்பா" என்ற பாக்கியத்தின் குரலைக் கேட்டுக் கொண்டு தலையைக் குனிந்தான் சேகர்.

"ஏழு மணி வரைக்கும் ரியூசனே உனக்கு. மற்ற பிள்ளைகள் ரெண்டு மணிக்கே வீட்டை போட்டுதுகள் இவ்வளவு நேரமும் எங்கை போனனீ?"

"மற்ற பிள்ளைகள் படிப்பு படிப்பு என்று ஓடித் திரியுதுகள் இவர் சமூக சேவை செய்து போட்டு வாறார்."

ரெத்தினத்தைத் தொடர்ந்து பாக்கியம் ஏசிய ஏச்சுக்களைக் கேட்டு உள்ளுக்குள் சிரித்துக் கொண்டே அறைக்குள் நுழைந்தான். புத்தகங்களை மேசை மீது போட்டுவிட்டு கட்டிலில் குப்புற விழுந்தான்.
"தம்பி எப்ப இந்தக் காயங்கள் மாறி திரும்பவும் எப்ப சண்டைக்குப் போவமெண்டு இருக்கு..."
சேகரினால் பராமரிக்கப்பட்ட ஒரு போராளியின் இதயத்திலிருந்து எழுந்த வார்த்தைகளை நினைவில் மீட்டினான்.

'அங்கை எங்கடையள் அடிக்கிற அடியில ஆமி ஓடுற ஓட்டத்தை பார்க்க வேணும்...'

அவனது நிகழ்வுகள் தந்த திதர்சனம் சொற்களாக உருவெடுத்து வருவதை எண்ணிப் பார்த்து உடல் சிலிர்த்தான்.

பக்கத்து படுக்கைகளில் வேதனையின் முனகல்கள். ஆனாலும், களத்தினை நினைவூட்டி உரையாடும் போது அவ்வீரர்கள் முகங்களில் வெற்றியின் மலர்ச்சி இழையோடுவதை அவதானித்த அவனது மனதில் 'இவர்கள் தான் போராளிகள்' என்ற உணர்வு கிளர்ந்தது.

இவர்களின் தியாகத்தை, விடுதலையின் தேவையை என்னால் தான் என் பெற்றோருக்கு உணர வைக்க முடியும் என்ற உறுதியான முடிவை எடுத்த போது அவனது மனம் மத்தாப்பூவாகச் சிரித்தது.

அடுத்த நாள்...

பாக்கியத்தின் அழுகையால் வீடு அமளிப்பட்டது.

மனம் அதிர்ந்து போய் கதிரையில் அமர்ந்திருந்த ரெத்தினத்தின் கரத்தினில் ஒரு கடிதம் காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது அதில்...

அம்மா,

ஆயுதம் தூக்குவது இன்றைய காலத்தின் கடமை. இதனைச் சிந்தித்துப் புறப்பட்டு விட்டேன். என்னைத் தேட வேண்டாம்.

என்று எழுதியிருந்தது ●




# சிறில் ரணதுங்க இல்லாத இராணுவம்

**1971**இல் இலங்கைத் தீவு அதன் முதலாவது ஆயுதக் கிளர்ச்சியைச் சந்தித்தபோது சிறில் ரணதுங்க இராணுவத்தில் ஒரு இளநிலை அதிகாரியாக இருந்தார். அப்போது அவர் கேகாலையில் ஜே. வி. பி. யை ஒடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். அந்நாட்களில், அவரைச் சந்தித்த மேற்கத்திய செய்தியாளரிடம், அவர் மலேசியாவில் கொம்யூனிஸ்ட்டுக்கள் நசுக்கப்பட்ட அனுபவத்தை நாங்கள் நினைவில் வைத்திருக்கிறோம். இவர்களையும், அவ்விதமாக நசுக்கி விடுவோம் என்ற தொனிபடக் கூறினார்.



71ல் ஜேவிபியை, மலேசியாவில் கொம்யூனிஸ்ட்டுக்களை பிரிட்டன் நசுக்கியது போல நசுக்க அவர்களால் முடியவில்லை. ஆனால், 89, 90களில் இந்தோனேசிய, லத்தீன் அமெரிக்க அனுபவங்களைக் கலந்து அவர்கள் ஜேவிபியை அதன் உயிர்நிலை வரை சென்று நசுக்கினார்கள். அப்போது ரணதுங்கா ஜெனரலாகிவிட்டிருந்தார்.

மெலிந்த, அதிகம் உயரமில்லாத தோற்றம். நரைத்த, அடர்த்தியான மீசை. ரணதுங்க, ஒரு பட்டதாரியாக இராணுவத்தினுள் நுழைந்தார். ஒரு பிரிகேடியராக ஓய்வு பெற்றார். பின்னர் சேவை நீடிப்பின் அடிப்படையில் கூட்டுப்படைத் தளபதியானார்.



அங்கிருந்து ஒரு ஜெனரலாக உயர்ந்தார். கடைசியாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்து அண்மையில் அவுஸ்திரேலியாவுக்கான சிறீலங்காவின் தூதுவராக நியமிக்கப்பட்டதோடு, படைத்துறைச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

சிறீலங்காவின் இராணுவ சேவையிலிருந்து இராஜதந்திர, மற்றும் நிர்வாக சேவைகளுக்கு மாற்றப்படும் மூன்றாவது முக்கிய நபர் ரணதுங்க. இவருக்கு முன் சேபால ஆட்டிக்கல பிரிட்டனுக்கான சிறீலங்காத் தூதுவராக வும், ஜெனரல் வீரதுங்க வடகிழக்கு மாகாணசபையின் ஆளுனராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஈழப்போரில் ரணதுங்காவை விட, சேவை மூப்புக் குறைந்த தளபதிகள் கெமுனுக்களாக உயர்ந்து சென்றார்கள். குறிப்பாக கொப்பேகடுவ அவரது குடும்பப் பின்னணி காரணமாக திடீரென்று எழுச்சி பெற்றார். ஆனால் ரணதுங்க மற்றவர்களின் கவனத்தை சடுதியாக ஈர்க்காத ஒரு ஜெனரலாகவே தொடர்ந்தும் இருந்தார். இராணுவத்தின் நலன்களை எத்தருணத்திலும் விட்டுக் கொடுக்காத ஒரு ஜெனரல். அவர் பதவி பேதங்களுக்குள் சிக்குண்டதில்லை. குறிப்பாக கட்சிப் பூசலுக்குள் சிக்குண்டதில்லை. அவர் எப்போதும் ஆட்சிப் பீடத்திற்கு அங்கு யார் இருந்தாலும் விசுவாசமானவர் என்பதால் அதிகம் சர்ச்சைக்குள்ளாகாதவர்.

அவர் ஜெயவர்த்தனாவிற்கு நெருக்கமானவர். ஜெயவர்த்தனா அவரிற்கு அதிகம் முதன்மை தந்தார். இதற்காக பிரேமதாசா அவரை ஒதுக்கி வைத்தார் என்பதற்கில்லை. அவர் பிரேமதாசாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்தார். திருமதி பிரேமதாசாவிற்கு அவர் ஒரு விதத்தில் உறவு என்றும் சொல்லப்படுகிறது.

சிறீலங்காவின் நவீன வரலாற்றில் பல அழிவான திருப்பங்களின் துலக்கமாய் இருந்த ஒப்பரேசன் லிபரேசனை 87ல் ரணதுங்கா வடிவமைத்தார். தாக்குதலிற்குத் தலைமையும் தாங்கினார். பின்னர் ராஜீவ் -ஜே. ஆர். உடன்படிக்கை உருவானபோது யூ. என். பி. க்குள் தோன்றிய, உடன்படிக்கைக்கு எதிரான அமைச்சர்களைச் சமாதானப் படுத்துவதற்காக ஜே. ஆர்., ரணதுங்காவைப் பயன்படுத்தினார். இராணுவம் யாழ். நகரை ஏன் பிடிக்க முயலவில்லை என்பதற்கு ரணதுங்க அமைச்சர்கள் முன் விளக்கமளித்தார். யுத்தத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட ஒரு தளபதியின் வாக்குமூலத்தை அமைச்சர்கள் எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும் என்பதை ஜே. ஆர். விளக்கத்தோடு கணித்திருந்தார். ரணதுங்க அமைச்சர்களிடம் சொன்னார் நிலப்பரப்புக்களைப் பிடிப்பதில்லைப் பிரச்சனை. பிடித்த பகுதிகளைத் தக்கவைப்பதுதான் முக்கிய பிரச்சனை என்று. இதற்கு இருக்கின்ற துருப்புக்கள் போதாது என்றும், மேலும் நாலு பட்டாலியன்கள் தேவை என்றும் சொன்னார். பலாலியிலிருந்து வரும் விநியோக வழியைப் பாதுகாக்க மேலும் இரு பட்டாலியன்கள் தேவை என்றும் சொன்னார். வடமராட்சியில் புலிகள் ஒரு வானூர்தியை சுட்டு வீழ்த்தியபின்னர் விமானிகள் அப்பகுதியில் பறக்க மறுத்துவிட்டதாகவும், இதனால் அங்கு விநியோகங்கள் துண்டிக்கப்படக் கூடிய நிலை காணப்பட்டது என்றும் அவர் மேலும் சொன்னார்.

ஜெயவர்தனா, பிரேமதாசா இருவரும் ரணதுங்கவை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்க முன்வந்தார்கள். ஆனால், ரணதுங்க அதை ஏற்க மறுத்துவிட்டார் என்று கூறப்படுகிறது. 89ல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த சேபால ஆட்டிக்கல பிரித்தானியாவிற்கு சிறீலங்காவின் தூதுவராக நியமனம் பெற்றார். ஆட்டிக்கல, தனது முன்னைய பதவிக்கு மிகத் தோதான ஆள் ரணதுங்காதான் என்று சிபார்சு செய்திருந்தார்.

89ல் ரணதுங்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமனம் பெற்றபோது பிரேமதாசாவிற்கும், புலிகளுக்கும் இடையே இணக்கம் காணப்பட்டது. ரணதுங்க, சேபால ஆட்டிக்கலவைப் போலல்லாது மேற்படி இணக்கத்தோடு ஒத்துவராத உயர் அதிகாரிகளில் ஒருவராக இருந்தார். அவர் பின்னர் ரோகான் விஜயரட்ணாவிடம் சொன்னார், புலிகள் அநேகமாக ஆயுதங்களுக்குத் திரும்பி விடுவார்கள் என்று நான் நம்பினேன் என்று. அந்நாட்களில் ஆட்டிக்கல ஒரு நெகிழ்ச்சி மிக்க ராஜதந்திரி போல நடந்துகொண்டதாகக் கூறப்படுகிறது. அப்போது இராணுவத் தளபதியாக இருந்த கமில்டன் வணசிங்க அநேகமாக அமைதியான ஒரு பார்வையாளராக காணப்படுவாராம். ஆனால் ரணதுங்க தூய இராணுவக் கண்ணோட்டத்துடன் காணப்படுவாராம். இராணுவத்தின் நலன்களில் அவர் பிடிவாதமாயும், விட்டுக் கொடுப்புக்களின்றியும் நடந்து கொண்டதாகக் கூறப்படுகின்றது.



புலிகளுக்கு பிரேமதாச ஆயுதம் தந்ததாகக் கூறப்படுவதுபற்றி ரோகான் குணரட்ண, ரணதுங்காவிடம் விசாரித்தபோது, அது பிரேமதாசாவிற்கும் ஆட்டிக்கலவிற்கும் இடையிலான ஒரு ரகசியம் என்ற தொனிப்பட அவர் சொல்லியிருக்கிறார். புலிகளுக்கு ஆயுதம் தருவது சம்பந்தமாக விவாதிக்கப்பட்டது. ஆனால் புலிகளுக்கு நாம் ஆயுதம் தந்திருக்கிறோம் என்பது நாட்டில் எல்லோருக்கும் தெரியவந்தபோதுதான் எனக்கும் தெரியவந்தது என்று அவர் மேலும் சொல்லியிருக்கிறார்.

தனது துருப்புக்களின் வெற்றிகளைத் தவிர, வேறெதையும் பற்றிச் சிந்திக்காத ஒரு ஜெனரலாக இருந்ததற்கான பரிசு இப்போது அவருக்கு தரப்பட்டிருக்கிறது. அவரைப் பொறுத்தவரை புதிய பொறுப்பு எல்லாவிதங்களிலும் பதவி உயர்வுதான். ஓய்வற்ற, நிச்சயத் தன்மைகள் அற்ற, சலிப்பூட்டும் யுத்த அரங்கிலிருந்து அவர் விலகிச் செல்கிறார். ஓய்வுள்ள அங்கீகாரமுள்ள ஒரு இராஜதந்திரியாக சர்வதேச அரங்கை நோக்கிச் செல்கிறார்.

ரணதுங்காவின் இடத்திற்கு முன்னாள் வான்படைத் தளபதி வோல்டர் பெர்னாண்டோ நியமனம் பெற்றிருக்கிறார். பிரேமதாசா ரணதுங்காவை நாகரீகமான விதத்தில் யுத்த அரங்கிலிருந்தும் அகற்றியிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். எப்பொழுதும் இராணுவத்தினுடைய நலன்களோடேயே நிற்கும் ஒரு அங்கீகாரமுள்ள மூத்த தளபதியை அரங்கிலிருந்து அகற்றுவதன் மூலம் உருவாகியுள்ள முரண்பாடுகளைப் பேணுவது சுலபம் என்று பிரேமதாசா கருதுகின்றாரா? படை உயர் பீடத்தில் இந்த ஆண்டில் செய்யப்பட்ட இரண்டாவது மாற்றம் இது.



ஏற்கனவே கடந்த ஆண்டு முழுவதும் இராணுவ உயர் பீடத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள் தளபதிகளைக் குழுக்களாக்கியுள்ளன. யுத்த தந்திரோபாயங்களிலிருந்து ஆயுதக் கொள்வனவுகள் வரை தளபதிகள் ஒருவர் மற்றவரோடு ஒத்துப் போகாதவர்களாகக் காணப்படுகிறார்கள். திடீரென்று அதிகாரங்கள் தரப்படுவதும், பறிக்கப்படுவதும் தளபதிகளுக்கிடையில் கௌரவப் பிரச்சனைகளை வளர்த்துவிட்டிருக்கிறது. கூட்டுப் படைத் தளபதி கமில்டன் வணசிங்கவிற்கும் முப்படைத் தளபதிகளிற்கிடையில் உறவு நன்றாக இல்லை. குறிப்பாக கமில்ரனுக்கும், சிசில் வைத்தியரட்ணவுக்கும் இடையில் அநேகமாக ஒத்துப் போவதில்லை. சிசில் வைத்தியரட்ண, ரணதுங்காவுடன் ஒத்துப்போனவரில்லை. கடந்த செப்ரெம்பரில் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு இராணுவ முகாம்களை வாபஸ் பெறுமாறு ரணதுங்க கூறியபோது வைத்தியரத்தின பிடிவாதமாக மறுத்துவிட்டார். ரணதுங்க சொன்னபடி செய்வதானால், தான் பதவியிலிருந்து விலகப் போவதாகவும் அவர் எச்சரித்தார். ரணதுங்காவோடு, வைத்தியரத்தின எப்படி ஒத்துப் போவதில்லையோ, அப்படித்தான் ரணதுங்கவின் இடத்திற்கு இப்போது நியமிக்கப்பட்டுள்ள வோல்டர் பெர்னாண்டோவோடு, வான்படைத் தளபதி ரெறன்ஸ் குணவர்த்தன ஒத்துப் போவதில்லை. கடந்த வருடத்தின் இறுதியில் புதிதாக விமானங்களைக் கொள்வனவு செய்வதில் இந்த இரு வான்படைத்தளபதிகளும் கடுமையாக மோதிக் கொண்டார்கள்.

ரணதுங்க போன்ற இராணுவத்தின் நலன்களைப் பிடிவாதமாகப் பேணமுயல்கிற, மூத்த அங்கீகாரமுள்ள தளபதிகளை அவர்களிற்கு நோகாத விதத்தில் பதவியிலிருந்து அகற்றும் அதே சமயம், ரணதுங்கவைப் போன்ற முதிர்ச்சியும், அங்கீகாரமும் பெறாத, ஆனால் முரண்பாடுகளை ஏதோ ஒரு விதத்தில் தொடர்ந்தும் பேணக்கூடிய தளபதிகளை, பிரேமதாசா தனக்கு வசதியான இடங்களிற்கு நகர்த்தி வருகின்றார்.

இதை வேறுவழியில் கூறுவதாயின், தளபதிகளின் முரண்பாடுகளின் மீது பிரேமதாசா தனது நாற்காலியை ஆடாமல் வைத்திருக்கப் பார்க்கிறார் என்றும் கூறலாம்.

**(1-05-93 அன்று கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் மேதின ஊர்வலத்தில் நடந்த குண்டு வெடிப்பில் சிறீலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா உயிரிழப்பதற்கு முன்பு வெளியான கட்டுரை என்பது குறிப்பிடத்தக்கது).** ■

## நிகழ்வும்.....

**பிரேமதாசா இந்திய எதிர்ப்பாளர் எனக் கருதப்படுவதால் அவரது மரணத்தின் பின், சிறீலங்காவுடன் இணைந்து இந்தியா போராட்டத்திற்கு எதிராகச் செயற்படுமா? அண்மையில் இந்தியா -பிரேமதாசா உறவுகளில் வளர்ந்து வந்த முன்னேற்றம், இந்தியாவின் கடந்த காலச் செயற்பாடுகளில் இருந்து விடுதலைப் புலிகளுக்கு எதிரான தீவிரமும், மாறிவரும் தமிழ்நாட்டுச் சூழ்நிலைகளும், இந்தியாவின் உள்நாட்டுக் குழப்பமான சூழ்நிலைகளும் இணைந்த நிலைமைகளை ஆழ்ந்து நோக்குகையில், பிரேமதாசாவின் மரணம் தமிழீழம் மீதான புதிய வேகமான இந்தியப் பாய்ச்சலைக் கொண்டுவரும் என எண்ணத் தோன்றவில்லை.**

**இதேவேளை, சிறீலங்கா இராணுவம் அரசியல் தலைமையில் பிரயோகிக்கக்கூடிய அழுத்தம் முன்னரைவிட இனி அதிகமாக இருக்கும். ஆனால் இனப்பிரச்சனைக்கு இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதன் மூலமே தீர்வு காணமுடியும் என்ற சிங்கள பௌத்த இனவாதத்தின் உண்மையான நோக்கு பகிரங்கமாக மேலெழும்பலாம். ஆனால் இவ்வளவு காலமும் இராணுவ நடவடிக்கைகளுக்கு இருந்து வந்த 'பிரேமதாசா' என்ற போலிச் சமாதானத் திரை நீக்கப்பட்டதால் சிங்கள பௌத்தம் அம்மணமாக இருக்கும்.**

**முன்னைய காலங்களைப் போல சிறீலங்கா இராணுவம் தனது முழுமூச்சான இராணுவ நடவடிக்கைகளையே தொடர்ந்தும் மேற்கொள்ள முயலும். இந் இராணுவ நடவடிக்கைகளை எதிர்த்துப் போராட வேண்டிய யதார்த்த நிலைமையினை உணர்ந்து தமிழீழ மக்கள் தம்மை இயலக்கூடிய அளவுக்கு பலப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.**

**பிரேமதாசாவின் மரணம் ஏற்படுத்திய அரசியல், இராணுவ தாக்கங்கள் குறித்து சரியான மதிப்பீடுகளை மேற்கொள்ள இன்னும் சில காலம் தேவைப்படலாம். இம் மரணம் ஏற்படுத்திய தாக்கங்களை போராட்டத்திற்கு சாதகமான முறையில் பயன்படுத்துவதிலேயே எமது வெற்றி தங்கியுள்ளது.** ■

### தமிழ் பிராமி சாசனம் கந்தரோடையில் கண்டுபிடிப்பு

தமிழர் வரலாற்று பாரம்பரியம் தொடர்பாக, மூலாதாரங்களை தேடும்பணி ஒன்றின்போது கந்தரோடையில் பிராமி வடிவம் பொறிக்கப்பட்ட கறுப்பு -சிவப்பு மட்பாண்டத் துண்டுகள் சில யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா கண்டெடுத்துள்ளார். இதில் 'குணி' என்ற மிகவும் தெளிவான பிராமி வரி வடிவம் காணப்பட்டது. இது 'பிக்குணி' என்ற தமிழ்ப்பதத்தின் இறுதிப் பாகமாக கிடைத்துள்ள இச்சாசனம் அமையக்கூடும். ■

# பரிதாபத்திற்குரிய சிறீலங்கா வான்படை

மார்ச் 3-1993 சிறீலங்கா வான்படையின் நாற்பத்தேழாவது ஆரம்ப நாள்: காலை 9.30 மணிக்கு வடபகுதி வானில் இரண்டு குண்டு வீச்சு வானூர்திகள் வட்டமிட்டன. நாவாந்துறைக்கு அண்மித்த காக்கைத்தீவுக் கடற்கரைக் கிராமத்தில் குண்டுகளை வீசின. இரண்டு குண்டுகள் கடலுக்குள் வீழ்ந்தன. மற்றைய இரண்டு குண்டுகள் கடற்கரை ஒரத்து குடிசைகளில் வீழ்ந்தன. சிறீலங்கா வான்படையின் பிறந்த நாள் அன்று, அவர்களால் முடிந்ததெல்லாம் மார்க்கிரெட் வனிதா என்ற சிறு பெண்ணைக் கொன்றது மட்டும்தான்.

ஆகாய விமானங்களின் கண்டுபிடிப்பானது, அதுவரை இருந்த மரபுவழிப் போர்முறையில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்தது. ஆரம்பத்தில் எதிரி தரப்பிற்குள் குண்டுகளைக் கொண்டு சென்று போடுவதற்கும்



பாரதூட் துருப்பினரைத் தரையிறக்குவதற்குமாக பயன்பட்ட விமானங்கள் பிற்காலத்தில் எதிரி விமானங்களின் ஊடுருவலைத் தடுப்பதற்காக வான்சண்டைக்கு ஏற்றமாதிரி அமைக்கப்பட்டன.

இன்று நாடுகளிடையேயான படைப்பலம் விமானப்படையின் பலத்தை வைத்துத்தான் தீர்மானிக்கப்படுகிறது. உலக வான்படை வரலாற்றில் இதுவரை நாளும் சில நாடுகளின் வான்படையினர் வியக்கத்தக்க சாதனைகளைப் படைத்துள்ளார்கள். அவற்றில் சிலவற்றைக் கீழே பார்க்கலாம்.

இரண்டாம் உலக யுத்த காலத்தை ஒட்டித்தான் விமானப்படையின் பெரும் எடுப்பிலான நடவடிக்கைகள் ஆரம்பமாகின. உலக யுத்தத்தின் ஆரம்ப நாட்களின் ஜேர்மனிய அரசின் வெற்றிகளுக்கு ஜேர்மனியின் விமானப்படை பெரும் பங்கு வகித்தது. இதில் அதிசயம் என்னவென்றால், கிட்லரின் விமானப்படையினர் மின்னல் வேக யுத்த தந்திரத்தின்படி வானாதிக்கத்தை எப்போதும் தம்வசம் வைத்திருந்தார்கள்.

இலண்டன் மீதான தொடர் தாக்குதலின்போதும் பிரான்ஸ், கிறீக் தீவு, சோவியத் யூனியன் மீதான தாக்குதலின்போதும் ஜேர்மனி விமானப்படையினர் மிகவும் திறமையாகச் செயல்பட்டனர்.

சோவியத் உடனான போரை பீரங்கிகளின் முழக்கத்திற்கு முன்பாக ஜேர்மனிய போர் விமானங்கள்தான் ஆரம்பித்தன. வானாதிக்கத்தை வெல்வதற்குரிய அனைத்து வழிகளையும் ஜேர்மனிய விமானங்கள் பயன்படுத்தின. சண்டையின் முதலாவது நாளில் (1941 யூன் 22) சோவியத்தின் 800 விமானங்கள் தரையில் வைத்தே அழிக்கப்பட்டன. மேலும் 400 விமானங்கள் வானில் அழிக்கப்பட்டன. இதைவிட ஏராளமான விமானங்கள் சேதமாக்கப்பட்டன. அன்றுடன் போரின் வானாதிக்கம் ஜேர்மனியிடம் சென்றது.

அநேகமாக, மற்ற நாட்டு விமானப்படைகளின் சாதனைகளும் இரண்டாம் உலக யுத்தத்தில் நடந்தவைகளாகவே இருக்கின்றன. யப்பானிய வான்படையினரும் இவ்வுலக யுத்தத்தில் மிகப் பெரிய சாதனைகளைப் படைத்துள்ளார்கள். இந்நடவடிக்கைகளின்போது பெருமளவில் போர் விமானங்களை இழந்திருந்தாலும், யப்பானிய 'காமிகாத்சே' விமானிகள் தேடிச் செல்லும் இலக்குகள் பெரும்பாலும் தப்பவில்லை. அத்துடன் யப்பானிய கடற்படையின் பலம் முழுவதும் அவர்களின் விமானந் தாங்கிக் கப்பல்களில் இருந்த போர் விமானங்களிலேயே தங்கியிருந்தன.

யப்பானிய விமானப்படையினரின் நடவடிக்கைகளில் அமெரிக்காவின் 'பேர்ல்' துறைமுகத்தின் மீதான தாக்குதல் நடவடிக்கை இன்றும் வியக்கத்தக்கது.

1941 டிசம்பர் 7ல் கடல்வெளிக்காத காலை நேரம் பேர்ல் துறைமுகத்திலிருந்து 360 கி.மீற்றர் தூரத்தில் நின்ற 6 யப்பானிய விமானந்தாங்கிக் கப்பலில் இருந்து விமானங்கள் பேர்ல் துறைமுகத்தை நோக்கி எழுந்தன. துறைமுகமும் அதன் அருகிலிருந்த வான்படைத்தளமும் யப்பானிய விமானங்களின் கடும் தாக்குதலுக்கு ஆளாகின. விமான இரைச்சல் ஓய்ந்தபோது அப்பகுதி சிதைந்து சின்னாபின்னமாகி இருந்தது. விமானத்தளத்திலிருந்த 393 விமானங்களில் 272 அழிக்கப்பட்டிருந்தன. கடலில் நின்ற 9 பெரும் போர்க் கப்பலில் 4 மூழ்கடிக்கப்பட்டிருந்தன. 4 பெரும் சேதமடைந்திருந்தன. மற்றும் 50க்கும் மேற்பட்ட குரூசர்கள், நாசகாரிகள், சிறு



கப்பல்கள் ஆகியவையும் சேதமடைந்திருந்தன.

அங்கு வான் எதிர்ப்பு பாதுகாப்பு அமைப்பிலிருந்து 294 விமான எதிர்ப்புப் பீரங்கிகளால் யப்பானியர்களின் போர் விமானங்களைத்தான் வீழ்த்தமுடிந்தது. அமெரிக்கக் கடற்படையின் மீதான இந்நடவடிக்கை பசுபிக் கடற்பரப்பில், கடல் ஆதிக்கத்தை சில வருடங்களுக்கு யப்பானியரிடம் தந்தது. இதைவிட தீவுகளுக்கான சண்டைகளிலும் கப்பல்களுக்கிடையேயான சண்டைகளிலும் யப்பானிய 'புனிதக் காற்று' (காமி காட்சே) விமானி




கள் தீரத்துடன் செயற்பட்டிருக்கிறார்கள்.

இரண்டாம் உலக யுத்தத்தின் முழுவதும் ஜேர்மனிய, யப்பானிய விமானப்படையின் ஆதிக்கம் வானில் பெருமளவில் இருந்தது. ஆனால், நாட்கள் செல்லச் செல்ல நேச நாடுகளின் வளர்ச்சி பெரிதாக இருந்தது. பொருளாதார வளமும் தொழில் நுட்ப வளமும் போரில் புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்த நேசநாடுகளுக்கு வாய்ப்பாக இருந்தது. மற்றது, யப்பானிய, இத்தாலிய பொருளாதாரத்தாலும் போருக்கு ஈடுகொடுக்க முடியவில்லை.

இரண்டாம் உலக யுத்த காலத்தில் தம்மை நன்றாகப் பயன்படுத்திக் கொண்ட நேச அணியினரின் வெற்றிக்கு, விமானப்படையினரே காரணமாக இருந்தார்கள்.

ஜேர்மனிய ஆக்கிரமிப்பிலிருந்த பிரான்சின் 'நவர்மண்டி' தரையிறக்கம் நேச அணியினரால் பெரும் நடவடிக்கையாகக் கருதப்பட்டது. வான்வழியாக கடற்கரையைக் கடந்த எதிரிக்குள்ளே பாரசூட் படையினரை நேச அணியினர் இறக்கினர். இந்த வானிறக்கப்படையினர் பள்ளங்களை உடைத்து ஜேர்மனியர்களுக்கு உதவி வரக்கூடிய பாதைகளை காவல் காத்தனர். 23 விமானங்களைக் கைப்பற்றி மேலதிக படையினர் இறக்கப்பட உதவினர். இதே படையினர் கடல்வழி இறக்கத்திற்கும் பெரிதும் உதவினர். இத்தரையிறக்கத்திற்கு நேச அணியினரின் விமானப்படையினர் பெரும் பங்காற்றினார்கள். நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு 90 நாட்களுக்கு முன்பே நடவடிக்கைக் களத்தை நோக்கி குண்டு வீச்சு விமானங்கள் குண்டுகளை வீசத் தொடங்கிவிட்டன. இந்த நடவடிக்கையின் வெற்றிக்கு வானாதிக்கமே நேச அணியினருக்கு உதவியாக இருந்தது. இத்தாக்குதலில் பங்குபற்றிய பெருந்தொகையான போர் சண்டை கூண்டர் விமானங்களுக்கு எதிராக ஜேர்மனியின் 324 விமானங்களால் எதுவுமே செய்ய இயலவில்லை.

நேச அணியினரின் பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம் ஆகிய வெற்றிகளுக்கும் இவ்வணியினரின் மேலாதிக்கமே காரணமாக இருந்தது. சண்டையின் நீண்டகால ஈடுபாட்டில் ஜேர்மனி தனது வான்படையின் இழப்பை எதிரணிக்கு நிகராக ஈடு செய்யாமல் தவறியதும் இவ்வெற்றிகளுக்கு காரணமாக இருந்தது.



ஆனால், யப்பானியர்களுடனான தீவுகளுக்கான சமர்களில் நேசப் படையினர் இவ்வளவு இலகுவாக வெற்றிகளைக் காணவில்லை. யப்பானிய புனிதக் காற்று விமானிகள் நேச அணி விமானங்களிற்கு அவர்களின் இறுதிவரை ஆபத்தானவர்களாகவே இருந்தார்கள்.

'ஒேக்கினாவா' தீவை நேச அணியினர் கைப்பற்றிய நடவடிக்கையே இரண்டாம் உலகப் போரில் நடந்த பெரும் நடவடிக்கையாகக் கருதப்படுகிறது. யப்பானை விட எல்லா வழுவிலும் நேச அணியினர் விஞ்சி நின்றனர். ஆட்பலத்தில் ஆறு மடங்கு, விமானங்களைப் பொறுத்து மூன்று மடங்கு, கடற்படைச் சக்திகளில் பெருமளவு நேச அணியினர் அதிகமாக இருந்தனர்.

ஆனாலும், 82 நாட்கள் போரிட வேண்டியிருந்தது. நேச நாட்டு கடற்படையால் சுற்றி வளைக்கப்பட்டிருந்த தீவில் இருந்து யப்பானியர்கள் கடுமையாகப் போரிட்டார்கள். புனிதக் காற்று விமானிகள் பெரும் கப்பல்களை இலக்கு வைத்துத் தாக்கினார்கள். இதனால், போர் [illegible] நேச அணியினர் மாற்றி அமைக்க வேண்டியிருந்தது. அமெரிக்க விமானந் தாங்கி கப்பல்களில் இருந்த விமானங்கள், தங்கள் கப்பல்களைக் காப்பதற்காக [illegible] 'வான் திரை' ஒன்றை அமைக்கவேண்டியிருந்தது.

யப்பானிய விமானிகளின் முயற்சிகளால் நேச அணியினர் தீவிலிருந்து இறங்குவதை முறியடிக்க முடியவில்லை. ஏனெனில், இந்தச் சாதனைகளின் நவீனமின்மையால், பழைய எஞ்சின்களைக் கொண்ட விமானங்களை வைத்துக் கொண்டு அவர்களால் எதுவுமே செய்ய முடியவில்லை. ஆனாலும், 33 கப்பல்களை அவர்கள் மூழ்கடித்தார்கள். 370 கப்பல்கள் சேதமடைந்தன. 1000க்கும் மேற்பட்ட விமானங்களை வீழ்த்தினர். யப்பானிய 4200க்கும் கூடுதலான விமானங்களும் இச்சண்டையில் அழிந்தன. இழப்புகளுடனேயே ஒகினாவா, இயோ தீவுகளையும் அமெரிக்கப்படைகள் கைப்பற்றின.

ஜேர்மனியின் மீதான இந்நடவடிக்கையின்போது, நேசநாட்டு விமான அணிக்கு முன்பு ஜேர்மனிய வான்படை ஒரு கருத்தாகவே இருக்கவில்லை.

இவை அனைத்திலும் பார்க்க, இப்போரின்போது சோவியத் விமானப்படையின் சாதனைகள் அனைவராலும் வியக்கப்படுகின்றன. சோவியத் விமானிகளின் தேச பக்தியே இவ்வெற்றிகளுக்கான அடித்தளமாகிறது. போரில் காயப்பட்டு விழப்போகும் விமானத்தை எதிரியின் வாகன நோத்தின் மீது மோதவே ஒவ்வொரு விமானியும் விரும்பினான். தப்புவதை அவன் சிந்திக்கவில்லை.

ஸ்டாலின்கிராட், லெனின்கிராட் போர் முனைகளில் சோவியத் வான்படையினர் தீரமுடன் போரிட்டு இருந்தாலும் போரின் ஆரம்ப நாளில் (1941 யூன் 21) எதிரியிடம் இழந்துபோன வானாதிக்கத்தை சோவியத் விமானிகள் மீண்டும் 'கூர்ஸ்க்' சமரின்போதுதான் (1943 யூலை 5) கைப்பற்றினார்கள். அன்று சோவியத் வான்படையினர் வீரம் செறிந்த போர் ஒன்றை நடாத்தினார்கள். ஒவ்வொரு விமானியும் உயிரை மதியாது தீரத்துடன் போரிட்டான்.

இப்போரில்தான் வான்சண்டை ஒன்றில் 9 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்திய அற்புதமான சம்பவம் நடந்தது. [illegible] என்ற இந்த சோவியத் விமானியை அத்தேசம் முழுவதும் பாராட்டியது. இதில்தான் இரண்டு காலையும் இழந்த [illegible] எனும் சோவியத் விமானி 3 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தினான். அன்றைய தினம் வானாதிக்கத்தைக் கைப்பற்றிய சோவியத் விமானிகள் அதன் பின்பு போரின் இறுதிவரை அவ்வானாதிக்கத்தைத் [illegible] னர்.

இறுதியில், பேர்லினுக்கான சமரில் வியக்கத்தக்க தீரத்துடன் சோவியத் விமானிகள் செயற்பட்டார்கள். 14 நாட்களில் 1282 வான் சண்டைகளை நடாத்தி 1116 எதிரி விமானங்களை அவர்கள் சுட்டு வீழ்த்தினார்கள். இரண்டாம் உலக யுத்தத்திற்கு பிற்பட்ட காலத்திலும் பல்வேறு நாட்டு விமானப்படையினரால்

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# பிரேமதாசாவிற்குப் பின் சிறீலங்காவின் நிலை

## ■ B.B.C. வழங்கியிருந்த ஆய்வுரை

பிரேமதாசாவின் கொலை சிறீலங்காவில் ஒரு நீடித்த ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலையைத் தோற்றுவிக்கும்போல் தெரிகிறது. ஏனெனில், பிரேமதாசாவின் அரசு, மத்தியில் அனைத்து அதிகாரங்களையும் குவித்து வைத்திருந்த அமைப்பாக விளங்கியது. அனைத்து முடிவுகளும் ஜனாதிபதியாலும் அவரது ஆலோசகர் சிலராலுமே எடுக்கப்பட்டன. பிரேமதாசாவைத் தொடர்ந்து ஆளும் ஐ.தே. கட்சியின் தலைமையை ஏற்று வழி நடத்த ஒரு முறையான அரசியல் வாரிசு அங்கே கிடையாது. புதிய ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட D.B. விஜயதுங்க இதுவரை காலமும் தனியாகச் செயற்பட்டதில்லை. பிரேமதாசாவின் எண்ணங்களுக்கு ஆதரவு தரும் ஒருவராக மட்டுமே அவர் பிரதமர் பதவியிலிருந்து வந்தார். ஆளும் கட்சியில் பிளவுகள் உடனடியாக ஏற்படாது தடுக்க இவரது நியமனம் உதவலாம். ஆனால், கட்சியின் தலைமைப் பதவிக்கு பலர் போட்டியிடத்தான் போகிறார்கள். இந்தப் போட்டிகள் ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்காலத்தைப் பெரிதும் பாதிக்கக் கூடியவை.

இந்த சமயத்தில், ஐக்கிய தேசியக் கட்சிக்கு உள்ள ஒரே ஒரு ஆறுதல் எதிர்க்கட்சிகள் இருக்கும் கோலம்தான். சிறீலங்கா சுதந்திரக்கட்சியோ சிறிமாவைத் தொடர்ந்து அடுத்த தலைவராய் வருவது யார் என்ற பிரச்சனையில் பெரிதாய் பிளவு பட்டுக் கிடக்கின்றது. புதிதாய் உருவாகிவரும் ஐக்கிய ஜனநாயக தேசிய முன்னணியோ அதன் தலைவர் அத்துலத் முதலியின் இழப்பினால் ஏற்பட்ட அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை.

இரண்டு வார காலத்துள் அடுத்தடுத்து நடந்த இரு கொலைகளால் சிறீலங்கா அரசியல் மீண்டும் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. பிரேமதாசாவின் கைகளில் ஏராளமாய் அதிகாரங்கள் குவிந்திருந்தன. அந்தநிலை திடீரென்று மாறியுள்ள நிலையில் புதிய அதிகாரத்திற்குத் தனது கால்களை ஊன்ற சற்றுக் காலம் எடுக்கத்தான் செய்யும்.

இந்த நேரத்தில், இனி ஆயுதப் படையினர் எடுக்கப்போகும் நிலையும் உற்றுநோக்கத்தக்க ஒன்று. அரசியலில் ஆயுதப்படை நேரடியாக ஒருபோதும் தலையிட்டிருக்கவில்லை. கடந்த பத்து ஆண்டுகளில் இராணுவம் பெரியளவில் வளர்ந்துள்ளது. அத்துடன் அதன் செல்வாக்கும் அதிகரித்துள்ளது. தனது அதிகாரபலத்தை உணர்ந்துகொள்ளாத நிலையில் இராணுவத்தின் அழுத்தத்தைச் சமாளிக்க புதிய ஜனாதிபதி சிரமப்படத்தான் போகிறார்.

பிரேமதாசாவின் கொலைக்கு காரணமானவர்கள் யார் என்று இன்னமும் சரியாகக் கூறமுடியாதுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனாலும், வடக்கு-கிழக்குப் பகுதிகளில் புதிதாக தாக்குதல்களை ஆரம்பிக்கவும் அதனை நியாயப்படுத்தவும் சிறீலங்கா இராணுவத்தினர் விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்தவே விரும்புவார்கள்.

ஆனால், மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவுக்கோ பல எதிரிகள். கொழும்பு நகரில் இருக்கும் அரசியல் பிரமுகர்களில் இருந்து மீதியாக இருக்கும் J V Pயினர் வரை அவருக்கு எதிரிகள் உள்ளனர். கொலையைச் செய்தவர் யாரென்று முழுமையான விசாரணை ஒன்று நடைபெறப்போகிறது என்றாலும், இத்தகைய விசாரணையில் துப்பு முழுதாய்த் துலங்கிவிடுவதில்லை. ■

# கரம்பன் தேவாலயம் செல்ல குருமாருக்கு அனுமதி மறுப்பு

அண்மையில் தீவுப் பகுதிக்கு விஜயம் செய்திருந்த கத்தோலிக்க மதகுருமாரை, கரம்பன் செபஸ்தியார் ஆலயத்தினுள் பிரவேசிக்க ஈ.பி.டி.பி. இயக்கத்தினர் அனுமதிக்கவில்லை.

தேவாலயத்துள் வெடிகுண்டுகள் இருக்கலாம், உள்ளே செல்வது பாதுகாப்பில்லை என்று கூறியே அவர்கள் தங்களைத் தடுத்ததாக சம்பந்தப்பட்ட மதகுரு ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ் மறைமாவட்ட ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளாருடன் தீவுப்பகுதிக்கும், வலிகாமம் மேற்குப் பகுதிக்கும் மதகுருமார் குழுவினர் அண்மையில் விஜயம் செய்தனர்.

அந்தக் குழுவில் இடம்பெற்ற மதகுரு ஒருவர் அங்குள்ள நிலைமை பற்றித் தெரிவிக்கையில் :-

தீவுப் பகுதிகளில் உள்ள தேவாலயங்கள் கவனிப்பாரற்று பாழடைந்து கிடக்கின்றன. நாரந்தனையில் உள்ள சம்பேதுருவானவர் தேவாலயத்தில் வௌவால்கள் வாழ்கின்றன. எங்கும் புதர்கள் மண்டிக் கிடக்கின்றன. பாம்புகள் ஊர்ந்து திரிகின்றன.

ஊர்காவற்றுறைப் பக்கமாக கரம்பன் நோக்கிச் செல்லும் பாதையில், இருமருங்கிலும் கட்டடங்களின் அடையாளங்கள் ஏதுமே தென்படவில்லை. கரம்பன் தபாலகம் இருந்த இடமே தெரியவில்லை. கரம்பன், வேலணை, ஊர்காவற்றுறை பகுதிகளுக்கென ஒரே ஒரு பாடசாலை புங்குடுதீவில் உள்ளது.

இத்தப் பகுதிகளில் பெரும்பாலும் வயோதிபர்களே உள்ளனர். அவர்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் உறவினர்களைப் பிரிந்து வாழும் சோகத்தில் எம்மைக் கண்டு அவர்கள் கண்ணீர் சிந்தினர். அவர்களின் நிலைமை பார்க்கப் பரிதாபமாக இருந்தது என்றார். ■

## பிரேமதாசா ....

தோன்றும் என்றும் நான் எதிர்பார்க்கவில்லை. அடுத்து அரசியல் தலைமையோ இராணுவத் தலைமையோ சிங்கள தேசத்தின் பொறுப்பை எடுத்தபோதிலும் தமிழீழத்தைப் பொறுத்தவரை, ஏதும் அடிப்படையான மாற்றங்கள் அரசாங்கத்திடம் தென்படும் என்பதைக் கூறமுடியாதுள்ளது. இந்த நிலைமை ஒரு வேதனைக்குரிய விடயமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் -சமாதானத் தீர்வுக்கான முயற்சியைத் தொடர்ந்து ஆற்றிக் கொண்டிருப்பார்கள். யார் ஆட்சித் தலைமையை எடுத்தாலும் அவருடன் சமாதானத் தீர்வைக் கொண்டு வரமுடியுமா என்பதை ஆராய்வதும், நடைமுறைப்படுத்துவதும் விடுதலைப் புலிகளின் முக்கிய தந்திரோபாயச் செயல்பாடாக இருக்கும். அதேவேளை, விடுதலைப் புலிகள் தமிழீழ மக்களின் உயிர்ப்பாதுகாப்புக்கும், பொருளாதார வாழ்வுக்கும், தேசிய உரிமைக்குமான கவசமாகத் தொடர்ந்து செயற்படுவார்கள். இவற்றிற்கு குந்தகமாக இலங்கையின் புதிய தலைமை செயற்படாது என நம்புகின்றேன். அப்போதுதான் எல்லா மக்களுக்குமான எமது சமாதான முயற்சி வெற்றியைக் கொண்டுவரும் என்பது உறுதியானதும் மனப்பூர்வமானதுமான எனது நம்பிக்கையாகும்.

**(02-05-1993 அன்று இலண்டன் B.B.C. தமிழ்ச் சேவைக்கு விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பொறுப்பாளர் திரு. லோரன்ஸ் திலகர் அவர்கள் அளித்த பேட்டியிலிருந்து)** ■

## தமிழரின் பட்டி....

அதாவது, இவ் உணவுப் பொருட்களின் தடையால் ஏற்படும் பஞ்சத்தால் கிளர்ந்தெழும் மக்களின் நடவடிக்கை எல்லை மீறிச் சென்றுவிடவும் கூடும்.

உலகின் பல பாகங்களிலும் இவ்வாறான சூழ்நிலைகளின்போது கிளர்ந்தெழும் மக்களை அடக்குவதில் அரசாங்கங்கள் தோல்வியையே கண்டுள்ளன. இந்நிலையில் சிறீலங்கா அரசாங்கம் குடா நாட்டினுள் திட்டமிட்டு மேற்கொண்டுவரும் உணவுப் பஞ்சம் வடக்கு -கிழக்கில் நூலிழையில் தொங்கிக் கொண்டிருக்கும் அரச நிர்வாகத்திற்கு பெரும் நெருக்கடியை உருவாக்கும் என்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை. இவ்வாறான நெருக்கடிகள் சில கடந்த காலங்களிலும் அரச நிர்வாகத்திற்கு மக்களால் ஏற்படுத்தப்பட்டமைக்கான உதாரணங்களும் உண்டு. இந்நிலையில், மக்களைப் பட்டினி போட்டு அரசியல் சதுரங்கம் நடத்துவது அரசாங்கத்தின் நடவடிக்கை புத்திசாலித்தனமல்ல. ■

(ஈழநாதம்)

## உணவு விநி....

ண்ட இந்நடவடிக்கையானது யாழ். குடா நாட்டில் இன்று நிலவும் நெருக்கடிகளை உலகம் கண்டுகொள்வதையோ அன்றி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு உதவிகள் கிடைக்கப் பெறுவதையோ தடுப்பதற்கான திட்டமிட்ட நடவடிக்கையாகும். இதற்கிடையில் குடாநாட்டில் சேவையாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் மேல் சிறீலங்கா அரசு கண்காணிப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது. கூடவே கூட்டுப்படைத் தலைமையகத்திடம் அனுமதி பெற்றே சேவையாற்ற வேண்டுமென நிர்ப்பந்திக்கப்பட்டும் வருகின்றனர். பொருளாதாரத் தடையால் அரச சார்பற்ற நிறுவனங்களும் முழு உதவியும் அளிக்கமுடியாது தவிக்கின்றன.

### 1/3 பங்கு உணவு

குடாநாட்டுக்கு தேவையான உணவில் மூன்றில் ஒரு பங்கு உணவே கப்பல் மூலம் குடாநாட்டுக்கு அனுப்பப்பட்டு வருகின்றது என புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இதேவேளைகளில் கப்பலில் உணவு முழுவதையும் இறக்கவேண்டாமென கப்பல் கப்டனுக்கு திடீர் திடீரென உத்தரவுகளும் வழங்கப்படுகின்றனவாம்.

## தபால் தடை

வடபகுதிக்கான 'தபால் தடை'யையும் சிறீலங்கா விதித்துள்ளது. வெளிநாடுகளிலும், குடா நாட்டுக்கு வெளியேயும் உள்ள தமிழர்கள் தமது குடும்பங்களுக்கு அனுப்பும் பணஉதவியினை முடக்குவதற்கும், குடா நாட்டின் [illegible] மக்கள் கடிதம் மூலம் வெளியே அறிவிக்காது தடுப்பதற்கும் இத் தபால் தடையை அரசு விதித்துள்ளது. இவற்றைப் பார்க்கையில், தனது பொருளாதாரத் தடையையும் மீறி மக்கள் உயிர் வாழ்வதைக் கண்டு சிறீலங்கா அரசு குடாநாட்டுக்கான சகல தொடர்புகளையும் படிப்படியாக மூடுகிறது என்றே கூறத் தோன்றுகின்றது. இவற்றின்மூலம் மக்களை வதைத்தாவது தனது தீர்வைத் திணிக்க சிறீலங்கா பகீரதப்பிரயத்தனம் செய்து வருகிறது. ■

## தமிழ் நாடும்....

இந்த அரசியல் சித்து விளையாட்டை தமிழக மக்கள் அறிந்தே இருக்கிறார்கள்.

அதேநேரம் இந்த தொலைக்காட்சி இந்தி மொழித் திணிப்பை அ.தி.மு.க தலைவரும், முதல்வருமான செல்வி ஜெயலலிதா வேறொரு விதத்தில் பயன்படுத்தினார்.

அ.தி.மு.க. விற்கும், காங்கிரசுக்குமான உறவு முடிவடைந்து விட்டது என்னும் நிலையில் காங்கிரசாருக்கு எதிராக திராவிட உணர்வைத் தட்டி எழுப்ப இந்த அம்மையார் முயன்றார். இவ்வளவு நாட்களும் இனவுணர்வோ, திராவிட பற்றுணர்வோ இல்லாமல் காங்கிரஸ் கட்சியின் நெருங்கிய சகாவாக இருந்த செல்வி ஜெயலலிதா தமிழ் மக்களிடையே எழுந்த உணர்வில் தன் அரசியல் இராஜதந்திர காய் நகர்த்தலைச் செய்தார்.

தமிழக அரசு இந்த இந்தி மொழித் திணிப்பைக் கண்டித்ததும், காங்கிரசார் தமது பாரம்பரிய முறையுடன் பொங்கி எழுந்தனர். அ.தி.மு.க -காங்கிரஸ் உறவு மேலும் விரிசலடைந்தது.

ஆனாலும் அ.தி.மு.க.வின் 17 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக மத்தியில் பலமில்லாத காங்கிரஸ் கட்சி செல்வியின் காலில் விழவேண்டிய நிலையிலேயே இருக்கிறது. தனது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஜெயலலிதாவும் காங்கிரசை எதிர்பார்க்க வேண்டி உள்ளது.

இதனிடையே தந்தை பெரியாரின் சீடர்களில் ஒருவரும் அவரது கொள்கைகளை தொடர்ந்தும் கடைப்பிடிப்பதாகக் கூறிவருபவரும், 1938ல் கல்லூரிப் பருவத்திலேயே இந்தி மொழித் திணிப்பை எதிர்த்துப் போராடியவருமான திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதி அவர்கள் இந்தப் பிரச்சனையில் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் நடுவில் நின்று விழிக்கின்றார்.

'தென்றலைத் தொடாமல் அடிக்கடி தீயைத் தாண்டிய இந்தப் பெருந் தலைவர் இந்தமுறை முடிவெடுக்க முடியாமல் தீயிற்கு நடுவில் நிற்க வேண்டிய நிலையில் இருக்கிறார்.

இந்தத் தொலைக்காட்சி இந்தி மொழித் திணிப்பைக் கண்டித்து, மக்கள் எதிர்ப்பியக்கம் ஒன்றை நடாத்த பலமான கட்சி அமைப்புள்ள இந்தத் திராவிடத் தலைவரால் முடியும். ஆனால் இந்தப் 'பெரும் தலைவர்' இவ்விடயத்தில் முடிவெடுப்பதற்கு அ.தி.மு.க. -காங்கிரஸ் இடையேயான உறவு நிலையை நாடி பிடித்துப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்.

அக்கட்சிகளின் உறவு நிலை மீண்டும் பலப்படுமாக இருந்தால் மத்திய அரசின் தொலைக்காட்சி இந்தி மொழித் திணிப்பை எதிர்த்து கடுமையான குரல் கொடுக்க இந்தத் தலைவர் தயங்கப் போவதில்லை.

அப்படி இல்லாமல், காங்கிரஸ் -அ.தி.மு.க. உறவு முற்றுமுழுதாக முறிவடைந்து விடுமாக இருந்தால், இந்தத் திராவிடச் சிங்கம் காங்கிரஸ் கட்சியின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்காக தொண்டை வரை வந்த கண்டனக் குரலை சிறிய முனகலுடன் விழுங்கத் தயாராக இருக்கிறது.

இத்தகையதோர் நிலைதான்; அரசியல் சுயநலம்தான்; தமிழீழத்தின் தலைவர்களில் ஒருவரான கிட்டுவும் அவர்களது தோழர்களும் கடலில், வடஇந்திய ஆதிக்கப் பிடிக்குள் சிக்கி மரணத்திற்கு அருகில் நின்ற போது இந்தத் திராவிடத் தலைவர்களின் மௌனத்திற்குக் காரணமாக இருந்தது.

எது எப்படியோ, தமிழ் நாட்டுத் தமிழர்களை வழி நடாத்தும் தலைவர்களாக தற்போது இந்தத் 'தலைவர்களே' இருக்கிறார்கள் என்பது கவலைக்குரிய உண்மை. ■

## வடக்கில் வங்கி....

சிறீலங்கா தொடுத்த போரினால் அவற்றை இழந்தவர்கள் பலர். இவர்கள் கூட இன்று சிறிது சிறிதாகவேனும் தாம்பட்ட கடன்களைக் கட்ட முனைவதைக் காணக்கூடியதாக உள்ளது. பெற்ற கடன்கள் சீராக செலுத்தப்படும் நிலையிலேயே வங்கிகள் தொடர்ந்து கடன்கள் வழங்க முடியும் என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால், தவணை தப்பிய கடன்கள் இருப்பது மட்டும் கடன் வழங்கலுக்குத் தடையல்ல. தவணை தப்பிய கடன்பட்டவர்களுக்கே, மீண்டும் புதிய கடன்களை வங்கிகள் வழங்கக்கூடிய முறைகளை வங்கிகள் அறிமுகப்படுத்தியுள்ளன. இவை இன்றும் நடைமுறையிலும் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. கடன்களைப் பெற்று முறைகேடாகச் சிலர் நடப்பதனால் பலர் அவ்வசதிகளை பெறவியலாது இருப்பதுடன் எமது பிரதேசமும் பாதிப்படைகிறது என்பதும் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயம்.

இந்நிலையில் பலவித அச்சுறுத்தலுக்குமிடையில் துணிந்து நின்று எதையும் தாங்கிப் போராடுகின்ற எமது மக்களின் நலனில் சிறிதளவாவது கவனத்தை இவ்வதிகாரிகள் செலுத்த வேண்டும். எமது வைப்புக்கள் எமது பிரதேசத்திற்கென செலவிடப்பட வேண்டும். உண்மை நிலையை உணர வேண்டும். இதுவே இன்று இவ்வதிகாரிகள் இம்மக்களின் விடிவுக்குச் செய்யும் பேருதவியாகும். ■

U T O
211 Katherine Rd, London E6 1BU, UK
Tel/Fax: 081-470 6593
புதிய முகவரி

# நிகழ்வும் நினைவும்

- திலீபன் -

## பிரேமதாசாவின் மரணம் ஏற்படுத்திய தாக்கம் என்ன?

சிறீலங்காவின் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா குண்டு வெடிப்பு ஒன்றில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து சிறீலங்காவின் அரசியல் தலைமையில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டுள்ளதாக இலண்டன் BBC கருத்து வெளியிட்டுள்ளது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத் முதலி கொலை செய்யப்பட்டு ஒரு வார காலத்தில் பிரேமதாசாவும் கொல்லப்பட்டிருப்பது தென்னிலங்கை அரசியலில் ஒரு குழப்பமான நிலையினைத் தோற்றுவித்துள்ளது.

பிரேமதாசாவின் கொலைக்கு யார் காரணமாக இருந்திருப்பார்கள் என்பதில் வாதப்பிரதிவாதங்கள் பெரிதும் ஏற்படாமல், விடுதலைப் புலிகள் மீது சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. தற்கொலைப் பாணியில் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதனால் விடுதலைப் புலிகளே இதனைச் செய்திருப்பார்கள் என்ற அனுமானிப்புடனேயே சிறீலங்கா பொலிஸ் இத்தகைய குற்றச்சாட்டினைச் சுமத்தியுள்ளது. ஆனால் விடுதலைப் புலிகள் இக்குற்றச்சாட்டை ஆணித்தரமாக மறுத்ததுடன், இக்கொலைக்கு காரணமாக இருக்கக்கூடிய ஏனைய சாத்தியப்பாடுகளையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

பிரேமதாசாவின் மரணம் சிறீலங்காவின் அரசியல் வானில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களை இன்றைய நிகழ்வும் நினைவும் பகுதியில் வெளிப்படுத்தலாம் என நினைக்கின்றேன். நான் இந்த நிகழ்வும் நினைவும் பகுதியினை ஆரம்பிக்கும்போது குறிப்பிட்டதைப் போல, இன்றைய நிகழ்வும் நினைவும் பகுதியில் வெளியிட இருப்பதும் எனது தனிப்பட்ட கருத்தே என்பதனை வலியுறுத்த விரும்புகின்றேன்.

பிரேமதாசாவின் மரணம் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களை சிறீலங்கா, தமிழீழம் எனும் இரு தேசங்களின் நோக்கிலிருந்து பார்வையிடுவது பொருத்தம்.

சிறீலங்காவினைப் பொறுத்தவரையில் பிரேமதாசா ஒருவகையான சர்வாதிகாரியாகவே செயற்பட்டு வந்தார் என்பது இங்கு கவனத்திற்குரியது. பூரண அதிகாரங்களைத் தன்னகத்தே கொண்ட ஜனாதிபதியாக, பல்வேறு வகையான எதிர்ப்புக்களுக்கும் மத்தியிலும் அரச இயந்திரத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதில் அவர் வெற்றி கண்டுவந்தார். பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை அவரிடம் இருந்தது. அரசாங்கத்தினுள் அவரை எதிர்ப்பவர்கள் அனைவரும் புறந்தள்ளப்பட்டு அவரது விசுவாசிகள் முன்னணிக்கு கொண்டுவரப்பட்டனர். இந்த வகையில் அரசாங்கமும் அவரது பூரண கட்டுப்பாட்டினுள்ளேயே இருந்தது. நீதித்துறையும் ஏதோ ஒரு வகையில் பிரேமதாசாவின் செல்வாக்கிற்குட்பட்டிருந்தது. பிரேமதாசாவினை எதிர்க்கக்கூடிய சக்தியினைத் தன்னகத்தே கொண்டிருந்த பத்திரிகைத்துறை பயமுறுத்தல் ஊடாகவும், அழுத்தங்களின் ஊடாகவும் 'மெதுமை'ப்படுத்தப்பட்டது.

இதனால் ஏராளமான அரசியல் எதிரிகள் இருந்தபோதும் பிரேமதாசா தனது பிடியினைத் தளர்ந்து விடாமல் பேண முடிந்தது.

இச்சூழலில், பிரேமதாசா எனும் ஆளுமை மறைந்துவிட்டமை ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஒரு பதவிப் போட்டியினைத் தோற்றுவிக்கும். ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே பிரேமதாசா விசுவாசிகளுக்கும் பிரேமதாசா அதிருப்தியாளர்களுக்குமிடையே நடக்கவிருக்கும் பதவிப் போட்டி, ஐக்கிய தேசியக் கட்சியினை ஒரு ஸ்திரமான கட்சியாக தொடர்ந்து பேண உதவுமா? என்ற கேள்விக்குறியினையும் எழுப்புகின்றது.

இதேவேளை, பிரேமதாசாவுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறி புதிய கட்சியினை அமைத்துக் கொண்டவர்களை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைப்பதற்கான முயற்சிகள் நடைபெறுவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா இம்முயற்சியில் முன்னிற்பதாக அறியமுடிகின்றது. லலித் கொல்லப்பட்ட நிலையில், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவராகவுள்ள காமினி திசநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளக் கூடுமா? என்ற சந்தேகம் எழுப்பப்படுகின்றது. பிரேமதாசா பதவிக்கு வந்தபின்னர் திட்டமிட்டு முழுமையாக புறக்கணிக்கப்பட்ட காமினி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பினை ஏற்பதனை கட்சிக்குள் உள்ள பிரேமதாசா விசுவாசிகள் அனுமதிக்க மாட்டார்கள் என்ற கருத்து இங்கு புறக்கணிக்கக் கூடியதல்ல. இதனால் ஐக்கிய தேசியக் கட்சியினையும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியையும் இணைக்க எடுக்கும் முயற்சி நிச்சயமாக சுமுகமாக இருக்காது என்று நம்பலாம்.

இவ்வடிப்படைகளைக் கொண்டு நோக்கும்போது, முக்கியமான விடயங்களில் உறுதியான முடிவினை எடுக்கக்கூடிய அரசியல் தலைமைத்துவத்தினை சிறீலங்கா அரசு இழந்துள்ளது என்று கூறக்கூடிய நிலைமைகள் உள்ளன. சிறீலங்கா அரசாங்கத்திற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எதிராகச் செயற்படுபவர்களைத் திட்டமிட்டுப் பலவீனப்படுத்தும் அல்லது அழிக்கும் செயற்பாடுகளைச் செய்வதிலும் தற்போதைய ஆட்சியாளர்கள் முன்னைய பலத்தோடு செயற்படுவார்கள் எனக்கூற முடியாது.

இதனால் தென்னிலங்கையில், சிறீலங்கா அரசுக்கு எதிரான செயற்பாடுகள் புதிய வேகம் பெறலாம். "பிரேமதாசாவின் கொலை நான்கு வருட கொடிய ஆட்சியின் அறுவடை" என காமினி திசாநாயக்கா குறிப்பிட்டமையினையும், "பிரேமாவின் மரணத்தால் மக்கள் நிம்மதி அடைந்துள்ளனர்" என வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டமையினையும் இங்கு கவனத்திற் கொள்வது பொருத்தம். உண்மையில் வாசுதேவ நாணயக்காரவின் கூற்று 'மக்களின்' ஊடாக எதிர்க்கட்சியின் மனநிலையினை வெளிப்படுத்தும் ஒரு கூற்றாக அமைந்திருக்கக்கூடியது. மிகுந்த அக்கறையுடன் அரசுக்கெதிராகச் செயற்பட்டவர்கள் புதிய துணிச்சலுடன் அச் செயற்பாடுகளை மேற்கொள்ள முயல்வர். அதேநேரம் அவர்களது எதிர்ப்பு பிரேமதாசாவினை மையப்படுத்தியிருந்தமையால், அவரது மரணத்தின் பின் தாக்கம் மிகுந்த பிரச்சாரத்தினை இவர்களால் செய்யமுடியுமா? என்ற கேள்வியும் எழத்தான் செய்கின்றது.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

தென்னிலங்கையில், பிரேமதாசாவின் மறைவினூடாக ஏற்படக்கூடிய அரசியல் தளம்பல் நிலை பொருளாதார ரீதியிலும் தாக்கத்தினை ஏற்படுத்தலாம். முக்கியமாக ஒரு உள்நாட்டு அரசியல் ஸ்திரநிலை நிச்சயமற்ற சூழலில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உற்சாகம் கொடுக்கக்கூடியதாக இருக்காது.

ஒட்டு மொத்தமாக நோக்கின், பிரேமதாசாவின் மரணம் சிறீலங்காவில் உறுதியான ஒரு அரசியல் தலைமைப்பீடத்தினை இல்லாதொழித்துள்ளது எனலாம். நெருக்கடி நிலைக்கு உள்ளாகியிருக்கும் ஒரு நாட்டில் உறுதியற்ற தலைமைத்துவம் ஏற்படக்கூடிய நெருக்கடிகளே சிறீலங்காவில் பிரேமதாசாவின் மரணம் ஏற்படுத்திய தாக்கமாகும்.

பிரேமதாசாவின் மரணம் தமிழீழத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் என்ன? ஒரு அரசியல் தீர்வுக்கு இருந்த வாய்ப்பு பிரேமதாசாவின் மரணத்தினூடாக தவறவிடப்பட்டுள்ளதா? இந்திய சிறீலங்கா அரசுடன் இணைந்து தமிழீழத்திற்கெதிரான போரைப் பிரகடனப்படுத்துமா? என்ற கேள்விகள் தமிழீழ மக்கள் மத்தியில் எழுகின்றன.

உண்மையில், பிரேமதாசாவினால் தமிழீழ மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கக்கூடிய தீர்வு ஒன்றினை காணமுடியும் என்பது ஒரு மாயை என்றே கூறமுடியும். பிரேமதாசா தனது ஆட்சிக் காலத்தில் தமிழீழ மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும் என்பதில் இதய சுத்தியான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. 'ஈழம் தவிர எல்லாம் தருவேன்' என வாயளவில் கூறினாரேயன்றி, பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குக் கூட எத்தவிதமான ஒரு தீர்வுத் திட்டத்தினையும் பிரேமதாசா முன்வைக்கவில்லை. பிரேமதாசாவினால் மட்டுமன்றி எந்த ஒரு தென்னிலங்கைத் தமிழர்களாலும், தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வுத் திட்டத்தினை முன்வைத்து செயற்பட முடியாத அளவிற்கு அரசியல், இராணுவ நிலைமைகள் வளர்ச்சியடைந்து உள்ளன. எனவே பிரேமதாசாவின் இழப்பால் தமிழ் மக்களின் உரிமைகளை மீளப்பெறும் வாய்ப்பு தவறிவிட்டது எனக்கூற முடியாது.

தொடர்ச்சி 12ம் பக்கம் ....

### பரிதாபத்திற்குரிய...

பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. ஆனால், இவற்றின் சாதனைகளை வரையறுப்பது கடினமாகவே இருக்கிறது. அமெரிக்க வான்படையினர் வியட்நாமில் பல்வேறு சாதனைகளை செய்ததாகக் கூறினாலும், கிராமங்களையும் குடிமக்களையும் அழித்ததைத் தவிர வேறொன்றும் பெரிதாகச் செய்ததாக தகவல்கள் இல்லை. அப்படியே செய்திருந்தாலும், அங்கு ஏற்பட்ட ஒட்டுமொத்தமான தோல்வி உலங்குவானூர்திகளைக் கடலில் தள்ளிவிட்டு ஓடிவந்ததில்தான் நிற்கிறது. ஆப்கானில், சோவியத் வான்படையினரும் இதனைத்தான் செய்ததாகத் தகவல்கள் சொல்லுகின்றன.
லிபியா, கிரனடா, பனாமா மீதான அமெரிக்க நடவடிக்கைகள் சமவலுவற்ற தேசங்களினூடான போர் என்ற முறையில் கருத்தில் எடுக்கப்பட முடியாதவை. ஈராக்குடனான அமெரிக்கப் போர் மேற்குலக தொழில்நுட்பங்களை ஒன்றுதிரட்டிய பெருந்தொழில்நுட்ப இராணுவ நடவடிக்கை என்றபடியால் அதனையும் கருத்தில் எடுக்காது விடுவோம்.

இவற்றையெல்லாம் விட்டுப் பார்க்கும்போது, இஸ்ரேலிய வான்படைச் சாதனைகள் மெச்சத் தக்கவை. கடல்மட்டத்துடன் பறந்து எதிரிப் பிரதேசங்களுக்குள் ஊடுருவி இலக்குகளை பலமுறைதாக்கி அழித்ததில் இஸ்ரேலிய வான்படை வெற்றி கண்டுள்ளது. சிரியாவுடனான போரின் முதல் நாளிலே சிரியாவின் வான்படை நடவடிக்கைகளையே முறியடித்து போரின் வெற்றிக்கு இஸ்ரேலிய வான்படை வழிகோலியது.

இவர்களது 'என்டபே' விமான நிலையத் தாக்குதல் மிகவும் பிரபல்யம் வாய்ந்தது. இந்திய வான்படையினர் கூட 1979 ஆம் ஆண்டு பாகிஸ்தானுடனான போரில் பல சாதனைகளைப் புரிந்ததாக தன்னளவில் கூறப்படுகிறது. மிக இக்கட்டான சந்தர்ப்பங்களில் எல்லாம் திறமையாக செயற்பட்டதாக விமானப் படையினர் பாராட்டப்பட்டார்கள்.

இந்திய வான்படையினரின் அண்மைக்கால சாதனையாக 1989ல் தமிழீழத்தில் நடந்த தொகு சம்பவம் சொல்லப்படுகிறது. அதாவது, துப்பாக்கி ரவைகளால் சேதப்பட்ட MI8 உலங்கு வானூர்தி ஒன்று பறக்கமுடியாமல் நின்றது. ஆனால், அதன் எஞ்சின் இயங்கியது. அந்த வானூர்தியே வேறு வானூர்தி ஒன்றால் தூக்கிச் சென்றதை அல்லது கட்டி இழுத்துச் சென்றதை (ஆவடி வான்படைத்தளத்திற்கு) பெரும் சாதனையாக இந்திய வான்படையினர் வரையறுக்கின்றனர்.

இந்நாடுகளுடன் ஒப்பிடும்போது, சிறீலங்கா வான்படையின் 43 வருட வளர்ச்சி மிகவும் பரிதாபத்துக்குரியதொன்றாகவே இருக்கின்றது. சாதனை என்று கூறும்பொழுது குடிமக்களைக் கொன்றதைத் தவிர வேறெதுவும் இல்லை. தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்ற காலம் தொட்டு சிறீலங்கா வான்படையின் பங்களிப்பு போரில் இருக்கவே செய்தது. முகாம்களுக்குள் படையினர் முடக்கப்பட்டதும் வானூர்திகளின் தேவைகள் அதிகமாயின. சிறீலங்கா வான்படையினரும் சில சாதனைகளைச் செய்ய முயன்றனர். ஆனால், அவையெல்லாம் பரிதாபகாரமான தோல்வியிலேயே முடிந்தது. 1985 டிசம்பரில் சுதுமலையிலும், அரியாலையிலும் உலங்கு வானூர்திகளின் உதவியுடன் இறங்கிய படையினர் தோல்வியுடன் திரும்பியதை உதாரணமாகச் சொல்லலாம்.

போட்டியற்ற வான்பரப்பில் வீதக்கும் போர் விமானங்கள் பதியும் போது எப்போதும் அச்சத்துடனேயே பதிந்தன. பதியும் ஒவ்வொரு தடவையும் ஏதாவது ஒரு தோட்டா தம்மை இலக்கு வைக்கிறது என்ற உள்ளுணர்வு சிறீலங்காவின் விமானிகளுக்கு எப்போதுமே உள்ளது. அதனால்தான், பெரும் நம்பிக்கையோடு எதிர்பார்க்கப்பட்ட 'சுப்பர்சோனிக்' சண்டை விமானங்கள் சில பாடசாலைக் கட்டடங்களை இடித்ததோடு சரியாகப் போயுள்ளது. இதை விஞ்சி இந்த ஜெட் விமானங்களின் சாதனை சித்தன்கேணியில் குடிமக்கள் மீதான குண்டுவீச்சுடன் முடிகிறது.

42 வருடங்களுக்கு முன்பு ஒற்றை எஞ்சின் விமானத்துடன் ஆரம்பமான சிறீலங்கா வான்படை இன்று எம்.ஐ.8 உலங்குவானூர்திகள், புக்காரா, சுப்பர்சோனிக் சண்டை விமானங்கள் என்று பெருத்திருந்தாலும் அதன் சாதனைகளைவிட இழப்புக்களே அதிகமாக இருக்கிறது. 1990 யூனில் தொடங்கிய இரண்டாவது ஈழப்போரின் பின்பு சிங்கள வான்படை அதன் முதுகெலும்பு உடைந்து போகுமளவிற்கு அடி வாங்கி இருக்கிறது. போர் தொடங்கிய மூன்றாவது மாதம் 18-9-1990 ல் யாழ் கோட்டையில் 'மார்செட்டி' குண்டு வீச்சு விமானம் ஒன்று புலிகளால் வீழ்த்தப்பட்டதுடன் வான்படையின் அழிவுகள் ஆரம்பமானது. அதற்கு முன்பே பல இடங்களில் காயப்பட்டு பல வானூர்திகள் சேதமடைந்திருந்தாலும் அவற்றை இங்கு கருத்தில் எடுக்கத் தேவையில்லை. அதற்கு மறுவருடம் சிறீலங்காப் படையினரின் வன்னி விக்கிரம நடவடிக்கையின்போது (14-21 யூன் 1991) பெல் ரக வானூர்தி ஒன்று புலிகளால் வீழ்த்தப்பட்டது.

1992 ஐப் பொறுத்தவரை சிறீலங்கா வான்படைக்கு அழிவுகளின் ஆண்டாகவே இருக்கிறது. ஆனையிறவு வெளியில் Y-8 போக்குவரத்து விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதும், மட்டு களுபாரா நடவடிக்கையில் உலங்கு வானூர்தி ஒன்றை இழந்ததும் வான்படையினருக்குப் பெரும் இழப்பாக இருந்தது. என்றாலும் சீனக்குடா விமானத்தள குண்டு வெடிப்பு சிறீலங்கா வான்படையினருக்கு மேல் விழுந்த பேரிடியாக இருந்தது. பெருமளவு பணத்தைக் கொட்டி சிறீலங்கா வான்படை புதிய நவீன போர் விமானங்களால் வளர்க்கப்பட்டது. அதனடிப்படையில் இன்று 14,000 பேராகவும் வளர்ச்சி கண்டுள்ளது. ஆனாலும் வான்படையினரின் சாதனை, பி.பி.சி. யின் கருத்துப்படி, கற்றுக்குட்டித்தனமானது ... ஒன்றிலேயே முடிகிறது என்று கருதப்படுகிறது. ■




நாளை
விடியப் போகுது....
நடடா...
நல்ல நேரம் வருகுது...
நடடா... ராசா சிவலைக்காளை
நாளை விடியப் போகுது...
பொழுதுசாயும் நேரம் -
புலிகள் வாழும் தேசம்
U.T.O
T.C.C
T.C.C
L.T.T.E
T.C.C
Via MARIANO STABILE - 34
90139 PALERMO, ITALY
Tel / Fax: 091-611 3179